


நடைமுறைக்கேற்ற
நாகரீகம்
பரம்பரையாகக் குன்றின் மீது விளக்காகப் புகழுடன் விளங்கும் 'இன்டர்நேஷனல்' கடிகாரங்களில் ஸ்திரீகளுக்கென நடைமுறை நாகரீகத்துக்கேற்றபடி புதிய பாஷனில் கடிகாரங்களை பேவர்-லூபா கம்பெனியார் தயாரித்துள்ளனர். பேவர்-லூபா ஷோரூம்களிலோ அல்லது உங்கள் பேவர்-லூபா டீலரிடமோ பார்வையிடலாம். அல்லது I.W.C. காட்லாகிற்கு எழுதுங்கள்.
• மேலேயுள்ள படம்: No. M7/8292 5''' மூவ்மென்ட் 16 ஜுவெல், 18 காரட் குஷன் ஷேப், கோல்டு கேஸ், ஆப்டிக் கண்ணாடி, வெள்ளி வார்த்த டயல். ரூ. 648
IWC
• நடுவிலுள்ள படம்: No. 7777. 7¾''' மூவ்மென்ட் 17 ஜுவெல், எடுப்பான சதுர வடிவத்தில் 18 காரட் கோல்டு கேஸ், வெள்ளி வார்த்த டயல், பட்டு அல்லது தோல் வாருடன் ரூ. 628
• அடியிலுள்ள படம்: No. 7767. 7¾''' மூவ்மென்ட் 17 ஜுவல், கவர்ச்சியுள்ள 18 கா. கோல்டு கேஸ், வெள்ளி வார்த்த டயல் பட்டு அல்லது தோல் வாருடன் ரூ. 616
FAVRE-LEUBA
FAVRE-LEUBA
பேவர் - லூபா & கோ., லிட்., பம்பாய் & கல்கத்தா



மாசு படிந்த தோற்றத்துடனும் அடிக்கடி முகப் பருக்களினாலும் தோலில் தடிப்புகளுடனும் வாழ் நாள் முழுதும் அவள் அவதிப்பட வேண்டு மென்றிருந்ததா? ஆம், அவள் அப்படித்தான் நினைத்தாள். அதிகப் பணச் செலவில் செய்த சர்ம சிகிச்சைகளும், க்ரீம்களும், களிம்பு களும் நிரந்தரமான பலனை அளிக்க வில்லை. பின்னர்தான் அவளது உபாதைகளின் மூல காரணத்தைத் தாக்கிய "க்ருஷனை" நாடினள்......


அப்பழுக்கற்ற மேனி நிறத்தை யுடைய ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் உலகெங் கும் 'க்ருஷ'னுக்கு நன்றி செலுத்து கின்றனர். ரத்தத்திலுள்ள அசுத்தங் களே, தோலின் மங்கலான நிறத்திற் குக் காரணமாக அமையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் க்ருஷனிலுள்ள ஆறு விதமான லோக உப்புக்கள் அதி அற் புதத்தை விளைவிக்கின்றன. மந்த மடைந்த உறுப்புக்களிலுள் கழிக்கப் பட முடியாத தொல்லை தரும் விஷப் பொருள்கள் வெளியே தள்ளப் படுகின் றன. ரத்தம் சுத்திகரிக்கப்பட்டு ஆரோக்கியம் ததும்புகிறது. தோலின் மேலுள்ள மறுக்கள் நீக்கப் பட்டு இயற்கையாகவே உள்ள அழகிய தோற்றம் பெறுகிறது.

க்ருஷனுல் அடையப்பட்ட உட்புற சுத்தம் திரும்பி யளிப்பது சர்ம சௌந் தர்யம் மாத்திரமல்ல. அது வாழ்க்கை யில் ஆனந்தத்தையும் அளிக்கிறது. ஈரல், மூத்திரக்காய், குடல்கள் இவற்றை இயங்குமாறு ஆறு விதங் களில் தூண்டும் "க்ருஷ"னே தேக நலத்தையும் இயற்கை யழகையும் திரும்பப் பெற மிகச் சிறந்ததும் சிக்கன மான வழியாகும். க்ருஷனின் விலை ரூ. 1-10-0 தான். எல்லாக் கெமிஸ்டுக ளிடமும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

க்ருஷன் ஈ. கிரிபித் ஹ்யூஸ், கோ., லிட்., மான்செஸ்டர், இங்கி லாந்து அவர்களால் தயாரிக்கப்பட்டு கார் டீ கம்பெனி லிட்., பம்பாய், மத ராஸ், கல்கத்தா அவர்களால் விநியோகிக் கப் படு கின்றன.



நீங்களும் அந்த க்ருஷன் உணர்ச்சியைப் பெறலாம்!


1875
தி கடாவ் மில்ஸ்
75
வருஷங்களாக
ஒரே அதிகாரத்
தின் கீழ்
1950
கடாவ்
வாயில்
75 வருஷ உழைப்பின் ஒரு சின்னம்.
தி கடாவ் மில்ஸ், பைகுளா, பம்பாய் 27. ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்டு பியர், பம்பாய். ஜவுளிக்கடை: மூல்ஜி ஜேதா மார்க்கெட், கோவிந்த் செனக், பம்பாய் 2.
SISTA'S
KM(S) - 435 - D - TAMIL.

வேதனை யளிக்கும் நாட்கள்.....



ஏன் அனாஸின் மாத்திரைகளால் அவைகளை மறக்கடிக்கக் கூடாது? தலைவலி, சோர்வு, நரம்புப் புடைப்பு, அறுவருப்பு மற்றும் வேதனை யளிக்கும் உபத்ரவங்களையும் அனாஸின் விரைவிலும் மிகவும் சுகமாகவும் நீக்குகிறது. அனாஸின் நவீனப் பெயரில் ஆஸ்பிரினை வெளிப் பூச்சாகக் கொண்டது அல்ல. பெனாஸிடின் காப்பெய்ன், கொய்னா, அஸிடில் ஸலிஸிலிக் திராவகம் ஆகியவைகளைக் கொண்டு தயாரித்தது. அனாஸின் உட்கொண்டவுடன் கரைகிறது. பரிசிலனைகளால் சிறந்ததென்று ருசுவான அதன் அரிய சத்துக்கள் நரம்புப் பிடிப்புகளைத் தளர்த்தி உடலில் நல்ல உணர்ச்சியை உண்டாக்குகிறது. அனாஸின் தகுதி யுடையது, பாதுகாப்பளிப்பது, நம்பகமானது. வயிற்றில் எவ்வித கோளாறும் ஏற்படுத்தாது. ஹிருதயத்துக்கும் ஹானி விளைவிக்காது.

மாத்திரைகள் 14 கொண்ட குழாய்களிலும், 50 கொண்ட புட்டிகளிலும் முதல் சிகிச்சைக்கு வேண்டிய 2 கொண்ட பொட்டலங்களிலும் எங்கும் கிடைக்கும்.


உறுதியுடன் பயமின்றி உட்கொள்ளுங்கள்

ANACIN

TRADE MARK REGISTERED

TABLETS

அனாஸின்




இந்தியாவில் தயாரிப்பவர்கள்: ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்., பம்பாய், கல்கத்தா, சென்னை, டெல்லி
தயாரிக்க உரிமை அளித்தவர்கள்: ஒயிட்ஹால் பார்மகல் கம்பெனி, நியூ யார்க், யு. எஸ். ஏ.



கேசவர்த்தினி 14 அணா   ஷாம்பு 14 அணா - எங்கும் கிடைக்கும்

தென்னிந்திய ரஸாயனசாலை, கோயமுத்தூர்



மிக்க ஆரோக்யமான தோற்றம்........

மைசூர் ஜாஸ்மின் சோப் சாதாரணமாக உபயோகத்திற்குப் புதியதாக வந்துள்ள மற்றவகை சோப்புகளைப்போல் அல்ல. அதிலுள்ள உயர்ரக மூலிகைச் சத்துக்கள் அதிக நன்மையைப் பயப்பதுடன் ஆரோக்கியத்தையும் வசீகரத்தையும் நிச்சயம் அளிக்கின்றன. இன்றே ஒரு ஜாஸ்மின் சோப் வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

மைசூர் ஜாஸ்மின் சோப்

எங்கும் கிடைக்கும்

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி, பெங்களூர்



கல்கி பொருளடக்கம்

மலர் 9 | ஜூலை 16 | விக்ருதி
இதழ் 50 | | ஆடி 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

யுத்த உதவி!



கொரியா யுத்தத்துக்கு உதவி புரிய வேண்டும் என்று ஐ.நா. சபை கேட்டதற்கு பிலிப்பைன் நாடு கொப்பரை அல்லது தேங்காய் என்பன சப்ளை செய்வதாகக் கூறியது. — பத்திரிகைச் செய்தி
எனவே ஐ.நா. சபை ஆனந்தமாக அப்யங்க ஸ்நானம் செய்யலாம்.
பிறகு பர்மாவிடமிருந்து சாப்பாட்டுக்கு அரிசியும்
ஆஸ்திரேலியாவிடமிருந்து இராணுவ உடைகளும்
பிரிட்டனிடமிருந்து பிரசார நிபுணர் சர்ச்சிலும்
அரபு நாடுகளிடமிருந்து அவசரப் பிரயாணத்துக்கு ஒட்டகமும்
இந்தியாவினிடமிருந்து இருதய பூர்வமான ஆசீர்வாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
ஆனால் அமெரிக்காவினுடைய உதவியினால்தான் போர் முனைக்குப் போயாக வேண்டும்!
SHASTRY

[illegible] - பாரதியார்

கல்கி

மலர் 9 இதழ் 50

என்ன சேதி ?

குணக் குறைபாடு

இந்திய ஜாதியின் இயற்கைக் குணத்தில் பல மேம்பாடுகள் உண்டு. ஆனால் ஒரு பெருங் குறையும் உண்டு. தனித் தனியாக அறிவாளிகளும் மேதாவிகளும் நிர்வாகத் திறமை படைத்தவர்களும் இந்திய சமூகத்தில் அநேகர் இருக்கிறார்கள். வானத்தை வில்லாக வளைப்பவர்களும் மணலைக் கயிறாகத் திரிப்பவர்களும் மலையை விழுங்கி ஏப்பம் விடுகிறவர்களும் பலர் இருக்கிறார்கள். ஆனால் நாலு பேர் சேர்ந்து ஒரு காரியத்தைத் தொடர்ந்து நடத்துவதென்பது நம்மால் முடியாத காரியம். நாலு பேர் ஒரு காரியத்தைத் தடபுடலாக மேள தாளம் கொட்டிக் கொண்டு ஆரம்பிப்பார்கள். ஒரு வருஷத்துக்குள்ளே அநேகமாகச் சண்டை போட்டுக்கொண்டு பிரிவார்கள். சில முயற்சிகள் ஆரம்பத்திலேயே வெற்றியைக் கொடுக்கும். வெற்றி கிட்டியதும் போட்டியும் பொறாமையும் வந்து விடும். சில முயற்சிகள் ஆரம்பத்தில் பல கஷ்டங்களுக்கும் தோல்விகளுக்கும் ஆளாக வேண்டியிருக்கும். பொறுமையுடன் முயன்றால் பின்னால் தக்க வெற்றியைக் கொடுக்கும். அதுவரையில் பொறுமையுடனிருப்பது யார்? இடையூறுகள் எதிர்ப்பட்டவுடனேயே "நீ காரணம்" "நீதான் காரணம்" என்று சண்டை போட்டுக் கொள்வார்கள். கோர்ட்டுக்குப் போவதிலும் ரிஸீவர் நியமிப்பதிலும் வந்து முடியும்.

ஆங்கிலேயர் உயர்வு


மேற்கூறிய இந்தியப் பண்புக்கு நேர் மாறான பண்பை மேனாட்டாரிடம்—மேனாட்டிலும் முக்கியமாகச் சில ஜாதியாரிடம்—காணலாம். இங்கிலாந்தில் எந்தப் பெரிய வியாபாரம் அல்லது தொழிலையும் பலர் சேர்ந்து கூட்டுறவு முறையில் ஆரம்பிப்பார்கள். லிமிடெட் கம்பெனி ஸ்தாபிப்பார்கள். நஷ்டம் வந்தால் பலருக்கும் பிரிந்து போய்விடும்; ஒருவரும் அடியோடு அழிந்து போக மாட்டார்கள். லாபம் வந்தால் அதில் பலரும் பங்கு பெறுவார்கள். ஆகையால் மற்றவர்களின் பொறாமையும் துவேஷமும் வேலை செய்ய அதிக வாய்ப்பு ஏற்படாது. ஆங்கில ஜாதியார் அதிகமாகக் குடியேறியுள்ள அமெரிக்காவிலும் இப்படியேதான். இந்தக் குணநலம் காரணமாகவே ஆங்கில ஜாதிக்கு எவ்வளவு மகத்தான வெளி அபாயங்கள் நேர்ந்த போதிலும் இன்று வரையில் அந்த ஜாதி உலகத்தில் தலை தூக்கி நின்று வருகிறது.

கூட்டுறவு இயக்கம்

மேனாட்டில் ஸ்வீடன், நார்வே, டென்மார்க் முதலிய சில தேசங்களில் மக்களின் ஒத்துழைப்பு முயற்சிகள் தலை சிறந்த பெருமை வாய்ந்திருக்கின்றன. மேற்படி நாடுகளில் கூட்டுறவு இயக்கம் மகத்தான வெற்றி அடைந்திருக்கிறது. எல்லாவித வியாபாரங்களும் கைத்தொழில்களும் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகவே மேற்படி நாடுகளில் நடைபெறுகின்றன. ஆகையால் தேசிய வருமானம் ஏறக்குறைய சம அளவாக ஜனங்களுக்குள் பிரிக்கப்படுகிறது. போட்டி கிடையாது, பொறாமை கிடையாது, ஒருவரை யொருவர் ஏமாற்றுவது கிடையாது. பக்கத்திலே பிரம்மாண்டமான ருஷியா தேசம் இருந்தும் மேற்படி நாடுகளில் கம்யூனிஸத்தின் பயங்கரங்களுக்கு இடம் கிடையாது. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் அந்த நாட்டு மக்கள் பெறும் ஒத்துழைப்புப் பயிற்சி மற்ற எல்லாத் துறைகளுக்கும் பயன்பட்டு ஜாதியை மேன்மையுறச் செய்கிறது.

இந்தியாவுக்கும் தேவை

இந்தியா தேசத்தில் கூட்டுறவு இயக்கத்துக்குத் தேவை அதிகம் உண்டு என்று அறிஞர்கள் பலரும் சொல்லி யிருக்



சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலை

கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பித்து நடத்தப் பல முயற்சிகள் தொடங்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் அவை அவ்வளவாகப் பயன் தரவில்லை. இந்திய ஜாதியின் குணத்தில் உள்ள குறைபாடும் மற்றும் பல காரணங்களும் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறத் தடைகளாயிருந்தன. கடன் வாங்குவதற்கு ஒரு சாதனமாகவே கருதிச் சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்தார்கள். அதிலும் 'நிர்வாகிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் கடனைக் கொடுத்து விட்டார்கள்' என்ற புகார்கள் எழுந்தன. வேறு சில இடங்களில் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் சங்கங்களின் பணத்தைக் கையாடி விட்டதாகக் கூறப்பட்டது. ஆகவே பொது ஜனங்களிடம் தக்க ஆதரவு கூட்டுறவு இயக்கத்துக்கு ஏற்படவில்லை. இதையெல்லாம் பார்த்த கூட்டுறவு இயக்க நிபுணர்கள் சிலர் "இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறுவது துர்லபம்" என்ற அபிப்பிராயத்தையும் தெரிவித்து விட்டார்கள்.

நம்பிக்கைக்கு இடம்

ஆனால் அப்படி அடியோடு நிராசை அடைவதற்கு எதிராகச் சிற்சில நல்ல உதாரணங்கள் கூட்டுறவு முயற்சியில் ஆங்காங்கு ஏற்பட்டு வந்தன. சென்ற ஐந்தாறு வருஷத்தில் கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் பெரிதும் அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறது. விவசாயிகளுக்கு உதவுவது, பண்டகசாலை அமைப்பது, வீடு கட்டுவது, பால் பண்ணை நடத்துவது முதலிய பல துறைகளில் கூட்டுறவு இயக்கம் பரவி வருகிறது. சென்ற 1949-ம் வருஷத்தில் சென்னை மாகாணத்தில் மொத்தம் 20,796 கூட்டுறவுச் சங்கங்கள் வேலை செய்தன 28 லட்சம் அங்கத்தினர்கள் இருந்தார்கள். 71 கோடி ரூபாய் மூலதனம் உபயோகிக்கப்பட்டது. 1948-ம் வருஷத்தைக் காட்டிலும் 1949-ல் சங்கங்களின் தொகை, அங்கத்தினர் தொகை, மூலதனம்—எல்லாவற்றிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது.—இதையெல்லாம் சென்னை சர்க்கார் அறிக்கையிலிருந்து அறிந்து மகிழ்கிறோம். கூட்டுறவு இயக்கம் பரவி அபிவிருத்தியடைவதின் மூலம் இந்திய மக்களின் குணத்திலுள்ள குறைபாடு நீங்கி விடலாம் என்ற நம்பிக்கையும் உண்டாகிறது. எந்தக்காரியத்திலும் பலர் சேர்ந்து ஒத்துழைத்துப் பரஸ்பரம் நம்பிக்கை வைத்து வேலை செய்யும் சக்தியை இந்திய ஜாதி பெற்றுவிட்டால், இந்தியா அடையக் கூடிய மேன்மைக்கு எல்லை ஏது?

ஒரு நல்ல உதாரணம்

கூட்டுறவு இயக்கம் பொதுவாக அபிவிருத்தியடைந்து வருகிறது என்று சர்க்கார் அறிக்கை கூறுவது ஒருபுறம் இருக்க, அந்த அபிவிருத்திக்கு ஒரு நல்ல உதாரணமும் நமக்குக் கிடைத்திருக்கிறது. தஞ்சை ஜில்லா பாபநாசம் தாலூக்காவைச் சேர்ந்த சந்திரசேகரபுரம் என்னும் கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கூட்டுறவுப் பண்டகசாலையின் அறிக்கையில் அதன் ஐந்து வருஷத்துச் சரித்திரத்தைப் படிக்கும்போது கூட்டுறவு இயக்கத்தில் இது ஒரு அற்புதம் என்றே சொல்லத் தோன்றுகிறது. இந்தப் பண்டகசாலையின் மூலம் பதினைந்து கிராமங்கள் பலன் அடைந்து வருகின்றன. 1945-ல் மூவாயிரம் ரூபாய் மூலதனத்துடன் ஆரம்பித்தார்கள். இப்போது மூலதனம் பதினேழாயிரம் ரூபாய். இவ்வளவும் சங்கத்தின் அங்கத்தினர் கொடுத்த பங்குத் தொகைதான். ஒரு பங்கின் விலை ஐந்து ரூபாய். ஒரு அங்கத்தினர் ஐந்நூறு ரூபாய்க்கு மேல் பங்கு எடுக்க முடியாது. ஐந்து ரூபாய் அங்கத்தினருக்கும் ஒரு வோட்டுத்தான். ஐந்நூறு ரூபாய் அங்கத்தினருக்கும் ஒரு வோட்டுத்தான். ஆரம்பித்தபோது 137 அங்கத்தினர் இருந்தார்கள். இப்போது 600 அங்கத்தினர் இருக்கிறார்கள். 1945-ல் இந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையில் ஒரு லட்சம் ரூபாய்க்குச் சாமான் விற்பனையாயிற்று. 1949-ல் ஐந்து லட்சத்துக்கு விற்பனையாயிற்று. சென்ற வருஷத்தில் ரூ. 8784 லாபம் கிடைத்தது. கையிருப்பு சேம நிதியில் ரூ. 20,000 வரையில் சேர்க்

இருக்கிறது. பங்குப் பணத்தைத் தவிர வியாபாரத்துக்கு அதிக மூலதனம் தேவையாயிருந்தால் சர்க்காரிடம் கடனுக்குப் போவதில்லை. அங்கத்தினரே கடன் கொடுத்து உதவுகிறார்கள். அங்கத்தினர் ஐம்பதினாயிரம் ரூபாய் 'பிக்ஸட் டெபாஸிட்'டில் கொடுத்திருக்கிறார்கள். பண்டகசாலை இப்போது இருந்துவரும் அழகான கட்டிடத்தை ரூ. 35,000-க்குச் சொந்தமாக வாங்கிவிடச் சங்கம் தீர்மானித்திருக்கிறது. வருஷத்துக்கு ரூ. 5000 வீதம் ஏழு தவணையில் கொடுத்து வாங்கப்போகிறது. இந்தப் பண்டகசாலை இருப்பதின் காரணமாக அக்கம் பக்கத்துக் கிராம ஜனங்கள் எல்லாருக்கும் எல்லாவித சாமான்களும் நியாயமான விலைக்குக் கிடைத்து வருகின்றன. ஆகையால் இந்தப் பக்கத்துக் கிராமங்களில் 'கறுப்பு மார்க்கெட்'டுக்கு இடமே கிடையாது. தஞ்சாவூர் ஜில்லாவில் பல கிராமப் பிரதேசங்களில் கம்யூனிஸ்டு பயங்கரங்கள் நிகழ்ந்தனவல்லவா? இந்தப் பக்கத்தில் மட்டும் அந்த இயக்கம் தலை காட்டவில்லை! மிராசுதார்கள்—குடியானவர்கள்—ஹரிஜனங்கள் அனைவரும் பரஸ்பரம் துவேஷம் இன்றி அன்யோன்யமாக வாழ்ந்து வருகின்றனர். விவசாயிகளுக்குத் தேவையான சீமை ஓடு, வண்டிக்கட்டு, இரும்பு சாமான்கள், துத்தநாகத் தகடு முதலியவையும் விற்கத் தொடங்கியிருக்கிறார்கள். இவ்வளவு காரியங்களைச் சாதித்திருக்கும் சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டக சாலையையும் அதன் நிர்வாகிகளையும் பாராட்டி வாழ்த்துகிறோம். மேலும் மேலும் இப்பண்டகசாலை அபிவிருத்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

விவசாயிகள் மகாநாடு

சென்னையில் ஸ்ரீ சாமியப்ப முதலியாரின் தலைமையில் விவசாயிகளின் மகாநாடு கூடிக் கலைந்தது. மகா நாட்டில் மிராசுதார்கள்—பண்ணையார்கள்—நிலச்சுவான்தார்கள் என்று பலவிதமாக அழைக்கப்படும் நிலச் சொந்தக்காரர்களின் கட்சி எடுத்துப் பேசப்பட்டது. அதையொட்டிய தீர்மானங்களும் செய்யப்பட்டன. மொத்தத்தில் சாராம்சம் என்னவென்றால், நில உரிமை பாத்தியதை அதாவது ரயத்துவாரி முறை இப்போது உள்ளபடியே எப்போதும் இருக்க வேண்டும்—ஒருவித மாறுதலும் கூடாது என்பதுதான். உலகம் முழுவதும் மாறிக்கொண்டிருக்கிறது. நாட்டில் பல துறைகளில் பல ஏற்பாடுகள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. ஆனால் மிராசுதார்—பண்ணையாள் முறை மட்டும் இப்போதுள்ளபடியே எப்போதும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் பெருந் தவறு செய்கிறார்கள். நெருப்புக்கோழி தன் தலையை மணலுக்குள் விட்டுக்கொண்டு தன்னை வேட்டைக்காரர்கள் பார்க்க மாட்டார்கள் என்று நினைத்துக் கொள்ளுமாம்! அது மாதிரிதான் நிலச்சுவான்தார்களும் நடந்து கொள்ளுகிறார்கள். இவர்கள் எவ்வளவு தடை செய்தாலும் மாறுதல்கள் ஏற்பட்டே தீரும். அந்த மாறுதல்கள் நல்ல முறையில் நிகழவேண்டும் என்று எண்ணி அதற்காக வேலை செய்வதே அறிவுடைமை. நம்முடைய நாட்டு விவசாயத்தைப் பற்றி ஒன்றுமே அறியாத ஸ்ரீ குமரப்பாவைத் தலைவராகக் கொண்ட கமிட்டி ஏதேதோ அபத்தமான சிபார்சுகளைச் செய்திருக்கிறது. இதனால் யாருடைய சொத்துக்களையும் கேள்வி முறையின்றிப் பறிமுதல் செய்யலாம் என்ற பீதி உண்டாகியிருக்கிறது. இந்தப் பீதி முற்றும் அநாவசியம். ஏனெனில், இந்திய அரசியல் அமைப்பின் கீழ் சொத்து பாத்தியதை ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நில உரிமை முறையில் ஒரு மாறுதலும் வேண்டாம் என்று சொல்வது நாளைக்கு வரப் போவதை அறியா

இந்தியன் பாங்கு ஹெட் அக்கௌண்டெண்ட் ஸ்ரீ ஏ. கே. பிரபு அவர்களின் குமாரிகளான மிருதுளா—சவிதாவின் நடன அரங்கேற்றம் ஜூன் மீ 8வ. மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபையில் சிறப்பாக நடைபெற்றது. அரங்கேற்றத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீ கே. பி. லக்ஷ்மண ராவ் அவர்கள் குழந்தைகளின் நடனத்தை மிகவும் பாராட்டினர்.



○●○

மல் பேசும் அபத்தப் பேச்சு. விவசாயத்தில் கூட்டுறவு முறையைப் புகுத்தினால், யாருக்கும் கஷ்ட நஷ்ட மில்லாமல், குடியானவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யலாம். கூட்டுறவு முறையினாலேயே நம்முடைய விவசாயத்தைக் காப்பாற்றிப் பல துறைகளிலும் அபிவிருத்தி செய்ய முடியும்.

ஸோஷலிஸ்ட் மகாநாடு

சென்னையில் சென்ற வாரத்தில் அகில இந்திய ஸோஷலிஸ்டுகளின் மகாநாடு நடைபெற்று முடிந்தது. இந்த மகாநாடு அவ்வளவாக பொது மக்களிடையே உற்சாகத்தை உண்டாக்கவில்லை. பொது மக்களின் கவனத்தையே கவரவில்லை என்று சொல்லலாம். இதற்கு முக்கிய காரணம் அந்தக் கட்சியில் மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றுள்ள மாபெருந்தலைவர் யாரும் இல்லாமையே யாகும். ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயண் ஒருவருக்கு மக்களிடையே மதிப்பு உண்டு. ஆனால் அவர் பொதுவாழ்க்கையில் வேலை செய்து பெரிதும் களைத்துப் போயிருக்கிறார் என்று தெரிகிறது. ஸ்ரீ மேஹர் அலி காலமாகிவிட்டார். ஸ்ரீ அச்சுத் பட்டவர்த்தன் விலகிக் கொண்டார். ஆச்சாரிய நரேந்திர தேவ் நோய் வாய்ப் பட்டிருக்கிறார். ஸ்ரீமதி அருணா ஆஸப் அலி ஸோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரா என்பதே சந்தேகத்தில் வந்து விட்டது. சென்னையில் பிரபலமான யாரும் கட்சியில் ஈடுபடவில்லை. ஆகவே மகாநாடு சுமாரான—வெகு சுமாரான—முறையிலேயே நடந்தது. இதிலிருந்து ஸோஷலிஸ்ட் கொள்கைக்கு மக்களிடையே செல்வாக்கில்லை என்று நினைக்கக்கூடாது. காங்கிரஸ் கட்சியே சோஷலிஸ்ட் இலட்சியங்களை நிறைவேற்றி வைக்கும் என்று பொதுமக்கள் இன்னமும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை பொய்யானால் சோஷலிஸ்ட் கட்சிக்குப் பலம் ஏற்படும். இங்கிலாந்தில் தொழிற் கட்சியார் எத்தனையோ வருஷ காலம் பார்லிமெண்டில் மிகச் சிறுபான்மையாக இருந்து போராடி வந்தனர். ஆனால் இன்று அங்கு ஆட்சி நடத்தி வருகிறார்கள். கன்ஸர்வேடிவ் கட்சியாரின் தவறுகள் பிரிட்டிஷ் தொழிற் கட்சிக்குப் பலம் அளித்தன. அது போலவே இந்தியாவிலும் காங்கிரஸ்காரர்கள் செய்யும் தவறுகள் அதிகமாகிக் கொண்டே போனால் தொழிற் கட்சிக்கு வருங்காலத்தில் பலம் ஏற்படக்கூடும். அதோடு தொழிற்கட்சியை நடத்துவதற்குத் தீரர்களான புதிய தலைவர்கள் முன்வர வேண்டும்.

பிரளய மேகங்கள் குமுறுகின்றன!

கொரியா யுத்தம் கோரமான கட்டத்தை அடைந்து வருகிறது.

வடக்கு கொரியாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நாற்பத்தைந்து நாடுகளுக்கு மேல் கச்சை கட்டி வருகின்றன.

கொரியா போர் முனைக்கு அமெரிக்காவிலிருந்தும் மற்றும் பல நாடுகளிலிருந்தும் கப்பல்களிலும் விமானங்களிலும் பல வகையான போர்த் தளவாடங்கள் பறக்கின்றன.

மேற்படி போர் முனையில் ஐக்கிய நாடுகள் சபையினுடைய நீலக்கொடி காட்சியளிக்கிறது. யுத்தத்தில் உலக மகா சபை நேரடியாக ஈடுபட்டிருப்பது இதுதான் முதல் தடவையாகும்.

போர்க் கப்பல்களை வெகு துரிதமாக நிர்மாணிக்கும்படி அமெரிக்கா சர்க்கார் தங்கள் நாட்டில் உள்ள முந்நூறு பிரபல கப்பல் கம்பெனிகளுக்கு அவசரக் கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள்.

அமெரிக்க இராணுவச் செலவுக்காக ஆயிரத்து ஐந்நூறு கோடி டாலர் போதாது என்றும், கொரியா யுத்தத்தை முன்னிட்டு இன்னும் பல கோடி டாலர் அதிகமாக வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் ஜனப்பிரதிநிதி சபையிடம் முறையிட்டுக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்.

வடக்கு கொரியாவுக்குப் பிரசாரத்திலிருந்து போர்த் தளவாடங்கள் வரையில் ருஷ்யா எல்லா உதவியும் செய்ய முற்பட்டிருப்பதுடன், அதன் அதிகாரத்திலுள்ள மற்ற கேந்திர ஸ்தானங்களிலும் சாரி சாரியாகத் துருப்புகளைக் கொண்டு போய்க் குவித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறாக, மற்றொரு உலக மகா யுத்தத்துக்குப் பூர்வாங்கமான எல்லா நடவடிக்கைகளும் வெகு ஜரூராக நிகழ்ந்து வருகின்றன.

* * *

சில தினங்களுக்கு முன் சுமார் ஐம்பதாயிரம் சதுர மைல்களாக இருந்த வடக்கு கொரியாவின் விஸ்தீரணம் இப்போது அறுபத்தையாயிரம் சதுரமைல்களுக்கு மேல் அதிகமாகி விட்டது!

கொரியா நாட்டில் யுத்தம் ஆரம்பமான இரண்டு வாரங்களுக்குள் வடக்கு கொரியர்கள் பதினையாயிரம் சதுர மைல்களுக்கு மேற்பட்ட தெற்கு கொரியாவின் பிரதேசங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.

மகத்தான வல்லமை பொருந்திய அமெரிக்காவின் நேரடியான இராணுவ உதவியும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவும் இருந்தும்கூட தெற்கு கொரியா இதுவரையில் தோல்வியடைந்து வருவதன் காரணம் என்ன? வடக்கு கொரியா வெகு துரிதமாக முன்னேறி வருவதன் மர்மம் என்ன?

சென்ற மகா யுத்தத்தில் இரண்டு பெரிய வல்லரசுகளைப் படுதோல்வியடையும்படி செய்த அமெரிக்காவின் ஒப்பற்ற பலம் அதற்குள் குன்றிவிட்டது என்று எவரும் கூற முடியாது.

இரண்டாவது உலக யுத்தத்தின் ஆரம்பத்தில் ஹிட்லர் வல்லரசாக விளங்கிய பிரான்ஸ் உள்படப் பல நாடுகளையும் ஒரு சில நாட்களில் முறியடித்து மின்னல் வெற்றிகளைப் பெற்று உலகத்தையே கிடுகிடுக்கச் செய்தார்.

ஜப்பானும் ஒரு சில வாரங்களில் தென் கிழக்கு ஆசியா நாடுகளையெல்லாம் தன் வசப்படுத்திக் கொண்டது.

எனவே எந்த நாட்டின் ஆரம்ப சூரத்தனத்தையும் கண்டு போரின் முடிவை நிர்ணயித்துவிட முடியாது.

வெகு காலமாகத் திட்டம் வகுத்துப் போரில் இறங்கும் நாடு முதலில் மளமளவென்று வெற்றி பெறுவது தவிர்க்க முடியாத விஷயம்.

அத்தகைய வெற்றிகளைக் கண்டு யாரும் ஏமாந்து போகக் கூடாது.

தெற்கு கொரியா முழுவதையும் வடக்கு கொரியா கைப்பற்றிக் கொண்டால்கூட, திரும்பவும் அதை முறியடித்துத் தெற்கு கொரியாவை மீட்கும் சக்தி அமெரிக்காவுக்கு உண்டு.

எனவே, வடக்கு கொரியாவின் திடீர் வெற்றிகளிலிருந்து யாரும் மறுக்க முடியாத இரண்டு உண்மைகள் வெளியாகின்றன.

1. ருஷ்யாவின் ஆதீனத்தில் இருந்து வரும் வடக்கு கொரியா பலமாதங்களாகப் போர்த் திட்டங்களை வகுத்து



கேந்திர நாடுகள்

யுத்தத்துக்குத் தயாராக இருந்து வந்திருக்கிறது.

2. அமெரிக்காவின் ஆதீனத்தில் உள்ள தெற்கு கொரியா எல்லைச் சண்டையில் ஈடுபட்டு வந்ததெனினும், பெரிய போருக்கான திட்டம் வகுத்து யுத்த சன்னத்தமாக இருக்கவில்லை.

இந்நிலையில் முதலில் ஆக்கிரமித்தது யார் என்பது பற்றி யாதொரு சந்தேகமும் இருப்பதற்கு இடமில்லை

ஆகையால், ஐக்கிய நாடுகள் சபை அவசரம் அவசரமாகக் கூடி வடக்கு கொரியாமீது ஆக்கிரமிப்புக் குற்றம் சாட்டியிருப்பதை நியாயமற்றது என்று கூற முடியாது.

இதற்கு முன் நிகழ்ந்த ஆக்கிரமிப்புகளை மேற்படி சபை மாதக் கணக்கில் கண்டிக்காமல் விட்டது தவறு என்பதற்காக, இப்போது வடக்கு கொரியாவின் ஆக்கிரமிப்பைக் கால தாமதமின்றிக் கண்டித்தது தவறு என்று சொல்லிவிட முடியுமா?

* * *

கொரியா போரைப்பற்றி ஐ. நா. சபையில் வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததைக் குறித்து அபிப்பிராய பேதமே ஏற்படுவதற்கில்லை.

ஏனெனில், ஐ. நா. சபையின் தீர்மானம் நியாயமானது என்பதை ஒத்துக் கொண்டால், அதை இந்தியா ஆதரித்ததும் நியாயம் என்றாகிறது.

கொரியா யுத்தத்தை யொட்டி ஐ. நா. சபையின் வந்த தீர்மானத்தை ஆதரித்ததன் மூலம் இந்தியா ருஷ்யாவுக்கு விரோதமாகவும் அமெரிக்காவுக்குச் சாதகமாகவும் நடந்துகொண்டிருக்கிறது என்று வாதிப்பது ஆதாரமற்ற கூற்றாகும்.

அநீதியான ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஐ. நா. சபையில் தீர்மானங்கள் வந்த போதெல்லாம் பிரிட்டன், அமெரிக்க நாடுகளுக்கு விரோதமாகவும் இந்தியா நடந்துகொண்டிருக்கிறது என்பதை யாரும் அதற்குள் மறந்திருக்க முடியாது.

எந்த வல்லரசு எந்தக் கட்சியில் இருந்தாலும் உலகில் நிகழும் அநீதியையும் ஆக்கிரமிப்பையும் வன்மையாகக் கண்டிக்கப் பாரதநாடு ஒரு போதும் தயங்கியதில்லை.

அதனால்தான், ருஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் மத்தியஸ்தம் செய்து வைக்கக்கூடிய யோக்கியதை உள்ள நாடு இந்த உலகில் இந்தியாவைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று அரசியல் நிபுணர்களும் ராஜதந்திரிகளும் அபிப்பிராயம் கூறி வருகிறார்கள்.

ஐ. நா. சபையின் தீர்மானத்தை ஆதரித்ததன் மூலம் இந்தியா ஆக்கிரமிப்பைக் கண்டித்திருக்கிறதேயன்றி, எந்த வல்லரசின் கட்சியிலும் சேரவில்லை; போரிலும் இறங்கவில்லை.

* * *

சென்ற மே மாதம் 28-ந் தேதி "கல்கி" இதழில் ஆரம்பமான 'யுத்த கேந்திரம்' என்ற தொடர் கட்டுரையில், ஐரோப்பாவைக் காட்டிலும் ஆசியாக் கண்டமே அதிகக் கொந்தளிப்பான நிலையில் இருக்கிறது என்று குறிப்பிடப் பட்டிருந்தது. கொரியா யுத்தத்தின் மூலம் அது மறுக்க முடியாத உண்மையாகி விட்டது. அதிலிருந்து ஒரு மாதம் பூர்த்தி யடைவதற்குள், அதாவது ஜூன் மாதம் 25-ந் தேதி கொரியாவில் கோரமான யுத்தம் ஆரம்பமாகி விட்டது.

மூன்றாவது உலக மகாயுத்தத்துக்குத் தென் கிழக்கு ஆசியா நாடுகள் கேந்திரஸ்தானங்களாக விளங்கலாம் என்றும் அதே கட்டுரையில் கூறப்பட்டிருந்தது. அதுவும் உண்மையாகி உலக மகா யுத்தம் மூண்டுவிடக் கூடாது என்றும், இப்போது கவிந்து கொண்டுள்ள பிரளய மேகங்கள் பேரிடி முழக்கம் செய்து பெரு மழை பெய்யத் தொடங்காமல் குமுறல்களுடன் நிற்கவேண்டும், அதாவது கொரியா யுத்தம் கொரியா எல்லையுடன் நிற்க வேண்டும் என்றும் பிரார்த்திப்போமாக!

ட்ரூமன் பேட்டி

[நமது விசேஷ விடாக்கண்ட நிருபர்]

அமெரிக்க பிரஸிடெண்ட் ஹாரி ட்ரூமன் அவசர அவசரமாக என்னத்தையோ எழுதிக் கொண்டிருந்தார். அவர் எதிரே, சுவரில் உலகப்படம் ஒன்று பரிதாபகரமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. மேஜை மீது இருந்த வெள்ளைக் காகிதம் முழுதும் ஒரே பூஜ்யங்களாகக் காணப் பட்டன. மெதுவாக ஜனாதிபதியின் பின்னால் போய் நின்று அவர் போட்டிருந்த குண்டு குண்டான சுழிகளை எண்ணத் தொடங்கினேன்.

"ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், கோடி, பத்து கோடி! ட்ரூமன் ஸார்! பிரமாதம்!" என்றேன்.

"வா, வா! வந்து விட்டாயா! உன்னைத்தான் எதிர்பார்த்தேன். இதெல்லாம் என்ன கணக்கென்று தெரியுமல்லவா உனக்கு?" என்று கேட்டார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன்.

"பேஷாய்த் தெரியும். இத்தனை கோடி டாலர் செலவில் அணுகுண்டும், ஹைட்ரஜன் குண்டும் தயாரித்திருப்பீர்கள். இது தெரியாதா?" என்றேன்.

"ஆ! பார்த்தாயா? உனக்குத் தெரியாதென்று எனக்குத் தெரியும். இவ்வளவு கோடி டாலருக்கு இப்போது புதிதாகத் திட்டம் போட்டிருக்கிறேன். கொரியா யுத்தத்தை நடத்த மேலும் அணுகுண்டுகளையும் ஹைட்ரஜன் குண்டுகளையும் உற்பத்தி செய்யவே இப்போது அமெரிக்க காங்கிரசை மேலும் 26 கோடி டாலர் கடன் கேட்கப் போகிறேன்."

"ஆமாம்; இந்த யுத்தத்தை எதற்காக நடத்தப் போகிறீர்கள்?"

"தென் கொரியாவையும் உலக சமாதானத்தையும் காப்பாற்றத்தான்."

"பேஷ்! உலகத்தில் சமாதானம் நிலவும் பொருட்டு இவ்வளவு அணுகுண்டுகளை உற்பத்தி செய்து அவற்றைக் கொண்டு போய் உலகத்தின் தலை மீது போடுவீர்கள். பிறகு யுத்த பயம் உலகத்திலேயே தலைகாட்டாது. எங்கெங்கும் ஒரே சாந்தி நிலவும். ஓம் சாந்தி! சாந்தி! சாந்திஹி!" என்றேன்.

"இப்போது உமக்கு நான் சொல்வது கேலியாகத்தான் இருக்கும். நாளைக்கு ருஷ்யாக்காரன் அணுகுண்டைக்கொண்டு வந்து ஆசியாக் கண்டத்தில் போட்டால் அப்போது தெரியும். ருஷ்யாவிடம் ஒரு அணுகுண்டு இருந்தால் நம்மிடம் இரண்டு இருக்க வேண்டாமா?"

"இரண்டு என்ன? இரண்டு கோடி குண்டு வேணுமானாலும் வைத்திருங்கள். உலக சமாதானத்தைக் காப்பாற்றத் தாங்களும் தோழர் ஸ்டாலினும் இருக்கும்போது இந்தப் பைத்தியக்கார உலகம் மூன்றாவது உலக யுத்தத்தைக் கண்டு ஏன் இப்படி நடுங்கிச் சாகிறதோ, தெரியவில்லை!" என்றேன்.

"விடாக்கண்டரே! தென் கொரியா மீது வடகொரியா படை யெடுத் திருப்பது சரியா என்று உம்மையே கேட்கிறேன்" என்றார்.

"என்னைக் கேட்டு என்ன பிரயோசனம்? வட கொரியாவை அல்லவா கேட்க வேண்டும்?"

"வட கொரியாவையா? அவர்களைக் கேட்டால் சீனாவைக் கேள் என்பார்கள். சீனாவைக் கேட்டால் ஸ்டாலினைக் கேள் என்பார்கள். ஆகையால்தான் தென் கொரியாவைக் காப்பாற்ற அமெரிக்கப் படைகளை அனுப்பி ஜெனரல் மக் ஆர்தரையும் தளபதியாக நியமித் திருக்கிறேன்" என்றார் ட்ரூமன்.

"எல்லாவற்றையும் நீங்களே முடிவு செய்து காரியங்களை நடத்துவதானால் அப்புறம் ஐக்ய நாட்டு சபையும், அதைச் சேர்ந்த பாதுகாப்புக் கௌன்ஸிலும் என்னத்திற்கு இருக்கின்றன?" என்று கேட்டேன்.

"அமெரிக்கா சொல்வதைச் சரி என்று ஒத்துக் கொள்ளவே இருக்கின்றன. எது எப்படியானாலும் நாங்கள் முன் வைத்த காலைப் பின் வைக்கப் போவதில்லை. ட்ரூமன் சொல்லுவதெல்லாம் 'ட்ரூ'வாகத்தான் இருக்கும் பார்!" என்றார் அமெரிக்க ஜனாதிபதி.

"ரொம்ப சரி; ஆனால் அமெரிக்கப் படைகள் வடகொரியாவில் காலை முன்னால் வைக்கிற மாதிரி வைத்து விட்டுச் 'சடக்' கென்று பின்னால் இழுத்துக் கொண்டு விட்டனவே, இது 'ட்ரூ' தானே!" என்றேன்.

"யுத்தப் போக்கை ஆரம்பத்திலேயே முடிவு கட்டிவிடக் கூடாது. இன்னும் சில தினங்களில் பார். கொரியாவில் இப்

போதுதான் மழைகாலம். ஜூலை ஆகஸ்டு மாதங்களுக்குள் அங்கே மொத்தம் 40 - கழி மழை பெய்ய வேண்டும். இந்த இரண்டு மாதங்களுக்குக் கொரியா ஒரே வெள்ளக்காடாயிருக்கும். இந்த இரண்டு மாதங்களுக்குள் வடகொரியாப் படைகளை தெற்கே இழுத்து வடக்கே வழுக்கிவிழச் சொல்லுகிறேனா இல்லையா, பார்!" என்றார் ஜனாதிபதி ட்ருமன்.

"முடிவு வரை பார்க்கத்தான் போகிறோம். இந்தியா தேசம் யுத்தத்தை அனுதாபத்துடன் பார்த்து வருவதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. எங்களிடம் சைன்யமோ, பீரங்கியோ ஒன்றுமில்லை. கொஞ்சநஞ்சம் இருந்தாலும் அவை தற்காப்புக்குத்தான் போதும். ஆனாலும் எங்களிடம் மிகப் பெரிய பலம் ஒன்று இருக்கிறது" என்றேன்.

"அப்படியா? அது என்ன பலம்?" என்று கேட்டார் ட்ருமன்.

"உங்கள் அணுகுண்டையும், ஹைட்ரஜன் குண்டையும் எதிர்த்து ஓட்டக் கூடிய இரண்டு மாபெரும் பலங்களை எங்கள் மகாத்மாஜி விட்டுப் போயிருக்கிறார். அஹிம்ஸை - சத்தியம் என்ற அழியாத அழிக்க முடியாத சக்திதான் அவை" என்றேன். இதற்குள் ட்ருமன் எதிரிலிருந்த டெலிபோன் மணி 'கிணு கிணு'வென்று அடித்தது. ஜனாதிபதி ட்ருமன் டெலிபோன் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தபோது அவர் புருவங்களைச் சுளித்துக் கொண்டார்.

"தென் கொரியாவின் முக்கிய நகரமான சோளுன் எதிரிகளிடம் போய் விட்டது. தாற்காலிகத் தலைநகரான டோஜோனுக்கும் ஆபத்து நெருங்கி விட்டது" என்றார்.

"ட்ருமன் ஸார்! கவலைப்படாதீர்கள்; டோஜோனும் சோளுனும் போனால் இன்னும் எத்தனையோ இருக்கின்றன" என்றேன்.

ட்ருமன் உலகப் படத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே "இன்னும் என்ன என்ன இருக்கின்றன?" என்று கவலையுடன் கேட்டார்.

"மாஸான், பூஸான், குன்ஸான், உருஸான் இந்த நகரங்களெல்லாம் இன்னும் பத்திரமாகத் தென் கொரியாவில்தான் இருக்கின்றன" என்றேன்.

அக்கப் போர்

"இரண்டு, இரண்டு பேர்களாக உள்ளே வந்தால்தான் எல்லோருக்கும் பேட்டி யளித்து அவரவர்களுடைய குறைபாடுகளை யும் கவனித்துக் கேட்க முடியும். ஒருவருக் கொருவர் சண்டையிட்டால் இன்று ஒரு அலுவலும் கவனிக்கப்பட மாட்டாது!" என்று ஒரு ஜில்லாவில் முகாமிருந்த சர்க் கார் உத்தியோகஸ்தர் விவசாயிகளுக்குக் கூறினாராம்.

அந்த இரண்டு பேர் யார் என்று நிர்ணயம் செய்வதில் சண்டை ஏற்பட்டால் என்ன செய்கிறது?

★

"செவ்வாய்க் கிரகத்தில் உயிர் இல்லை யென்பது இப்போது திட்டமாகத் தெரி கிறது" என்கிறார் ஒரு விஞ்ஞானி.

"நல்ல வேளை; அங்கே உயிர் இருந்து தொலைத்தால் அங்கேயும் இந்தியாவுக்கு ஒரு ஸ்தானிக காரியாலயம் ஏற்படுத்த வேண்டி யிருக்கும். பணத்துக்கு எங்கே போவது?" என்று நம்முடைய புது நிதிமந்திரி தேஷ்முக் சந்தோஷப்படலாம்.

★

"ஒவ்வொரு பிரஜைக்கும் இருக்க இடமும், உண்ண உணவும், உடுக்க உடையும் போது மான அளவு கிடைக்கச் செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சர்க்கார் உறுதி பூண்டிருக்கிறது."

—மந்திரி காட்கில்

இந்த வாழ்க்கைத் தரப் பல்லவியை எத்தனையோ தரம் கேட்டுக் கேட்டுத்தான் காது புளித்து விட்டதே என்கிறார் ஒரு சம்சாரி.

★

நேருஜி அமெரிக்காவுக்குப் போனார்; ஜனாப் லியாகத் அலிகானும் அமெரிக்கா வுக்குப் போயிருக்கிறார். நேருஜி இந்தோ னேஷியாவுக்குப் போனார்; ஜனாப் லியாகத் அலிகானையும் இந்தோனேஷியாவுக்கு வரும் படி அழைத்திருக்கிறார்களாம். நேருஜிக்கு மெக்ஸிகோவுக்கு வரும்படி இப்போது அழைப்பு கிடைத்திருக்கிறது.

பாகிஸ்தான் இந்தியாவைக் 'காப்பி' யடிப்பதாகப் பலர் குறை கூறுகிறார்கள். இதைத் தவிர்ப்பதற்காக ஜனாப் லியாகத் அலிகான் ஒரு ஏற்பாடு செய்யலாம். நேரு மெக்ஸிகோவுக்குப் போவதற்குமுன் அவர் மெக்ஸிகோவுக்குப் போய்விட்டு வந்து விடலாம். அங்கிருந்து அழைப்பு கிடைக்கா விட்டால்தான் என்ன?

உணவு மந்திரி ஸ்ரீ கே. எம். முன்ஷி வன மகோத்சவத்தின்போது காஞ்சீபுரத்தில் ஒரு துளசிச் செடியை நட்டார். நமது குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாதும் டில்லி யில் ஒரு துளசிச் செடியை நட்டிருக்கிறார். துளசிச் செடிமீது இவர்களுக்குள்ள பக்தி யைப் போற்ற வேண்டியதுதான். ஆனால் ஒரு சந்தேகம். உணவுப் பிரச்னையைத் தீர்ப் பதற்குத் துளசிச் செடி எப்படி உதவும் என் பது தெரியவில்லை.

இதைப் பற்றி நினைக்கும்போது பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. தஞ்சாவூர் மீது எதிரி அரசன் படையெடுத்து வருகிறான் என்பதைக் கேள்விப் பட்டதும், சரபோஜி மகாராஜா தாம் பூஜைக்கு வைத் திருந்த துளசி தீர்த்தத்தை எடுத்துக் கொடுத்து அதைக் கோட்டையைச்சுற்றிலும் தெளித்துவிட்டு வரச் சொன்னாராம். மகிமை மிக்க துளசியால் நனைக்கப்பட்ட ஜலம் எதி ரிப் படையைத் தடுத்து நிறுத்திவிடும் என்று அவர் நினைத்தார். ஆனால் அப்படி நடக்க வில்லை என்பதும் கோட்டையை அவர் பறி கொடுத்துவிட்டுத் தவித்தார் என்பதும் சரித் திரப் பிரசித்தம்.

வன மகோத்சவ இயக்கம் இப்படி ஆகி விடக் கூடாதே என்பதுதான் நம் கவலை.

வாரத்துக்கு ஒரு நாள் துளசி தீர்த்தம் சாப்பிட வேண்டும் என்று முன்ஷி ஓர் இயக்கம் ஆரம்பிக்கிறதாயிருந்தால் சரிதான்.

★

"நான் பதவி ஏற்கும் போது உணவு, விவ சாயம் சம்பந்தமாக எனக்கு ஒன்றுமே தெரி யாது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுதெல்லாம் எனக்கு வர்த் தக சங்கங்களும் மற்றவர்களும் அளிக்கும் உபசாரப் பத்திரங்களையும் மகஜர்களையும் பார்க்கும்போது உணவு விஷயமாக எனக் குத் தெரிந்திருப்பது கூட மற்றவர்களுக்குத் தெரியவில்லை என்று தெரிகிறது"

—உணவு மந்திரி ஸ்ரீ முன்ஷி

ஆனால் அவர்களில் யாரும் உணவு மந்திரி ஆகவில்லை யென்பது ஸ்ரீ முன்ஷிக்குத் தெரிந்திருக்கிறதா?

★

மலையாளத்தில் ஒரு தென்னை மட்டைக் காக ஏற்பட்ட சண்டையில் இரு கட்சிகளுக் குள் கைகலப்பு ஏற்பட்டு ஒருவர் இறந்தார்.

—செய்தி

'தென்னை மரத்தின் உபயோகம்' என்ற கட்டுரையில் மாணவர்கள் இந்த உபயோகத் தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

கௌஹாத்தியில் ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த ஒரு பள்ளிக் கூட உபாத்தியாயரின் பையிலிருந்த நூறு ரூபாய் நோட்டை ஒரு குருவி தூக்கிக் கொண்டு போய்த் தன் கூட்டில் வைத்துக் கொண்டு விட்டது.

—அஸ்ஸாம் செய்தி

ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயரிடம் முழுசாக நூறு ரூபாய் இருக்கலாமா என்று குருவிக்குக் கூடத் தோன்றியிருக்கிறது!

★

டில்லிக்கும் பஞ்சாப் மாகாணத்திலுள்ள கர்னால் நகருக்கு மிடையே ஒரு வயலுக்கு அடியில் டெலிபோன் கம்பிகளை அறுத்து நாசவேலை செய்தவர்களைப் போலீஸார் கண்டுபிடித்து விட்டனர். இந்த நாசவேலைக்காரர்கள் வேறு யாரும் இல்லை. எலிகள்!

—டெல்லிச் செய்தி

மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பதற்குப் பதிலாக இப்பொழுது வயலைக் கெல்லி எலியைப் பிடித்து விட்டார்கள்!

★

“கொரியா யுத்தத்துக்கு அநேகமாக ரஷ்யாவுக்குள் ஏற்பட்டிருக்கும் உள்நாட்டு நெருக்கடிதான் காரணமாக இருக்க வேண்டும்.”

கூனூரில் ஸர். ஸி.பி. ராமஸ்வாமி ஐயர்

ரஷ்யாவில் ஏற்பட்டிருக்கும் உள்நாட்டு நெருக்கடிக்குக் காரணம் எதுவாக இருக்கலாம்?

★

பூமிக்குள் ஜலம் எங்கேயிருக்கிறது என்று கண்டுபிடித்துச் சொல்லும் ஒரு யோகியைச் சென்னை சர்க்கார் உணவு இலாகா வேலைக்கு அமர்த்திக் கொள்ளப் போகிறது

—செய்தி

அந்த யோகி பூமிக்குள் புதையல் எங்கே இருக்கிறது என்பதையும் கண்டுபிடித்து கனம் கோபால் ரெட்டியாரிடம் தெரிவித்தால் நன்றாயிருக்குமே!

★

சிவகங்கை அருகிலுள்ள ஒரு கிராமத்தில் அக்னி பகவான் 102 குடிசைகளை அழித்ததுமன்றியில் 120 மூட்டை அரிசியையும் விழுங்கி விட்டார். —பத்திரிகைச் செய்தி

ரேஷன் விதிகளை மீறியதற்காக அக்னி பகவானை ஏன் அரெஸ்ட் செய்யக்கூடாது?

★

“மரங்களைக் குழந்தைகளாக மதிக்க வேண்டும்' என்று முன்ஷி கூறுகிறார்.

“குழந்தைகளை எப்படி மதிப்பது?” என்று ஒரு சம்சாரி கேட்கிறார்.

“இரவு இரண்டு மணிக்கு ஒரு காரியாலயத்தில் புகுந்த திருடர்கள், அந்தச் சமயத்திலும் அங்கே வேலை செய்து கொண்டிருந்த ஒரு குமாஸ்தாவைக் கண்டு திகைத்தனர்.”

—செய்தி

அந்தக் குமாஸ்தாவும் திருடர்களைக் கண்டு திகைத்துத்தான் போயிருப்பார்.

★

ஆந்திர தேசத்தில் ஹிரோசா என்ற ஊரில் பார்வதம்மா என்னும் ஸ்திரீ கல்யாணமான சில நாட்களுக்கெல்லாம் தன் புருஷனின் நகைகளை ஸ்வீகரித்துக் கொண்டு ஓடிவிட்டாள்.

—பத்திரிகைச் செய்தி

வீட்டிலேயே இருந்துகொண்டு ஆயுள் முழுதும் கணவன் சம்பாதிப்பதையெல்லாம் ஸ்வீகரித்துக் கொண்டிராமல் இந்த மட்டில் விட்டாளே என்று ஒரு குடும்பஸ்தர் பெருமூச்சு விடுகிறார்.

★

“பம்பாய் விவசாய மந்திரி காரில் சென்று கொண்டிருக்கையில், வேலையில்லாமல் திண்டாடும் ஓர் இளைஞன் அவர் காரை நோக்கிக் கல்லை வீசினான். மந்திரியின் மீது கல் படவில்லை. ஆனால் அவரது காரியதரிசி மீது பட்டது” என்று பம்பாய்ச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதில் அதிசயம் ஒன்றுமில்லை. குறி தவறாமல் எறியும் சக்தி அந்த இளைஞனுக்கு இருந்திருந்தால் எதாவது ஒரு வேலையில் அமர்ந்திருக்கமாட்டானா?

மதுரையில் பல வருஷங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. காங்கிரஸ் பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ராஜாஜி பேசிக் கொண்டிருந்தார். யாரோ ஒரு காங்கிரஸ் விரோதி கல்லை விட்டெறிந்தான். கல் ராஜாஜியின் மேல் விழாமல் பக்கத்தில் விழுந்தது.


‘குறி தவறாமல் கல்லெறியும் சக்தி நமக்கு இருந்தால் இத்தனை நாள் சுயராஜ்யம் பெற்றிருக்க மாட்டோமா?” என்றார்.

சுயராஜ்யம் எப்படியோ நமக்குக் கிடைத்துவிட்டது! ஆனால் குறி தவறாமல் கல்லெறியும் சக்தி மட்டும் இன்னும் வந்தபாடில்லை!!

★


“அப்பப்பா! என்ன வார்த்தைகள்! என்ன வார்த்தைகள்! போதும், இந்தப் பேச்சு! இனி காரியத்தில் இறங்குவோம்” என்றார் உணவு மந்திரி ஸ்ரீ கே.எம். முன்ஷி தமது ஒன்றரை மணி நேரப் பேச்சில்.

ஆமாம்; காரியத்தில் இறங்க வேண்டியதுதான். அத்தனை நீண்ட பிரசங்கத்துக்குப் பிறகு வயிறு பசிக்காதா, என்ன?



திருமணம்

பிரபல வர்த்தகர் கச்சனுவின் ஸ்ரீ ஜி. கலியாணசுந்தர நாடாரின் சகோதரர் ஸ்ரீ ஜி. மகாராஜ நாடார் ஜேஷ்ட புத்திரன் செல்வன் கெங்கை ஆதிந்தனுக்கும் செல்வி சீதாலக்ஷ்மி தேவிக்கும் 9—6—50 தேதி "லக்ஷ்மி பவன"த்தில் நடைபெற்ற திருமணத்திற்கு அநேக பிரபலஸ்தர்கள் விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதித்துப் பரிசுகளும் வழங்கினார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார், சென்னை பிரதம மந்திரி கனம் பி. எஸ். குமாரசாமி ராஜா, கைத்தொழில் மந்திரி கனம் சி. பெருமாள்சாமி ரெட்டியார், உணவு மந்திரி கனம் ஜே. எல். பி. ரோச் விக்டோரியா, ஜில்லா கலெக்டர் ஸ்ரீ ஆர். எஸ். சுப்பையா பிள்ளை, இலங்கை பிரதம மந்திரி ரைட் ஹானரபிள் டி. எஸ். சேனநாயகா, இலங்கை வர்த்தக மந்திரி கனம் H. W. அமரசூரியா, மாஜி வர்த்தக மந்திரிகளான அட்வகேட் ஸ்ரீ சி. சுந்தரலிங்கம், எம். பி., ஸ்ரீ ஐ. எக்ஸ். பெரேரா, செனேட்டர் சிரில் டி. சொய்சா, இலங்கை இந்திய வர்த்தக சங்கத் தலைவர் ஜனப் எஸ். எச். மூஸாஜீ போன்ற அநேக பிரமுகர்களிடமிருந்து மங்கள வாழ்த்துச் செய்திகளும் கிடைத்தன





Rexona
Rexona



○ ○ ○ சேலம் ஜில்லாவிலுள்ள கிராமம் ஒன்றில் செங்கோடக் கவுண்டன் என்னும் வாலிபக் குடியானவன் தனக்குச் சொந்தமான பத்து ஏக்கரா நிலத்தில் பாடுபட்டு வெள்ளாமை செய்து வந்தான். வற்றாத தண்ணீர் ஊற்றுடைய கேணி ஒன்று அவன் நிலத்தில் இருந்தது. கேணிக்கு அருகில் குடிசை போட்டுக் கொண்டு அவன் வசித்தான். செம்பவளவல்லி என்னும் கிராமத்துப் பெண் ஒருத்தியைக் கலியாணம் செய்து கொள்ளும் உத்தேசமும் அவனுக்கு இருந்தது. இத்தகைய கள்ளங் கபடற்ற குடியான இளைஞனின் வாழ்க்கையில் பட்டணத்து நாகரிகம் படைத்த மூவர் — இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் — குறுக்கிட்டனர். அதன் பலனாகப் பல விபரீதங்கள் நிகழ்ந்தன. ○ ○ ○

8

அவசரத்தில் சட்டை போட்டுக் கொள்வதென்பது சட்டையுடன் பிறந்த பட்டணத்து நாகரிக மனிதர்களுக்கே கொஞ்சம் கடினமான காரியந்தான். செங்கோடனின் பட்டுச் சட்டையோ அந்த அவசரத்தில் அவனை ஏகத்தாளம் செய்து "உனக்குப் பட்டுச் சட்டை வேறேயா?" என்று கேட்பது போல ஏறுமாறாக நடந்து கொண்டது. சட்டையின் வலது கைத் தொங்கலில் செங்கோடனின் இடது கை புகுந்துகொள்ளவே, வலது கையை என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடினான். அந்த நிலையிலேயே சட்டையைத் தலையில் மாட்டிக் கொள்ள முயன்றபோது, சட்டை முகத்தை மறைத்ததே தவிரக் கீழே இறங்க மறுத்து விட்டது. வெளியில் கழற்றி எறியவும் முடியவில்லை. அப்படிக் கழற்ற முயன்றபோது சட்டை 'தரர்' என்று கிழிந்தது. கிழிந்தால் கிழிந்து தொலையட்டும்! முகத்தை மறைப்பதற்குப் பதிலாகக் கழுத்தின் கீழே இறங்கி விட்டதல்லவா?

வந்தவர்கள் மூன்று பேரும் இதற்குள் கீழே பள்ளத்திலிருந்து மேலே கேணியின் கரைக்கு ஏறிவிட்டார்கள். அவர்கள் தங்களுக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொள்ள முயன்றார்கள். அடக்க முடியாமல் சிரிப்பு பீறிக் கொண்டு வந்தது. செங்கோடனும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தான். வந்தவர்களில் ஒருவன் "கவுண்டர் ஸார்! தங்களுடைய தங்கத் திருமேனிக்குச் சட்டை இல்லாவிட்டால் என்ன? நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு?" என்றான்.

அதற்குள் இன்னொருவன், "என்னப்பா, எஸ்ராஜ்! நம்முடைய ஜமீன்தார் செங்கோடக் கவுண்டரைப் பஞ்சாங்கப் பிராமணனோடு ஒப்பிட்டுப் பேசுகிறாயே?" என்றான்.

"அழகாய்த்தானிருக்கிறது! ராஜா செங்கோடக் கவுண்டரை நீங்கள் இரண்டு பேருமாகச் சேர்ந்து வெறும் ஜமீன்தார் ஆக்கிவிட்டீர்களே? இன்னும் கொஞ்ச நேரம் போனால் அவருடைய பத்து ஏக்கரா நிலத்தையும்

பிடுங்கிக் கொள்ளுவீர்களோ, என்னமோ?'' என்றாள் பங்கஜா.

"அவர்கள் பிடுங்கிக் கொண்டால் நான் விட்டுவிடுவேனா? என் உயிர் இருக்கிறவரையில் அது முடியாத காரியம்!'' என்றான் செங்கோடன்.

"பங்காரு! பார்த்தாயா? நாம் என்னமோ தமாஷாய்ச் சொல்லப் போக, கவுண்டர் அவருடைய நிலத்தைப் பிடுங்கிக் கொள்ளத்தான் நாம் வந்திருக்கிறோம் என்று எண்ணிவிட்டார்!'' என்றான் 'எஸ் ராஜ்' என்கிற சுந்தரராஜன்.

"கவுண்டர், ஸார்! அப்படியெல்லாம் ஒன்றும் தப்பாக எண்ணிக் கொள்ள வேண்டாம். முக்கியமாக, உங்களுக்கு நன்றி சொல்லி விட்டுப் போவதற்காகவே வந்தோம்!'' என்றான் பங்காருசாமி.

"எனக்கு நன்றி சொல்ல வந்தீர்களா? அது எதற்கு?'' என்று செங்கோடன் கேட்டான்.

"இந்த லேடியை நேற்றைக்கு நீங்கள் காப்பாற்றினீர்கள் அல்லவா? அதற்காகத்தான்!''

"இந்த அம்மாளையா? நானா காப்பாற்றினேன்? நன்றாய் விளக்கமாய்ச் சொல்லுங்கள்! நேற்று ராத்திரி நடந்தது ஒன்றும் எனக்கு ஞாபகமில்லை. மூளை குழம்பிக் கிடக்குது!'' என்றான் செங்கோடன்.

"அது என்ன, அப்படிச் சொல்லுகிறீர்! நேற்று ஸினிமாக் கூடாரத்தில் நெருப்புப் பிடித்தது அல்லவா?''

"நெருப்புப் பிடித்ததா, என்ன? நீங்கள் எல்லாருமாய்ச் சேர்ந்து கொண்டு, நெருப்புப் பிடிக்கவே இல்லை என்றீர்களே?''

"அந்தப் போலீஸ்காரன் ஒருவன் வந்தானே? அவனுக்காக அப்படிச் சொன்னோம். இல்லாவிட்டால், நெருப்பு ஏன் பிடிச்சுது, என்னமாய்ப் பிடிச்சுது என்று ஆயிரம் கேள்வி கேட்பான். அப்புறம் நெருப்புப் பிடிச்சதற்குக் காரணமாயிருந்தவனை 'அரெஸ்ட்' செய்யவேண்டும் என்பான். உங்களை அப்படியெல்லாம் நாங்கள் காட்டிக் கொடுத்து விடுவோமா? நெருப்புப் பிடிச்சது என்னமோ வாஸ்தவம். அதிலே அறுநூறு ரூபாய்க்கு அதிகமாய்ப் பணம் கோட்டு எரிந்து போய்விட்டது!...''

"எத்தனை ரூபாய்?'' என்று செங்கோடன் ஒரு மைல் தூரம் கேட்கும்படி இரைந்து கேட்டு விட்டு, திறந்த வாய் மூடாமல் இருந்தான்.

"ஆமாம்; அறுநூறு ரூபாய்க்கு அதிகம். நேற்றைக்கு இரண்டு வேளை ஸினிமாவில் டிக்கட் வசூல் அவ்வளவும் போய்விட்டது!''

"என்னய்யா, அதிசயமாயிருக்கிறது? ஒரு நாளைக்கு அறுநூறு ரூபாயா? நான் வருஷம் பூராவும் உழைத்துப் பாடுபடுகிறேன், எனக்கு வருஷத்துக்கு இருநூறு ரூபாய் மிச்சமாகிறதில்லை. ஒருநாளைக்கு அறுநூறு ரூபாய் வசூலா?'' என்று செங்கோடன் சத்தம் போட்டுக் கேட்டான்.

"அறுநூறு ரூபாய் ஒரு பிரமாதமா? பார்த்துக் கொண்டே இருங்கள்! இந்த அம்மாளை நாங்கள் ஸினிமாவில் சேர்த்துவிடப் போகிறோம். அப்போது ஒருநாளைக்கு இரண்டாயிரம் ரூபாய் வசூலாகும். ஒரு தியேட்டரில் இரண்டாயிரம் ரூபாய். இந்தமாதிரி இருநூறு தியேட்டரில் தினம் தினம் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் வசூல் ஆகும்.''

"அடே அப்பா!'' என்று செங்கோடன் அதிசயத்துடன் குமாரி பங்கஜாவைப் பார்த்தான். பார்க்கப் பார்க்க, பங்கஜா வளர்ந்து வளர்ந்து பொய்மான்கரடு அவ்வளவு பெரிதாக வளர்ந்து விட்டாள். குமாரி பங்கஜாவின் உருவம் மறைந்து அவ்வளவும் வெள்ளி ரூபாய் மயமாகச் செங்கோடனுக்குத் தோன்றியது.

இந்தச்சமயத்தில் பங்கஜா தானும் சம்பாஷணையில் கலந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று தீர்மானித்து, "கவுண்டரே! நான்கூட உங்களைப்பற்றி நேற்றுத் தவறாக எண்ணிக் கொண்டு ஒரு காரியம் செய்து விட்டேன். அதற்காக ரொம்பவும் வருத்தப்படுகிறேன். தயவுசெய்து என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும்!'' என்று உருக்கமான குரலில் கூறினாள்.

அதைக் கேட்ட செங்கோடன் மனம் உருகி, "அதற்கென்ன, மன்னித்து விட்டால் போகிறது! நீ வருத்தப்பட வேண்டாம்!'' என்றான்.

"அதெப்படி நான் வருத்தப்படாமல் இருக்க முடியும்? என்ன நடந்தது தெரியுமா? இருட்டிலே யாரோ ஒருவன் என் கழுத்துச் சங்கிலியை அறுக்கப் பார்த்தான். அதனாலேதான் நான் அப்படி ஓடி உங்கள் மேலே முட்டிக் கொண்டேன். நீங்கள் என்னைப் பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு போகவே, திருடன் நீங்கள்தான் என்று எண்ணிக் கன்னத்தில் அடித்து விட்டேன். வெளிச்சம் போட்டதுந்தான் உங்களைத் தெரிந்தது!" என்றாள் பங்கஜா.

செங்கோடனுடைய கை அவனையறியாமல் கன்னத்தைத் தடவிக் கொண்டது. இப்போது உண்மை தெரிந்துவிட்ட படியால் அவன் அந்த அறையைக் குறித்து வருந்தவில்லை. அதை நினைத்தபோது அவனுக்கு இப்போது ஒரு விசித்திரமான மகிழ்ச்சி உண்டாயிற்று.

"எந்தக் களவாணிப் பயல் அப்படி உன் கழுத்தில் கை வைத்து நகையைக் கழட்டப் பார்த்தான்! அப்போதே சொல்லியிருந்தால் அவனைக் கைப்பிடியாய்ப் பிடித்துச் செம்மையாய்க் கொடுத்து அனுப்பியிருப்பேனே?" என்றான் செங்கோடன்.

"இருட்டிலே யார் என்று தெரியவில்லை. தெரிந்திருந்தால் சொல்லியிருப்பேன்!" என்றாள் பங்கஜா.

"ஸினிமாவிலே அதுதான் ஒரு கெடுதல். விளக்கை அணைத்து இருட்டாகச் செய்து விடுகிறார்கள்! விளக்கைப் போட்டுக் கொண்டு ஸினிமாக் காட்டினால் என்ன? பணங்கொடுத்து வந்தவர்கள் இன்னும் நன்றாகப் பார்க்கலாம் அல்லவா?"

இதைக் கேட்ட மூவரும் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பு எதற்காக என்று செங்கோடனுக்கு விளங்கவில்லை. ஆனால் அவனும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தான்.

"சரி! எஸ்ராஜ்! நாம் வந்த காரியம் ஆகிவிட்டது. புறப்படலாமா?" என்று கேட்டான் பங்காரு.

"அதற்குள் என்ன அவசரம்? இன்னும் கொஞ்ச நேரம் இருந்து விட்டுப் போங்கள்!" என்று செங்கோடன் உபசரித்தான்.

"எனக்கு இந்த இடம் ரொம்பப் பிடித்திருக்கிறது. கேணிக் கரையும் தென்னை மரமும் பசேல் என்ற நெல் வயலும் சோளக் கொல்லையும் பார்க்க எவ்வளவு அழகாயிருக்கிறது! ஸினிமாவில் காதல் காட்சி எடுத்தால் இப்படிப்பட்ட இடத்தில் அல்லவா எடுக்க வேண்டும்!" என்றாள் பங்கஜா.

"அதற்கென்ன? நீ ஸினிமாவில் சேர்ந்து காதல் காட்சி எடுக்கும்போது இங்கேயே வந்து எடுத்து விடலாம்!" என்றான் எஸ்ராஜ்.

"ஆகா! அதோ குயில் கூவுகிறது, பாருங்கள்! அடடா! என்ன இனிமை! என்ன இனிமை?" என்றாள் பங்கஜா.

"இந்தப் பக்கத்துக் குயில்களே இப்படித்தான்! ரொம்ப ரொம்ப இனிமையாகக் கூவும்!" என்றான் செங்கோடன்.

"அப்படியா? இங்கே நிறையக் குயில்கள் உண்டோ?"

"இருபது—முப்பதுக்குமேலே இருக்கிறது. நான் இங்கே ஒருத்தன்தானே? அவ்வளவு போதுமே?"

"இருபது—முப்பது குயிலும் ஓயாமல் கூவிக் கொண்டிருக்குமோ?"

"கூவாவிட்டால் யார் விடுகிறார்கள்? தவடையில் இரண்டு அறை அறைந்து கூவச் சொல்ல மாட்டேனா? உங்களுக்கு இஷ்டமான போதெல்லாம் வந்து கேட்கலாம். டிக்கட் கிடையாது!" என்றான் செங்கோடன்.

"பார்த்தாயா, எஸ் ராஜ்! கவுண்டர் எவ்வளவு வக்கணையாகப் பேசுகிறார்?" என்றான் பங்காரு.

"நீங்கள் என்னமோ குயில் கியில் என்று பிராணனை விடுகிறீர்கள். ஏற்கெனவே வெய்யிலில் வந்ததில் எனக்குத் தாகமாயிருந்தது. இப்போது தொண்டை அடியோடு வறண்டு விட்டது. ஏதாவது குடிக்காவிட்டால் உயிர் போய்விடும் போலிருக்கிறது."

இதைக் கேட்டவுடனேதான் செங்கோடனுக்கு வந்தவர்களை இத்தனை நேரமும் நிற்க வைத்துப் பேசுகிறோம், உட்காரச் சொல்லி உபசாரம் செய்யவில்லையென்பது நினைவு வந்தது.

"அடாடா! தாகம் என்று அப்போதே சொல்லக் கூடாதா? குடிசைக்குப் போகலாம் வாருங்கள். பானையில்



தண்ணீர் நிரப்பி வைத்திருக்கிறேன். ஜில் என்று குளிர்ச்சியா யிருக்கும்'' என்றான் செங்கோடன்.

"கவுண்டரே! குடிசை என்று சொல்லாதீர்; அரண்மனை என்று சொல்லும்!'' என்றான் எஸ்ராஜ்.

"குடியானவனுக்கு அவன் குடியிருக்கும் குடிசைதான் அரண்மனை. அதில் சந்தேகம் என்ன?'' என்றான் பங்காருசாமி.

"இந்தக் கிணற்றுத் தண்ணீரைச் சாப்பிடலாமே? அங்கே போவானேன்?'' என்றான் பங்கஜா.

"இல்லை, இல்லை. கிணற்றுத் தண்ணீர் இரைத்துக் கலங்கிப் போய் விட்டது. காலையிலேயே தெளிவாகத் தண்ணீர் எடுத்துப் பானையில் கொட்டி வைத்திருக்கிறேன். வாருங்கள்! உங்களைப் போன்றவர்கள் இங்கே வருவதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?''

"சரி; அப்படி என்றால் போகலாம். ராஜா செங்கோடக் கவுண்டரின் அரண்மனையையும் பார்த்து வைக்கலாம்!'' என்றான் பங்காரு.

எல்லாரும் குடிசைக்குப் போனார்கள். வாசலில் குறுகலான திண்ணை ஒன்று இருந்தது. செங்கோடன் கயிற்றுக் கட்டிலையும் பழைய பாய் ஒன்றையும் எடுத்துப் போட்டு, "உட்காருங்கள்! இதோ தண்ணீர் கொண்டு வருகிறேன்!'' என்றான்.

"வேண்டாம், வேண்டாம்; அவ்வளவு சிரமம் உங்களுக்கு எதற்கு? நான் எடுத்து வந்து கொடுக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே பங்கஜாவும் உள்ளே நுழைந்தாள். அவளைத் தொடர்ந்து மற்ற இருவரும் குடிசைக்குள் வந்தார்கள்.

செங்கோடனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. சட்டியும் பானையும், சுத்தம் செய்யாத சாம்பல் குவிந்த அடுப்பும், அழுக்குத் துணிகளும், மூலைக்கு மூலை தானிய மூட்டைகளும், மண் வெட்டியும் அரிவாளும், தவிடும் பிண்ணாக்குமா யிருந்த அந்தக் குடிசையைப் பார்த்து இந்தப் பட்டணத்துச் சீமான்களும் சீமாட்டியும் என்னவென்று நினைத்துக் கொள்வார்கள்? இவர்கள் வரப் போவது தெரிந்திருந்தால் குடிசையைச் சுத்தப் படுத்தி வைத்திருக்கலாமே?

பங்கஜா உள்ளே நுழையும்போதே, "அடாடா! இங்கே எவ்வளவு குளிர்ச்சியா யிருக்கிறது? வெளியிலே வெய்யில் கொளுத்தி ஒரே உஷ்ணமா யிருக்கிறது! இங்கே ஊட்டி, கோடைக்கானல் மாதிரி ஜில்லென்று இருக்கிறது. ஓட்டு வீட்டிலும் மச்சு வீட்டிலும் என்ன சுகம் இருக்கிறது! கூரை வீட்டுக்குச் சமம் வேறொன்றும்

கிடையாது!'' என்று சொல்லிக் கொண்டே வந்தான்.

"அதற்கென்ன சந்தேகம்?'' என்ருர்கள் மற்ற இருவரும்.

செங்கோடன் "எல்லாரும் சேர்ந் தாற்போல் உள்ளே வந்தால் இங்கே நிற்பதற்குக்கூட இடங் கிடையாது!'' என்ருன்.

"அழகா யிருக்கிறது! வேண்டிய இடம் இருக்கிறதே! ஆனந்தபவன் பங்களாமாதிரி யல்லவா இருக் கிறது!'' என்ருன் பங்காரு.

"மனம் விசாலமா யிருந்தால் இட மும் விசாலமாயிருக்கும்!'' என்ருள் குமாரி பங்கஜா.

பானையில் ஊற்றி வைத்திருந்த குளிர்ந்த தண்ணீரைச் செங்கோடன் தகரக் குவளையில் எடுத்து மூன்று பேருக்கும் கொடுத்து வந்தான். அப்போது அவ னுக்கு ஒரு விசித்திரமான எண்ணம் தோன்றியது. அதாவது அந்த இரண்டு ஆண் பிள்ளைகளும் குடிசை யின் உட்புறத்தைக் கவன மாக உற்றுப் பார்க்கிருர்கள் என்ற சந்தேகம் ஜனித்தது. அப்படி என்னத்தைப் பார்க் கிருர்கள்? மூலை முடுக்குகளை எதற்காக உற்று உற்றுப் பார்க்கிருர்கள்? எதற்காக இப்படி விழிக்கிருர்கள்? — ஆ! இந்தப் பட்டணத்துப் பேர்வழிகளிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்! இந்தக் காலத்தில் யாரையும் நம்புவதற்கில்லை!

எல்லாரும் தண்ணீர் குடித் ததும், "வாருங்கள், போக லாம்! வெளியில் காற்ருட உட்காரலாம்!'' என்று சொல்லி விட்டுச் செங்கோ டன் வெளியே வந்தான். பங் கஜாவும் அவனுடன் வந் தாள். மற்ற இருவரும் மேலும் குடிசைக்குள் இரு ந்து, மூலை முடுக்குகளைக் குடைந்து "இது பிண்ணாக்கு! இது நெல்லு!'' என்று ஒரு வருக் கொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"வாருங்கள்! வாருங்கள்! அங்கே என்ன இருக்கிறது, பார்க்கிறதற்கு?'' என்று செங்கோடன் சத்தம்போடவே இருவரும் வெளியில் வந்தார்கள்.

"போகலாமா?'' என்ருன் ஒருவன்.

"கொஞ்சம் உட்கார்ந்து விட்டுப் போகலாம்'' என்ருன் இன்னொருவன்.

கயிற்றுக் கட்டிலிலும் திண்ணையி லும் நிரவி உட்கார்ந்ததும், செங்கோ டன் "உங்களை ஒன்று கேட்க வேண் டும் என்றிருக்கிறேன்!'' என்ருன்.

"பேஷாய்க் கேளுங்கள், கவுண் டர்வாள்! ஒன்று என்ன? பத்து வேண்டுமானாலும் கேளுங்கள்!'' என்ருன் எஸ்ராஜ்.

"இந்த அம்மாள் உங்கள் இரண்டு பேருக்கும் என்னமாய் வேணுங்க?'' என்று கேட்டான்.



"எனக்கு இந்த அம்மான் தங்கை!......" என்றான் பங்காரு.

"நிஜமாகவா? முகத்தைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே?" என்றான் செங்கோடன்.

"என் சொந்தத் தங்கை இல்லை; சித்தப்பாவின் மகள். இந்த எஸ்ராஜ் தயன் இவளைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறான்?"

"என்னங்க? என்னால் நம்பவே முடியவில்லையே? இந்த அம்மாளைப் பார்த்தால் தேவலோகத்து அரம்பை, ஊர்வசி மாதிரி இருக்கிறது! இவரைப் பார்த்தால்......"

"ஆமாம், அனுமார் மாதிரி இருக்கிறது அதனால் என்ன? கவுண்டரே! காதலுக்குக் கண்ணில்லை என்று கேட்டதில்லையா?"

"கண் இல்லாமற் போனாற் போகட்டும்! அறிவுகூடவா இல்லாமற்போய் விடும்?" என்றான் செங்கோடன்.

அப்போது குமாரி பங்கஜா குறுக்கிட்டு, "இவர்கள் சொல்வதை நீங்கள் நம்பவேண்டாம். சும்மாவாவது சொல்கிறார்கள்! நான் கலியாணமே செய்து கொள்ளப் போவதில்லை! அப்படிச் செய்து கொண்டால் என் மனதுக்குப் பிடித்தவரைத்தான் கலியாணம் செய்து கொள்வேன்!" என்றாள்.

"அது போனால் போகட்டும். இப்போது பங்கஜாவின் கலியாணத்துக்கு அவசரம் ஒன்றுமில்லை. நீர் கட்டாயம் ஒருநாள் சின்னம நாய்க்கன் பட்டிக்கு எங்கள் ஜாகைக்கு வரவேண்டும். நீங்கள் செய்த உதவிக்காக உங்களுக்கு ஒரு டீ பார்ட்டி கொடுக்கப் போகிறோம்."

"எனக்கு டீ பிடிக்காது. சாப்பிட்டுப் பழக்கம் இல்லை. ஒருநாள் எங்கேயோ சாப்பிட்டு மயக்கம் கூட வந்து விட்டது."

"டீ சாப்பிடுவது கட்டாயம் இல்லை. மோர் கொடுக்கிறோம். சாப்பிடலாம். அதைத் தவிர, நீங்கள் அன்றைக்குச் சினிமா பூராவும் பார்க்கவில்லை. ஒருநாள் வந்து பார்க்கவேண்டும்."

"வருகிறேன். ஆனால் என்னைப் பின்னால் கொண்டுபோய் உட்கார வைத்து விடக் கூடாது!"

"எங்கே இஷ்டமோ அங்கே உட்காரலாம். நிரைக்குப் பக்கத்திலே கூட உட்காரலாம்."

"அப்படியானால் சரி!"

மூன்று பேரும் புறப்பட்டுச் சென்றார்கள். மற்ற இருவரும் ஏதோ பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் போனார்கள். பங்கஜா மட்டும் செங்கோடனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு சென்றாள்.

செங்கோடன் தன் மனதிலிருந்த தராசில் ஒரு தட்டில் குமாரி பங்கஜாவையும் இன்னொரு தட்டில் செம்பவளவல்லியையும் வைத்து நிறுத்துப் பார்த்தான். யார் அதிகம், யார் குறைவு என்பதை அவனால் அவ்வளவு சுலபமாக நிர்ணயிக்க முடியவில்லை.

9

செம்பவள வல்லியின் தகப்பனார் சிவராமலிங்கக் கவுண்டர் மிகவும் கண்டிப்பானவர். செம்பா அவருடைய மூத்த மகளாகையால் அவளுடைய இஷ்டத்துக்காக இத்தனை நாளும் பொறுத்திருந்தார். இனிமேல் கண்டிப்பாகப் பொறுக்க முடியாது என்று அவருடைய மனையாளிடம் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

"செங்கோடன் வந்து பெண் கேட்கப் போகிறான் என்று காத்திருந்தால் செம்பா கன்னிப் பெண்ணாகவே இருக்க வேண்டியதுதான்!" என்றார்.

"அவன் கேட்காவிட்டால் என்ன? நீங்கள்தான் கூப்பிட்டுச் சொல்லுங்களேன்? சிறு பிள்ளைதானே? தாயா, தகப்பனாரா, — அவனுக்குப் புத்தி சொல்லுவதற்கு யார் இருக்கிறார்கள்?" என்றாள் செம்பாவின் தாயார்.

"அப்படி என்னத்திற்காகப் போய் அவன் தாவாக் கட்டையைப் பிடிக்க வேணும்? நம்ப செம்பாவுக்கு மாப்பிள்ளை கிடைக்காமலா போகிறது?"

"இந்தப் பக்கத்திலேயே செழிப்பான வயல்காடும் வற்றாத கேணியும் செங்கோடனுக்கு இருக்கிறது. பணமும் சேர்த்து வைத்திருக்கிறான்......"

"இன்னும் எத்தனை நாளைக்கு அவன் காடும் பணமும் இருக்குமோ, சந்தேகந்தான். கேட்டயா சங்கதி?

செங்கோடனுக்குத் துர்ச்சகவாசம் ஏற்பட்டிருக்கிறது. சின்னமநாயக்கன் பட்டிக்கு யாரோ இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் வந்திருக்கிறார்கள். அவர்கள் துர் நடத்தைக்காரர்கள். அவர்களில் ஒருவன் எங்கேயோ கோ ஆபரேடிவ் சங்கப் பணத்தைக் களவாடிக் கொண்டு வந்து விட்டானாம். அவன் மேலே வாரண்டு இருக்கிறதாகக் கேள்வி......''

"அதென்ன, கோஆபரேடிவ் என்று என்னமோ சொன்னீங்களே?''

"அதெல்லாம் விளங்கச் சொல்ல இப்போது நேரமில்லை. பொதுப் பணத்தைக் கையாடிவிட்டு வந்திருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷ்யர்களோடே செங்கோடன் சேர்ந்து கொண்டு ஏழெட்டு நாளாய்த் திரிகிறானாம்! இங்கே சோளமும் நெல்லும் காய்கிறதாம்! எப்படியிருக்கிறது கதை?''

"கொஞ்சங்கூட நன்றாயில்லை. நம்ம செங்கோடன் அந்தமாதிரி வழிக்கெல்லாம் போவான் என்று யார் நினைத்தது? நீங்கள்தான் கூப்பிட்டுப் புத்தி சொல்கிறதுதானே?''

"இப்போது நாம் சொல்கிற புத்தி ஏறாது. அந்தக் காவாலிப் பயல்கள் செங்கோடனுடைய பணத்தைப் பிடுங்கிக் கொண்டு அவன் தலையில் கூழைக் கரைத்து விட்டுப் போன பிறகுதான் புத்தி வரும்.''

"அப்புறம் அவனுக்குப் புத்தி வந்து என்ன லாபம்?''

"அதனால்தான் அவனை விட்டு விடலாம் என்கிறேன். வேறு மாப்பிள்ளை கையில் வைத்திருக்கிறேன். நீ சம்மதம் கொடுக்க வேண்டியதுதான்.''

"நான் சம்மதம் கொடுத்தால் போதுமா? செம்பாவின் சம்மதம் வேண்டாமா?''

"உன்னை யார் சம்மதம் கேட்கிறார்கள்? செம்பாவின் சம்மதத்தைத்தான் சொன்னேன். அவளுக்கு நீ புத்தி சொல்லித் திருப்பவேணும்.''

"அப்படி யார் வேறு மாப்பிள்ளை கையில் வைத்திருக்கிறீர்கள்?''

"ஒரு போலீஸ்காரர் புதிதாக வந்திருக்கிறார். ரொம்ப நல்ல மனுஷர். முதல் தாரம் செத்துப் போய்விட்டது. பிள்ளை குட்டி கிடையாது. இரண்டாந்தாரமாகக் கேட்கிறார். வயது அதிகம் ஆகவில்லை. முப்பத்தைந்து நாற்பதுதான் இருக்கும். முப்பது ரூபாய் சம்பளம். மேல் வருமானம் நூறு இருநூறு கூட வரும்.''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கவுண்டரின் மகன் முத்துசாமி "அக்காவைப் போலீஸ்காரருக்குக் கட்டிக் கொடுத்தால் ரொம்ப நல்லது. அவரை அழைத்துக் கொண்டு வந்து இந்த ஊரிலே எனக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் பத்து, பத்து அடி முதுகிலே வெளுக்கச் சொல்லுவேன். வாத்தியார் என்னை இனிமேல் தொட்டு அடிச்சால், போலீஸ்காரரைக் கூப்பிட்டுத் துப்பாக்கியால் சுட்டுவிடச் சொல்லுவேன். அக்கா! அக்கா! நீ போலீஸ்காரரையே கட்டிக் கொள்!'' என்றான்.

எல்லாவற்றையும் சமையல் உள்ளேயிருந்து கேட்டுக் கொண்டிருந்த செம்பா வேகமாக நடந்து வந்து முத்துசாமியின் முதுகில் நாலு அறை அறைந்து விட்டுத் திரும்பிப் போனாள்.

"பார்த்தீர்கள் அல்லவா, உங்கள் மகளுக்கு வருகிற கோபத்தை?''

"யாருக்கு என்ன கோபம் வந்தாலும் சரி! இன்னும் மூன்று நாள் பார்க்கப் போகிறேன்; அதற்குள் செங்கோடன் வந்து செம்பாவைக் கட்டிக் கொடு என்று கேட்க வேண்டும். இல்லாவிட்டால் போலீஸ்காரருக்கு வாக்குக் கொடுத்து விடுவேன். அப்புறம் பிரம்மதேவன் வந்தால்கூட மாற்ற முடியாது!'' என்றார் சிவராமலிங்கக் கவுண்டர்.

• • •

மலையும் மரங்களும் அதிகமில்லாத புன்செய்க் காடுகளில் மாலை நேரம் எப்போதுமே மனோரம்மியமாயிருக்கும். அதிலும் முன்னேர நிலாக் காலமாயிருந்தால் சொல்லவே வேண்டியதில்லை. இந்த உலகமே சொர்க்கத்துக்கு ஈடாகிவிடும்.

செங்கோடக் கவுண்டன் தன் குடிசையை அடுத்துப் போட்டிருந்த வைக்கோற் கட்டின் மீது உட்கார்ந்திருந்தான். வானத்து வைரச் சுடர்

களுக்கு மத்தியில் வெள்ளிப் படகு மிதந்து கொண்டிருந்தது. பச்சைச் சோளப் பயிரின் மீதும் தென்னங் குருத்துக்களின் மீதும் நிலவின் கிரணங்கள் விழுந்து தகதகா மயமாய்ச் செய்தன. குயில்கள் முறை வைத்துப் பல்லவி பாடின. குடிசைக்குள்ளேயிருந்து அடுப்பில் வெந்த வெங்காயக் குழம்பின் மணம் வந்து கொண்டிருந்தது. இதிலெல்லாம் அதிசயமோ அசாதாரணமோ ஒன்றுமில்லை. எப்போதும் போலத்தான். ஆனால் செங்கோடனுடைய மன நிலையில் மட்டும் ஏதோ ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. அது என்ன மாறுதல்? ஏழெட்டு தினங்களாக அவன் அந்தப் பட்டணத்து மனிதர்களுடன் அதிகமாகப் பழகி வருவது உண்மைதான். அவர்கள் ஒன்றும் அவ்வளவு பெரிய மனிதர்கள் அல்ல; யோக்கியர்களாகவும் தோன்றவில்லை. அந்தப் பெண்ணின் நடத்தையும் பேச்சும்கூட அவ்வளவாகத் தனக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் அவர்களைக் காணப் போவதில் அத்தனை ஆத்திரம் ஏன்? அந்தப் பெண்ணின் மோகம் தலைக்கு ஏறிவிட்டதா? மோகம் லாகிரியாக மாறி விட்டதா? அல்லது, அல்லது.... செங்கோடனுக்கு ஒரு கேவலமான சந்தேகம் உதித்தது. லாகிரி வஸ்துக்கள் என்று அவன் கேள்விப் பட்டதுண்டு. கஞ்சா என்றும் அபினி என்றும் பேசிக் கொண்டதைக் கேட்டதுண்டு. உண்மையாகவே அத்தகைய லாகிரிப்பொருள் எதையாவது தனக்கு அவர்கள் கொடுத்து விடுகிறார்களோ? இல்லாவிட்டால், தனக்கு ஏன் அவ்வளவு சிரிப்பு வருகிறது! பாட்டுப் பாடக் கூட அல்லவா வருகிறது? வீதியில் நடக்கும்போதே வானத்தில் மிதப்பது போல் ஏன் தோன்றுகிறது? யாரையாவது பார்த்தால், வாய் சம்பந்தமில்லாத வார்த்தைகளை ஏன் உளறுகிறது? தகாத பேச்சு என்று மனதுக்குத் தெரிந்திருக்கும் போதே வாய் ஏன் அப்படித் தாறுமாறாகப் பிதற்றுகிறது?—இது என்ன தனக்கு வந்து விட்டது? எந்தப் படுகுழியை நோக்கி அவன் போய்க் கொண்டிருக்கிறான்? பொய் மான் கரடு தன்னை வா வா என்று அழைத்து உச்சியில் ஏறச் செய்து கீழே ஒரே தள்ளாய்ப் பிடித்துத் தள்ளி விடுவது போல் ஏன் அடிக்கடி தோன்றுகிறது? ஒரு வேளை தன் மூளைதான்—அப்படி யொன்றும் பிரமாதமான மூளையில்லை—ஆயினும் இருக்கிற மூளையும் சிதறிக் கொண்டிருக்கிறதே? தனக்குச் சித்தப் பிரமை உண்டாகிவிடுமோ? பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் தன்னை



அடைத்து விடுவார்களா? அப்படியானால் இந்த வயல்களின் கதி என்ன? நெல் பயிர்—சோளப் பயிர் என்ன ஆவது? புதைத்து வைத்திருக்கும் பணந்தான் என்ன ஆவது?—ஆகா! அந்த மனிதர்கள் தன்னுடைய குடிசைக்குள் புகுந்து ஏன் அப்படியும் இப்படியும் பார்த்துத் திரு திரு வென்று விழிக்கிறார்கள்? ஒருவேளை...

ஏதோ காலடிச் சத்தம் கேட்கவே செங்கோடன் திடுக்கிட்டு அங்கு மிங்கும் வளைந்து பார்த்தான். அவனை நோக்கி மிகச் சமீபத்தில் ஓர் உருவம் வந்து கொண்டிருந்தது. அது பெண் உருவம். செம்பவளவல்லிதான்! வேறு யார்? அவளைப் பார்த்த அதே நிமிடத்தில் செங்கோடனுடைய உள்ளத்தில் ஞானோதயம் உண்டாயிற்று. வாழ்க்கை என்பது ஒரு பெரிய அலை மோதும் ஏரி; அல்லது காவேரி வெள்ளம் என்று சொன்னாலும் சரிதான். அந்த ஏரி அல்லது காவேரி வெள்ளத்தில் தான் முழுகிப் போகாமல் தன்னைக் காப்பாற்றக் கூடிய தெப்பம் செம்பா. அவளை உடனே தான் பற்றிக் கொள்ள வேண்டும். கூடிய சீக்கிரத்தில் அவளைக் கலியாணம் செய்து கொண்டு விடவேண்டும். தன்னுடைய பாழுங் குடிசையில் அவள் விளக்கேற்றி வைப்பாள். வாழ்க்கை இருட்டில் அவளே குல தீபமாக விளங்குவாள். அவளால் தான் கடைத்தேறலாம். தன் ஜன்மம் சாபல்யமாகும். தனிமை என்னும் சாபக்கேடு போகும். வீட்டுக்கும் வெள்ளாமைக்கும் அவளால் எவ்வளவோ நன்மையுண்டு.

"வா! செம்பா! வா! ஏது இத்தனை நேரங் கழித்து இருட்டிய பிறகு வந்தாய்? அப்பா அம்மா கோபித்துக் கொள்ள மாட்டார்களா?" என்றான் செங்கோடன்.

அதைக் கேட்ட செம்பா திரும்பிப் பத்து அடி தூரம் நடந்து சென்று தென்னங் கன்றுக்குச் சமீபமாகப் போய் நின்றாள்.

"இது என்ன மாய்மாலம்? இத்தனை தூரம் வந்துவிட்டு ஏன் போகிறாய்?" என்றான் செங்கோடன்.

சட்டென்று விம்மல் சத்தம் அவன் காதில் விழுந்தது. உடனே பதைபதைப்புடன் எழுந்து ஓடினான். செம்பாவை அன்புடன் பிடித்து அழைத்துக்கொண்டு வந்து தான் உட்கார்ந்திருந்த வைக்கோற் பொதியில் அவளையும் உட்கார வைத்தான்.

"என் கண்மணி! உன் கண்ணில் கண்ணீர் வருவதை நான் பார்த்துச் சகிக்க மாட்டேன்!" என்று சொல்லி அவளுடைய கன்னத்தைத் தூக்கிப் பிடித்துக் கண்ணீரைத் துடைத்தான்.

"என்னதான் சமாசாரம்? சொல்! உன்னை உன் அப்பன் வீட்டை விட்டுத் துரத்திவிட்டானா?"

செம்பா தேம்பிக் கொண்டே "அப்படிச் செய்தால் பரவாயில்லையே? என்னைக் கொன்று போட்டு விட்டாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால்.." என்று தயங்கினாள்.

"ஆனால் வேறு என்ன? உன்னை எந்தப் பயல் கொல்லத் துணிவான்? உன் அப்பனாயிருந்தாலும் முடியாது. நீ எனக்குச் சொந்தமானவள்..."

"இப்படித்தான் நீ ரொம்பநாளாய்ப் பேசிக் கொண்டிருக்கிறாய். பேசி என்ன பிரயோஜனம்?"

"பின்னே என்ன செய்யச் சொல்கிறாய்? நான்தான் 'இந்த வருஷம் கழியட்டும்; வெள்ளாமை வீட்டுக்கு வரட்டும்; உடனே கலியாணம் வைத்து விடலாம்' என்று சொன்னேனே?"



"அதுவரையில் யார் காத்திருப்பார்கள்? இன்னும் மூன்று நாளைக்குள் நீ வந்து கலியாணப் பேச்சை எடுக்காவிட்டால் அப்பா என்னை வேறிடத்தில் கலியாணம் செய்து கொடுத்து விடப் போகிறார். மாப்பிள்ளை கூடப் பார்த்து விட்டார்!"

"அது யார் அவன்? நான் காதலித்த பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளத் துணிந்து வருகிறவன்? அவனுக்குத் தலையிலே கொம்பா? அவன் என்ன விக்கிரமாதித்ய மகாராஜவா? அல்லது மதனகாமராஜனா?"

"அப்படிப் பட்டவர் யாரும் இல்லை. சின்னம நாயக்கன் பட்டியில் புதிதாகப் போலீஸ்கார ஐயா வந்திருக்கிறாராம். அவர் என்னைக் கலியாணம் செய்து கொள்ளக் கேட்கிறாராம். பரிசத்துக்குப் பணம் கொடுக்கக் கூடத் தயாராயிருக்கிறாராம்!"

செங்கோடன் திடுக்கிட்டுப் போனான். வேறு யாருடைய பெயரையாவது சொல்லியிருந்தால் செங்கோடன் "அவனை விட்டேனா பார்! குத்திவிடுவேன்! கொன்றுவிடுவேன்!" என்று ஆர்ப்பாட்டம் செய்திருப்பான். ஆனால் சிவப்புத் தலைப்பாகைக்காரனோடு யார் சண்டை போட முடியும்? அவனுடைய மனதில் உடனே ஒரு நிச்சயம் ஏற்பட்டது. அதைச் செம்பாவிடமும் வெளியிட்டான்.

"என் கண்மணியே! என் செல்லக் கிளியே! ஆடும் மயிலே! பாடும் குயிலே! உன்னை இன்னொருவன் கட்டிக்கொள்ள நான் விடுவேனா? காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் கொண்டுபோக நான் பார்த்திருப்பேனா? நாளைக்கே உன் தகப்பனாரிடம் போய்க் கேட்டு விடுகிறேன். கலியாணத்துக்குத் தேதியும் வைத்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன். நீ இல்லாமல் இனிமேல் ஒரு விநாடிகூட என்னால் உயிர்வாழ முடியாது!" என்றான் செங்கோடன்.

இந்தமாதிரி 'கிளியே! மயிலே!' என்றெல்லாம் சொல்வதற்கு அவன் சினிமாக்கள் பார்த்தது மட்டும் காரணமில்லை; கஞ்சாவின் போதை இன்னும் சிறிது இருந்ததும் காரணமாகும். ஆனாலும் செம்பவளவல்லிக்கு அவனுடைய பேச்சு அளவில்லாத ஆனந்தத்தை அளித்தது. அவளுடைய ஆனந்தத்தைச் செய்கையினால் காட்டினாள். இருவரும் சிறிது நேரம் கரை காணாத மகிழ்ச்சிக் கடலில் முழுகியிருந்தார்கள். ஏதேதோ அர்த்தமில்லாத வார்த்தைகளைப் பேசினார்கள். ஆனால் அந்த அர்த்தமில்லாத வார்த்தைகள் அமுதத்தைப் போல் இனிமையாக இருந்தன. சட்டென்று செம்பா எழுந்து நின்றாள்.

"நான் இனியும் இங்கே இருப்பது நியாயம் இல்லை. வீட்டுக்கு ஓடவேண்டும். அப்பாவும் அம்மாவும் அம்மன் கோயிலுக்குப் போன சமயம் பார்த்து வந்தேன். அவர்கள் திரும்புவதற்குள் நான் திரும்பிவிட வேண்டும்."

செங்கோடன் தடுத்த போதிலும் அவள் கேட்கவில்லை.

"அப்படியானால் நான் கொஞ்ச தூரம் வந்து உன்னை ஊர் அருகில் கொண்டுவிட்டு வருகிறேன்!" என்று செங்கோடனும் எழுந்தான்.

இருவரும் நெல்வயல் வரப்பின் வழியாக நடக்கத் தொடங்கினார்கள். பத்து அடிகூட அவர்கள் நடந்திருக்க மாட்டார்கள்.

"ஐயோ! அதோ பார்!" என்று செம்பா சுட்டிக் காட்டினாள். அந்தத் திசையைச் செங்கோடனும் உற்று நோக்கினான்.

சோளக் கொல்லையில் சலசலவென்று சத்தம் கேட்டது. முதலில் ஒருநாய் தென்பட்டது. அது 'ளொள்' என்று குரைத்து ஒருதடவை பயங்கரமாக உறுமிற்று. அந்த நாயின் பின்னால் சோளப் பயிருக்கு மேலே ஒரு போலீஸ்காரனின் தலைத் தொப்பி தெரிந்தது. அவன் தோளில் சாத்தியிருந்த துப்பாக்கியின் மேல் முனையும் பயங்கரமாய்க் காட்சி அளித்தது.

செம்பவளவல்லியின் உடல் முழுதும் நடு நடுங்கிற்று. செங்கோடனும் மனங் கலங்கினான். ஐயோ! இது என்ன எதிர்பாராத விபரீதம்! இந்தப் போலீஸ்காரன் இங்கே எதற்காக வருகிறான்? ஒரு நொடிப் பொழுதில் செங்கோடக் கவுண்டனுடைய மனதில் பலவிதமான பீதிகள் வந்து மோதின! அவனுடைய கால்கள் மிகவும் தடுமாறின! (தொடரும்)

ஸ்ரீ ராமகிருஷ்ண உபநிஷதம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

18. சமய சீர்திருத்தம்

நம் நாட்டில் புகழ் பெற்ற பல மகான்கள் அவதரித்து நம்முடைய வழிபாடு முறைகளையும் ஆசாரங்களையும் அவ்வப்போது சீர்திருத்தம் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் நாளா வட்டத்தில் அவர்களுடைய உபதேசங்களின் பயனாக புது சம்பிரதாயங்களும் புது ஜாதிப் பிரிவினைகளும் தோன்றி சீர்திருத்தம் அடைவதற்குப் பதில் மக்கள் பல சம்பிரதாயக் குழாம்களாகப் பிரிந்து போயிருக்கிறார்கள். நல்ல எண்ணத்துடன் ஆரம்பிக்கப் பட்ட சீர்திருத்தங்கள் பிரிவினைகளுக்கும் அகங்காரங்களுக்கும் ஒருவரை யொருவர் இகழ்வதற்கும் வேற்றுமை பாவம் கொள்வதற்கும் காரணங்களாகி விட்டன. ஆராய்ந்து பார்த்தால் நம்முடைய சமய வேறுபாடுகளெல்லாம் சீர்திருத்த முயற்சிகளிலிருந்தே உண்டாயின என்பதைக் காணலாம்.

பகவான் ராமகிருஷ்ணருடைய உபதேசங்களும் முயற்சிகளும் இந்த தோஷத்தினின்று விலகி நிற்கின்றன. எந்த வழிபாட்டு முறையையும் எந்த சம்பிரதாய ஆசாரத்தையும் அவர் குற்றம் சொல்லவில்லை. அனைத்திலும் பிரம்மத்தைக் கண்ட அந்த ஞானி, அனைத்திலும் நன்மையையே கண்டார். அவருடைய உபதேசங்களினால் மக்கள் முன்னேற்றம் அடைந்தார்களே யொழிய அவற்றின் பயனாகப் புதுச் சம்பிரதாயம் ஏதும் நாட்டில் உண்டாகவில்லை.

பூரண ஞானியாயினும் பகவான் ராமகிருஷ்ணர் மூர்த்தி பூஜை வேண்டாம் என்று சொல்லவில்லை. சமாதி நிலை அடைந்த அத்வைதியாயினும் சாதாரணமான கோயில் பூஜைக் கிரமங்களையும் மிக மதித்து உபதேசித்து வந்தார். எந்த தெய்வத்தை எந்த முறையில் வழி படுவதையும் அவர் சரி சமானமாகக் கண்டார்; கண்டு அதற்கிணங்க உபதேசித்தும் வந்தார்.

ஹிந்து சம்பிரதாயத்தில் உயர்ந்த வேதாந்தமும், கூடவே பலவித கிரியைகளும் திருவிழாக்களும் மந்திர தந்திர முறைகளும் இருந்து வருவதற்குக் காரணம் அவர் ஒரு சமயம் எடுத்துச் சொன்னார்: "நெல்லில் முக்கியமான பொருள் அதனுள் இருக்கும் அரிசியே. அரிசியை மூடிக் கொண்டிருக்கும் உமியைக் குத்தி எடுத்து விட்டுத்தான் அரிசியை உணவாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம். ஆனால், மகனே! அரிசி நாள்பட நிற்காது; கெட்டுப்போகும். நெல்லாக வைத்தால் கெடாமல் நிற்கும். அரிசியை வயலில் விதைத்தால் பயிருண்டாகாது. நெல்லை விதைத்தால் தான் முளைக்கும். அரிசிதான் முளைப்பதாயினும் அது உமியால் மூடப்பட்டு நெல்லாக நிலத்தில் பதிந்தால்தான் முளைவிட்டு வளரும். நம்முடைய தர்மத்திற்குக் காப்பாகவும், உயிர் கொண்டு வேர் ஊன்றி வளர்ந்து பயிர் கொடுப்பதற்காகவுமே கிரியைகளும் முறைகளும் சடங்குகளும், திருவிழாக்களும் நெல்லின் உமிபோல் அமைக்கப்பட்டன. சமைத்து உண்பதற்கு உமி வேண்டியதில்லை. அரிசி தான் வேண்டும். ஞானமடைந்தவனுக்குக் கிரியைகளும், திருவிழாக்களும் கோயில்களும் வேண்டியதில்லை. ஆனால் இவையெல்லாம் இல்லாமல் ஞானம் மட்டும் தனித்து உபதேசிக்கப் பட்டு ஹிந்து தர்மமுறையாக வைக்கப் பட்டிருந்தால் அது வேரூன்றிப் பயிராக விளைந்திராது. வயலில் போட்ட அரிசியைப்போல் முளை விடாமல் அழிந்து போயிருக்கும்."

உடலில் ஒரு காயம் ஏற்பட்டால் அது ஆறும் வரையில் அதற்குக் காப்பாக மேலே பொருக்குத் தோன்றுகிறது. உள்ளே காயம் இருக்கும் வரையில் பொருக்கு இருக்க வேண்டும். புண் ஆறுவதற்கு முன் பொருக்கை எடுக்கக் கூடாது. புண்

ஆறிய பின் தானாகவே அது உலர்ந்து வேறு பட்டுவிடும். ஞானம் அடைந்த பின் சடங்குகளும், ஆசாரங்களும், தாமாகவே கழிந்து ஒழிந்துபோம். ஞானம் அடைவதற்கு முன் அவற்றை ஒழிக்கப் பார்ப்பது புண் ஆறுவதற்கு முன் மேற்பொருக்கை எடுத்துப் புண் ஆறுவதைத் தடுப்பது போலாகும்.

ஆசார விதிகளை மதிக்க வேண்டியதில்லை என்று ஞானம் பெற்ற சிலர் எண்ணலாம். ஞானம் உண்மையில் முற்றுவதற்கு முன் ஆசார வழக்கங்களை விட்டுவிடப் பார்ப்பது உசிதமல்ல. புகை போட்டுப் பழுக்க வைத்த பழம் நல்ல இனிப்பாக இராது. நன்றாக முற்றி இயற்கையில் பழுத்த பழமே சரியான சுவை பெறும்.

* * *

ஞானிகளுக்கு ஜாதி வேற்றுமை கிடையாது. ஆனால் ஞானத்தை அடைந்து உண்டாகும் அந்த உரிமையை அவர்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதற்கு ஒரு கதையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்னார்:

கிருஷ்ண கிஷோர் ஒரு சமயம் பிருந்தாவனத்திற்கு யாத்திரை சென்றார். வெகுதூரம் நடந்து தாகம் மேலிட்டு ஒரு தண்ணீர் கிணற்றண்டை நின்றார். அங்கே கிணற்றில் குடம் விட்டு ஒருவன் தண்ணீர் இழுத்துக்கொண்டிருந்தான். "கொஞ்சம் தாகத்திற்குத் தண்ணீர் வார்ப்பாயா?" என்று கிருஷ்ண கிஷோர் அவனை வேண்டிக்கொண்டார். "ஐயா! நான் பறையன், நீங்களோ பிராமணர். நான் எடுத்த ஜலத்தை நீங்கள் குடிக்க முடியாது" என்றான். "அப்பனே! நீ ஹரி நாமம் சொல்ல முடியுமா?" என்று கேட்டார் கிருஷ்ண கிஷோர். "ஆஹா சொல்லுவேன்" என்றான் அவன். "அப்படியானால் ஹரி நாமத்தைச் சொல்லிக்கொண்டே தண்ணீர் இழுத்தாயானால் அந்தத் தண்ணீரை நான் குடிப்பதில் தோஷமில்லை" என்றார். அவ்வாறே அவன் தண்ணீர் இழுத்துக் கொடுத்து அவருடைய தாகத்தைத் தீர்த்தான்.



ஹிந்து தர்மத்தின் அடிப்படையான ஞான-பக்தி மார்க்கங்களை அனுசரித்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் எப்படிச் சீர்திருத்தத்தை உபதேசித்தார் என்பது இதில் நன்றாக விளங்குகிறது.

* * *

"இந்தக் காலத்தில் முக்கிய அம்சங்களைத்தான் ஜனங்கள் வேண்டுகிறார்கள். நீக்கி விடக் கூடிய அனுவசியமான அம்சங்களை விரும்புவதில்லை. ஆனபடியால் சடங்குகளையும் கிரியைகளையும் குறைத்துக் கொள்வதே நன்று" என்றும் காலத்துக் கேற்றபடி பரமஹம்ஸர் உபதேசித்திருக்கிறார்.

மாவைக்கொஞ்சம் குளிர்ந்த தண்ணீரில் முதலில் கரைத்து, பிறகு வெந்நீரோடு கலந்து கொதிக்க வைத்தால் சரியான கஞ்சியாகும். முதலிலேயே மிகச் சூடான ஜலத்தை விட்டால் மாவு கரையாது; கட்டி தட்டி விடும். ஹிந்து சமுதாயம் மிகப் பெரிய சமுதாயம். அதிகச் சூட்டோடு சீர்திருத்தம் செய்ய முயன்றால் மாவு கட்டி தட்டுவது போல், வேறுபட்ட சமயக் குழாம்கள் தோன்றி விடுகின்றன. சீர்திருத்தத்தின் அவசியத்தை நன்றாகக் கண்ட போதிலும், மிக நிதான முறையை அனுசரித்து உபயோகித்தால் தான் புதுச் சமயங்களும் குழாம்களும் உண்டாகாமல் சீர்திருத்த நோக்கம் வெற்றியடைய முடியும்.



ஆசிரியர்: சுதர்சன்] [மொழிபெயர்ப்பு: ரா. வீ.

1. பொக்கிஷ மாளிகை

நடுப்பகல் நேரம். பண்டைய நாகரிகத்துக்கும் கலாசாரங்களுக்கும் பெயர் போன எகிப்து நாட்டின் தலைநகரான நூறு கோட்டை வாசல்கள் கொண்ட தீபா நகரம் சூரிய உஷ்ணம் தாங்காமல் தன் நினைவு இழந்து கருத்து ஒழிந்து மூர்ச்சையுற்றிருப்பது போலக் காணப்பட்டது. கடை வீதிகள், ராஜ வீதிகள், சந்து பொந்துகள், வானை அளாவும் கூட கோபுரங்களும் மாட மாளிகைகளும் கொண்ட வாசஸ்தலங்கள் எங்கு பார்த்தாலும் மயான அமைதி நிலவியிருந்தது. எங்குமே ஜனச் சந்தடி இல்லை; ஜன நடமாட்டமும் இல்லை. சகலவிதமான சுக போகங்களும் சகலவிதமான சௌந்தர்யங்களும் நிறைந்து சதா சர்வகாலமும் மங்களகரமான இன்னிசை காற்றிலே மிதந்துவந்து, மக்களின் மனதை ஆனந்த பரவசத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்த அந்த ஆனந்த நகரத்திலே, எவன் இப்படி மரண அமைதியை மந்திரித்து ஏவி விட்டிருந்தானோ, தெரியவில்லை! மக்கள் அண்ணாந்து ஆதவனை நோக்குவர். ஆனால் அடுத்த கணமே கண் ஒளி மங்கித் தலை குனிந்து விடுவர். வானவெளியிலிருந்து தீப்பிழம்புக்கு ஒப்பாக வெள்ளை வெளேர் என்று ஒரு ஒளி உண்டாகி பூமியில் உள்ள ஒவ்வொரு பொருளையும் மலைப் பாம்பைப் போலச் சுற்றி வளைத்துக் கொண்டு விழுங்க முயற்சித்துக் கொண்டிருந்தது. எகிப்து நாட்டுக் கலாசாரத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கிக் கொண்டிருந்த அரண்மனைகள், ஆலயங்கள், ஆகாயத்தை அளாவும் மினார்கள் முதலியவற்றின் மேல் சிகரத்தைப் பார்க்கும் பொழுது, தீக் கடலிலிருந்து எழும்பும் தீதான் கொழுந்து விட்டு எரிகின்றதோ என்று எண்ணத் தோன்றியது.

ஆனால் அந்தப் படை பதைக்கும் வெய்யிலிலும் பருன் அம்னனின் பொக்கிஷ மந்திரி நல்லத் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த அரசாங்கப் பொக்கிஷ சாலையில் இங்கும் அங்குமாக நடை போட்டுக் கொண்டும் வேலை செய்து கொண்டிருந்த நீக்ரோ அடிமைகளை வேலையைச் சீக்கிரம் முடிக்குமாறு அடிக்கு ஒருதரம் அதட்டிக் கட்டளையிட்டுக் கொண்டும் இருந்தான். ஒரு வருஷத்துக்கு முன்னாலேயே அந்தப் பொக்கிஷ சாலையை நிர்மாணிக்குமாறு பருன் அம்னன் அவனுக்கு உத்தரவிட்டிருந்தான். அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க ஒரே ஒரு வருஷம்தான் அவகாசம் அளித்திருந்தான். எத்தனையோ கஷ்டங்களுக்கும் விஷ்டூரங்களுக்கும், ஆலோசனைக்கும் புனராலோசனைக்கும், ஓயாத ஒழியாத உழைப்புக்கும் சலிப்புக்கும்

பிறகு தல்லத் அந்த மாபெரும் மாளிகையை நிர்மாணித்திருந்தான்.

அந்தக் கட்டிடம் கட்டி முடிப்பதற்கு பருன் அம்னஸ் அவகாசம் அளித்திருந்த ஒரு வருஷத்தின் கடைசி நாள் அன்றோடு முடிவடைந்து விட்டது. அன்று மாலை பாதுஷா அதைப் பார்ப்பதற்காக வரப் போவதாயிருந்தான். ஆனால் அந்த மாளிகையின் உள்புறத்துக் கதவின் வேலை இன்னும் முடிந்தபாடில்லை. பொக்கிஷ மாளிகையின் அந்த அறைக்குள்தான் பருன் அம்னஸ், தானும் தன் முன்னோர்களும் சேகரித்து வைத்திருந்த விலை மதிக்க முடியாத மாணிக்கங்கள், மரகதங்கள், முத்துக்கள், ரத்தினங்கள், வைரங்கள் முதலியவற்றை மிக்க பந்தோபஸ்துடன் வைத்து விட்டுக் கவலை ஒழிந்து மன நிம்மதியுடன் வாழத் திட்டம் இட்டிருந்தான். தீபா நகரத்து மண்ணில் மாலைக் கதிரவனின் மஞ்சள் நிழல் விழுவதற்கு முன்பாகப் பொக்கிஷ மாளிகையின் அந்த அறைக் கதவு தயார் ஆகாவிட்டால், பருனின் கையில் உள்ள தங்கச் செங்கோல் தன் தலையைப் பதம் பார்த்து எமனுலகுக்கு வழி காட்டிவிடும் என்பதைத் தல்லத் நன்கு அறிந்திருந்தான். பருனின் எதிரே வாய் திறக்க எவனுக்குத் தான் துணிவு உண்டாகும்?

ஆதவன் சிறிதும் சோம்பலின்றித் தன் அலுவல்களை அக்கறையாகக் கவனித்துக் கொண்டிருந்தான். ஆகவே கடைசியில் தல்லத் எதிர்பார்த்திருந்த அந்த மாலைப் பொழுதும் வந்தே விட்டது. அந்த மாலைப் பொழுதைப் பின் தொடர்ந்து தானே தல்லத்துக்கு மன நிம்மதியும் இன்பமும் அளிக்கவல்ல நாட்களும் வந்து கொண்டிருக்க வேண்டும்? அன்று மாலைப் பொழுதும் போய்,



மன்னனின் செங்கோலின் அடிக்கும் தப்பிவிட்டால், அப்புறம் அவனுடைய மனம் நிம்மதியுற வேண்டியதுதானே!

பரூன் தன்னுடைய நூறு மெய்க்காப்பாளர்களும், ஆயிரம் நீக்ரோ அடிமைகளும் புடைசூழக் குறித்த நேரத்தில் தன் பொக்கிஷ மாளிகைக்கு விஜயம் செய்தான். தல்லத் அடிக்கு ஒரு தடவை தலை வணங்கித் தன் கைகளை மார்பில் ஒற்றி ஒற்றிச் சலாம் செய்தான்; பரூனின் காலடிகளில் விழுந்து பணிந்தான். ஆனால் பரூன் அவனுடைய அந்த வணக்கத்தையும் மரியாதையையும் சிறிதளவு கூடப் பொருட்படுத்தியதாகக் காட்டிக் கொள்ளவில்லை. அவன் தல்லத்தை வெகு ஏளனமாக ஒரு முறை நோக்கினான். அவன் பார்த்த அந்தப் பார்வையில், 'நான்தான் கடவுள், நீ என் சிருஷ்டியான ஏராளமான ஜீவராசிகளுக்குள் கேடிலும் கேடு கெட்ட ஒரு ஜீவன்!' என்று சொல்லி எள்ளி நகையாடும் பாவனை தொனித்தது. பிறகு அவன் இலேசாக இளநகை புரிந்தவாறே தல்லத்தை நோக்கி, "மாளிகையின் வேலையெல்லாம் முடிந்துவிட்டதல்லவா?" என்று கேட்டான்.



தல்லத் தலை வணங்கி, "மாளிகையின் வேலையெல்லாம் முடிந்துவிட்டது" என்று மிகவும் தாழ்மையான குரலில் சொன்னான்.

"சரி, அப்படியானால் நமக்கு மாளிகை முழுவதையும் சுற்றிக் காட்டு. நீ என்னவெல்லாம் செய்திருக்கிறாய், பார்ப்போம்!" என்று அதிகார தோரணையில் கட்டளையிட்டான் பரூன் அம்னஸ்.

தல்லத் மிகவும் மரியாதையுடன் பரூனை மாளிகையைச் சுற்றிக் காட்ட அழைத்துச் சென்றான். ஆனால் அப்பொழுது அவனுடைய உள்ளமும் உடலும் ஒருங்கே நடுங்கிக் கொண்டிருந்தன. உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆமாம், அவன் எதற்காக அப்படிப் பயந்து சாகவேண்டும்? கதிகலங்கிப் பதட்டமுற்றுப் போகவேண்டும்? அவனுடைய ஆவி இனம் தெரியாத பயத்தினால் இப்படித் துடியாய்த் துடித்துக் கொண்டிருப்பானேன்? ஏனெனில் அவனுடைய வாழ்க்கை அச்சமயம் மரணத்தின் கையில் உயிருக்கு ஊசலாடித் தவித்துக் கொண்டிருந்தது! மரண தேவதை எப்பொழுது எப்படி தன் தளிர்க் கரங்களால் அவன் வாழ்க்கையின் கழுத்தை நெரித்து விடுமோ! யார் கண்டார்கள்? உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை 'வெடவெட' வென்று நடுங்க, அவன் பரூனைப் பார்த்தவண்ணம் பின்னால் அடி எடுத்து வைத்து நடந்தவாறே, பொக்கிஷ மாளிகை முழுவதையும் சுற்றிக் காட்டினான்.

பரூன் அரசாங்கத்துப் புதிய பொக்கிஷ சாலையின் ஒவ்வொரு பகுதியையும் பார்வையிட்டான். பொக்கிஷ சாலையின் ஒவ்வொரு வேலைப்பாடும் பரூனுக்கு மிகவும் மனதுக்குப் பிடித்திருந்தது. அதன் நிலைப்படிகளிலும், நிலைக் கதவுகளிலும் செய்யப்பட்டிருந்த சித்திர விசித்திர வேலைப்பாடுகளைக் கண்டு அவன் பிரமித்தே போய்விட்டான். விசாலமான அறைகளின் சுவர்களிலே தீட்டப்பட்டிருந்த எகிப்து நாட்டுக் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட எழில் ஓவியங்கள் உயிர் ஓவியங்களாகத் திகழ்ந்தன. மாளிகைக்குள்ளே நுழைந்த பரூனுக்கு, தான் ஏதோ ஒரு இன்ப லோகத்தில் சஞ்சரிப்பது போலத் தோன்றியது. மாளிகையின் மண்டபத்தைத் தாங்கி நிற்கும் எழில் மிகுந்த தூண்களின் வேலைப்பாடே மனிதனைப் பிரமித்துத் திகைக்க வைத்தது என்றால் அதிகம் சொல்லுவானேன்? மாளிகையின் அழகைப் பார்த்துக் கொண்டே வந்து கொண்டிருந்த பரூனுக்கு, கலைச் செல்வம் நிறைந்து காணப்படும் இந்த மாளிகையிலே பொருட்செல்வத்தைப் போற்றிப் பாதுகாப்பது மிகவும் நியாயமான காரியம் என்றே பட்டது.

பொக்கிஷ சாலையின் பொலிவிலே சொக்கிப் போயிருந்த பரூன், மகிழ்ச்சி பொங்கும் மதி வதனத்துடன், வாசற்படியருகிலே வந்து நின்றான். பிறகு தல்லத்தின் பக்கம் திரும்பி, "தல்லத்! உன் பொறுப்பை உணர்ந்து நீ நன்றாக வேலை செய்திருக்கிறாய், நாம் உன் மீது மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளுவதுடன், உன் வேலையைப் பெரிதும் பாராட்டுகிறோம்" என்றான்.

அந்தச் சொல்லைக் கேட்டபின்தான் தல்லத்துக்குத் தன் தலை தப்பியது என்ற

நம்பிக்கை வந்தது. ஒரு வருஷ காலமாக அவனுடைய களை பொருந்திய முகத்தைக் களை யிழக்கச் செய்திருந்த கவலைக் கோடுகள் கலைந்து மறைந்தன. அவனுடைய வருத்தம் தோய்ந்த கண்களில் வாழ்க்கையின் ஒளி ஒரு வருஷம் கழித்து மீண்டும் உயிர் பெற்று வந்தது. இன்று கவலையற்று மன நிம்மதியுடன் ஆனந்தமாகத் தூங்கலாம் என்ற எண்ணம் அவனுள்ளத்துக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் இணையற்ற இன்பத்தையும் அளித்தது.

பருன் தன் பிரதான மந்திரியைத் தன்னெதிரே அழைத்தான். மந்திரி தன்னெதிரே வந்து தலை வணங்கியதும் அவன் "மந்திரி! இந்தக் கட்டிடத்தைக் காவல் புரிய ஓராயிரம் சிக்ரோவர்களை நியமிக்க வேண்டும். இரவு நேரங்களில் அவர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் ஒவ்வொரு தீவட்டியும் ஒவ்வொரு ஊதலும் கொடுக்க வேண்டும். யாராவது ஒருவன் இந்த மாளிகைக்குள்ளே கால் வைத்துவிட்டால், உடனே அச்செய்தி சேனாதிபதிக்கு அறிவிக்கப்பட வேண்டும். அத்துடன் குற்றவாளி கைது செய்யப்படவும் வேண்டும். இது உன் பாதுஷாவின் ஆக்ஞை. புரிந்ததா?" என்றான்.

பிரதான மந்திரி வணக்கம் தெரிவிப்பதற்காகத் தலை குனிந்தான். ஆனால் அவன் குனிந்த தலையை நிமிர்த்துவதற்கு முன்பாகவே, பருன் மீண்டும், "இந்த மாளிகைக்குள் தன்னையும் தனக்கு மிகவும் அத்தியந்தமாக வேண்டியவர்களையும் தவிர வேறு யாரும் காலடி எடுத்து வைப்பதை உன் பாதுஷா விரும்பவில்லை. ஆகவே, 'இந்த மாளிகைக்குள் யாராவது தப்பித் தவறிக் காலடி எடுத்து வைத்தால் கூட அவன் மரண தண்டனைக்கு உள்ளாவான். எந்த மாபெரும் சக்தியும் அவனை மீட்க முடியாது' என்று பறை சாற்றச் சொல். அரச குமாரர்களானாலும் சரி, வருங்காலத்தில் எகிப்து நாட்டு மன்னனாக முடிசூடிக் கொள்ளப் போகும் இளவரசனாயிருந்தாலும் சரி, உத்தரவை மீறி உள்ளே நுழைய முற்பட்டால், அவனுக்கும் மேலே சொன்ன தண்டனைதான் அளிக்கப்படும் என்பதை நினைவில் வைத்துக்கொள்" என்றான்.

பிரதான மந்திரி அவன் கட்டளைக்குக் கீழ்ப் படிந்ததைக் காட்டிக் கொள்ளும் பொருட்டு மீண்டும் ஒருமுறை தலை வணங்கினான்.

பிறகு பருன் தன் பொக்கிஷ மந்திரியான தல்லத் பக்கம் திரும்பி, "தல்லத்! நீதான் நமது பொக்கிஷ மந்திரி. இனியும் நீயேதான் அந்தப் பதவி வகித்து வருவாய். நம் எதிரே எந்த விஷயத்துக்கும் நீதான் பொறுப்பாளி. நம்மிடம் சிறிதும் தயவு தாட்சண்யம் கிடையாது. நாம் மிகவும் கடுமையாக நடந்து கொள்ளுவோம் 'என்பது உனக்குத் தெரிந்த விஷயமே. ஆகவே ஒவ்வொரு விஷயத்திலும் 'கண் குத்திப் பாம்பாக நீ நடந்து கொள்ள வேண்டும். தெரிந்ததா?" என்றான்.

தல்லத் தலை வணங்கி அவன் ஆக்ஞையைச் சிரமேற் கொண்டான். அடுத்த கணமே பருன் அவனைப் பார்த்து, "தல்லத்! நம் பொக்கிஷ மனைத்தையும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இந்த மாளிகையில் கொண்டுவந்து பந்தோபஸ்தாக வைக்க நீ ஏற்பாடு செய்து விடவேண்டும், புரிந்ததா?" என்றான்.

அதைச் சொல்லி முடித்ததும், பருன் தீப்பொறி பறக்கும் கண்களால் நாற்புறமும் ஒரு முறை சுற்றிப் பார்த்தான். அடிமைகள், மெய்க் காப்பாளர்கள், தல்லத், பிரதான மந்திரி அனைவரும் தலை வணங்கினர். பருன் தன் தங்கச் செங்கோலைக் கையில் ஏந்திக் கொண்டான். அடுத்த கணமே அவ்விடத்தைவிட்டு வெளியேறினான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் அரண்மனையின் உப்பரிகையின் மீது நின்ற வண்ணம், தன் உத்தரவு நகரத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒலிப்பதைக் கேட்டான். அந்த உத்தரவைக் கேட்போர் அனைவரும் கதி கலங்கி நடுநடுங்கிப் போய், பொக்கிஷ மாளிகையிருக்கும் திக்கைப் பீதியுடன் பார்ப்பதையும் கண்டான். (தொடரும்)

பாப்பா மலர்

மூன்று சகோதரிகள்

ஸாம்நாம்

2. இளவரசியின் கவலை

பட்டமகிஷிக்குப் பிறந்திருப்பது 'பெண் குழந்தையாயிற்றே! போனால் போகட்டும்!' என்று அந்த விஷமச் சகோதரிகள் அதைச் சும்மா விடவில்லை. வழக்கம் போலவே அதைக் கூடையில் வைத்து மூடிக் கால்வாயில் மிதக்க விட்டனர். வழக்கம் போலவே அந்தக் கூடை நந்தவனத் தலைவன் கண்ணில் பட்டது. அது பெண் குழந்தையாயிருக்கக் கண்டு அவன் சந்தோஷமடைந்தான். தனது இரு வளர்ப்புப் பையன்களுக்கு ஒரு தங்கை கிடைத்தது கண்டு நந்தவனப் பிரபு ஆனந்தம் அடைந்தான். குழந்தையைத் தன் மனைவியிடம் ஒப்படைத்து, அதை நன்றாக வளர்க்கும்படி கேட்டுக்கொண்டான். அவளும் தனக்கு இரு பையன்களும் ஒரு பெண்ணும் பிறந்திருப்பது போல் எண்ணி மூன்று குழந்தைகளையும் வளர்த்து வந்தாள்.

மூன்றாவது பெண் குழந்தையையும் ஆற்றில் அனுப்பிவிட்ட இரு சகோதரிகள் சுல்தானிடம் சென்று தங்கள் தங்கை இந்தத் தடவை ஒரு மரக் கட்டையைப் பெற்றதாகக் கூறினர்.

இதைக் கேட்ட சுல்தானின் கோபத்திற்கு அளவே இல்லை. தன் மனைவி பேயாகவோ பிசாசாகவோ இருக்க வேண்டும் என்று முடிவு செய்தான். அவளை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்று தீர்மானித்தான். ஆனால் மூதல் மந்திரி அப்படிச் செய்யக்கூடாது என்று வற்புறுத்தினான். கடைசியில் சுல்தான் அதற்கு ஒப்புக்கொண்டு, தன் மனைவியைச் சிறையிலடைத்து, அவளைப் பார்க்கும் மக்கள் அவள் மீது காறி உமிழ வேண்டும் என்று தண்டனை விதித்தான். தங்கள் சதி பலித்து விட்டது கண்டு அந்தச் சகோதரிகள் இருவரும் சந்தோஷமடைந்தனர். பட்டமகிஷி அரண்மனை மகுதியில் ஒரு தனி அறையில் அடைக்கப்பட்டாள். அவளுக்கு மிகவும் கரடு முரடான உடை அளிக்கப்பட்டிருந்தது. மகுதிக்குத் தொழுவதற்கு வருபவர்கள் சிறை ஜன்னல் வழியாக அவள்மீது காறி உமிழ்ந்தார்கள். தன் ஆசையெல்லாம் நிறைவேறாமல், இந்த அவமதிப்புக்கு உள்ளானதை நினைத்து அந்தப் பெண் அழுது அழுது இளைத்துப் போனாள்.

பட்டமகிஷி சிறையில் வாடுகையில் அவளுடைய மூன்று குழந்தைகளும் சிறப்பாக வளர்ந்து வந்தன. நந்தவனத் தலைவனும் அவன் மனைவியும் குழந்தைகளை அன்புடன் வளர்த்து வந்தனர். உலகத்தில் கற்க வேண்டிய எல்லாக் கலைகளையும் கற்பிப்பதற்கு அவன் தக்க ஆசிரியர்களை நியமித்திருந்தான். மூன்று குழந்தைகளில் ஆண் குழந்தைகளுக்கு பஹ்மான், பர்விஸ் என்றும், பெண் குழந்தைக்குப் பாரிஜாதம் என்றும் பெயரிட்டிருந்தான். அரச குடும்பத்தில் பிறந்த குழந்தைகளுக்குத் தான் இம்மாதிரி அழகிய பெயர்கள் வைப்பது வழக்கம். இரு இளவரசர்களும் பார்ப்பதற்கு அழகாயிருந்ததுடன், புத்திசாலிகளாகவும் இருந்தனர். ஆசிரியர்கள் கற்பித்த எல்லாக் கலைகளையும் கற்று அவற்றில் முதன்மை யுற்

சென்ற வாரக் கணக்குக்கு விடை:

உதாரணமாக $12\frac{1}{2}$ஐ $12\frac{1}{2}$ஆல் பெருக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். $12\frac{1}{2}$இல் $\frac{1}{2}$ஐத் தள்ளி விட்டால் மீதி யிருப்பது 12தானே? அந்த 12ஐயும் அதற்கு அடுத்த எண்ணான 13ஐயும் பெருக்கினால் வரும் விடை 156 அல்லவா? அந்த 156 உடன் $\frac{1}{4}$ஐச் சேர்த்துக் கொண்டால் வரும் விடைதான் சரியான விடை. அதாவது கணக்கின் விடை $156\frac{1}{4}$. இதேபோல $\frac{1}{2}$யில் முடியும் எந்தக் கணக்கையும் போடலாம்.

திருந்தனர். இளவரசியோ அழகின் அவதாரம்போல் வளர்ந்திருந்தாள். பேச்சில் மிக்க சாமர்த்தியம் வாய்ந்தவளா யிருந்தாள்.

தனது வளர்ப்புக் குழந்தைகள் அரச குடும்பக் குழந்தைகள் போல் வளர்ந்து விட்டதைக் கண்டு நந்தவனத் தலைவன் ஆனந்தம் அடைந்தான். அவர்களுடைய படிப்பும் பயிற்சியும் முடிந்ததும், அவர்களுடைய தகுதிக்குத் தகுந்த நல்ல மாளிகை கட்டி அதில் அவர்கள் வசிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று முடிவு செய்தான். அவ்வாறே, நகரத்துக்குச் சற்று தூரத்தில் தான் வாங்கியிருந்த ஒரு அழகிய நந்தவனத்தின் மத்தியில் மிகவும் அழகான மாளிகை கட்டினான். அந்த மாளிகையில் எல்லாச் சௌகரியங்களும் அமைத்தான்.

மாளிகை கட்டி முடிந்ததும் நந்தவனத் தலைவன் தன் எஜமானாகிய சுல்தானிடம் சென்றான்.

"மன்னாதி மன்னரே, இவ்வளவு நாட்கள் தங்களுக்கு விசுவாசமாக வேலை செய்தேன். எனக்கு வயதாகி விட்டது. இனி ஓய்வு பெற்றுக் கொள்ள அனுமதிக்க வேண்டும்" என வேண்டிக் கொண்டான். சுல்தானும் அனுமதிக்கவே மூன்று குழந்தைகளுடன் புதிதாகக் கட்டிய மாளிகைக்குச் சென்று அங்கு வாழ்ந்து வந்தான்.

புது வீடு போகு முன் அவன் மனைவி இறந்து விட்டாள். அந்தத் துக்கம் தாங்காமல் புது மாளிகை சென்ற சில நாட்களுக்கெல்லாம் நந்தவனத் தலைவனும் இறந்து விட்டான்.

இளவரசர்களும் இளவரசியும் நந்தவனத் தலைவன்தான் தங்கள் தந்தை என்று நம்பி வந்தார்கள். அதனால் அவன் இறந்தது பற்றி வெகு நாட்கள் வரை அவர்கள் துக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். நந்தவனத் தலைவன் திடீரென இறந்து போனதால் அவர்களுடைய பிறப்பு வளர்ப்பைப் பற்றிய விவரத்தை அவன் யாரிடமும் சொல்ல முடியவில்லை. நந்தவனத் தலைவன் ஏராளமான சொத்துக்களை விட்டுப் போனதால் மூவரும் புது மாளிகையில் கவலையின்றிக் காலங் கழித்தனர்.

இவ்வாறு இன்ப வாழ்க்கை நடத்தி வருகையில் ஒரு நாள் இளவரசர்கள் வேட்டையாட வெளியே சென்றார்கள். அப்போது தெய்வ பக்தியுள்ள ஒரு கிழவி ஒருத்தி அந்த வீட்டுக்கு வந்தாள். வீட்டில் பாரிஜாதம் மாத்திரம் தனியா யிருந்தாள்.


கிழவி பாரிஜாதத்தைப் பார்த்து, "அம்மா! உங்கள் வீட்டுப் பிரார்த்தனை அறையின் ஒரு மூலையில் நான் பிரார்த்தனை செய்ய இடம் கொடுப்பாயா?" என்று கேட்டாள். இளவரசி அதற்கு அனுமதி யளித்ததோடு மட்டும் அல்லாமல், வேலையாட்களை அழைத்துக் கிழவிக்கு வேண்டிய உதவி புரியும்படியும் கட்டளை யிட்டாள்.

கிழவி பிரார்த்தனை செய்தவுடன் வேலையாட்கள் தோட்டத்தையும்



மாளிகையையும் அவளுக்குக் காட்டினர். எல்லாவற்றையும் பார்த்து முடிந்தவுடன் அவளை இளவரசி முன் அழைத்துச் சென்றனர். இளவரசி பாரிஜாதம் அவளை அன்புடன் வரவேற்றுக் கொஞ்சம் பழமும் பணியாரமும் சாப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அவளும் அதற்கு இணங்கினுள். அவள் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அவளுடைய பக்தி வாழ்க்கையைப் பற்றித் தனக்குக் கூறும்படி பாரிஜாதம் கேட்டாள். அந்த விவரங்களைக் கிழவி சொல்லி முடித்தவுடன், தங்களுடைய மாளிகையையும் அதைச் சுற்றியுள்ள நந்த வனத்தையும் பற்றிக் கிழவியினுடைய அபிப்பிராயம் என்ன என்று இளவரசி கேட்டாள். அதற்குக் கிழவி, "அம்மணி! மாளிகை அருமையாயிருக்கிறது. ஆனல் இதில் மூன்று குறைகள் இருக்கின்றன" என்று பதில் கூறினுள்.

அந்த மூன்று குறைகளும் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் இளவரசிக்கு உண்டாயிற்று. "அந்த மூன்று குறைகள் என்ன?" என்று கிழவியைக் கேட்டாள். கிழவி பதில் கூறினுள்: "அம்மணி, முதலில் இந்த மாளிகைக்கு ஒரு பேசும் பறவை வேண்டும். அந்தப் பறவையின் இனிய குரல் கேட்டு சுற்றியுள்ள பாடும் பறவைகளெல்லாம் அதனுடன் சேர்ந்து இன்னெலி பரப்பும். இரண்டாவதாகப் பாடும் மரம் ஒன்று வேண்டும். அந்த மரத்தின் ஒவ்வொரு இலையும் நல்ல கீதம் பாடும். மூன்ருவது மஞ்சள் நீர். இந்த நீரில் ஒரு சொட்டை ஒரு பாத்திரத்தில் தெளித்தால் அது பொங்கி அந்தப் பாத்திரம் நிறைந்து விடும், ஆனல் பாத்திரத்திலிருந்து வழியாது."



இந்த அதிசயங்களைக் கேட்ட இளவரசி ஆச்சரியமடைந்தாள். உடனே கிழவியைப் பார்த்துக் கேட்டாள்: "என் அருமைத் தாயே! நீங்கள் கூறுவதைக் கேட்டால் ஆச்சரியமாயிருக்கிறது. இந்த விஷயங்களை எனக்குத் தெரிவித்ததற்காக நன்றி செலுத்துகிறேன். ஆனல் இவை எங்கு கிடைக்கும் என்பதைக் கூறினுல் உங்களுக்கு நான் மிக்க கடமைப் பட்டவளாவேன்." இதற்கு அந்தக் கிழவி பதில் கூறினுள்: "அம்மணி, என்னிடம் தாங்கள் காட்டிய அன்பிற்கு இந்தத் தகவல் கூட நான் கொடுக்க மாட்

டேனு? இந்த நாட்டின் எல்லையில் இந்தியா செல்லும் வழியில் அவற்றைக் காணலாம். இந்த அதிசயப் பொருள்களைக் கொண்டுவர நீங்கள் அனுப்பும் ஆள் உங்கள் வீட்டிற்கு எதிரேயுள்ள வழியே செல்ல வேண்டும். மொத்தம் இருபது நாட்கள் பிரயாணம் செய்ய வேண்டும். இருபதாவது நாள் முதன் முதலாக யார் கண்ணில் படுகிறார்களோ அந்த ஆசாமியை இந்த மூன்று அதிசயப் பொருள்களும் எங்கு இருக்கின்றன என்று கேட்டால் அவன் சொல்லுவான்.''

இந்தத் தகவலைச்சொல்லி விட்டு அந்த பக்தி வாய்ந்த கிழவி இளவரசியிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே சென்று விட்டாள். கிழவி பிரிந்ததிலிருந்து இளவரசி இந்த மூன்று அதிசயப் பொருள்களைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். அவற்றை அடைவதில் கஷ்டங்கள் அனுபவிக்கவேண்டி வருமே என்று கவலைப்பட்டாள். இப்படி யோசனையில் ஆழ்ந்திருக்கையில் அவளுடைய சகோதரர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் தங்கள் சகோதரி கவலையுடன் இருப்பதைக் கண்டார்கள். (தொடரும்)



ஒரு நாட்டுப்புறத்தான் பழக் கடைக்குச் சென்று ஒரு கூடை மாம்பழம் வாங்கினான். அவனுக்கு அதிகமாகக் கணக்குத் தெரியாது. யாராவது கூடையில் எத்தனை பழங்கள் இருக்கின்றன என்று கேட்டால், அவன் இரண்டு இரண்டாகக் கூறு போட்டால் ஒரு பழம் மிஞ்சுகிறது. மூன்றாகக் கூறு போட்டால் இரண்டு பழங்கள் மிஞ்சுகின்றன. நான்காகக் கூறு போட்டால் மூன்று பழங்கள் மிஞ்சுகின்றன. ஐந்தாகக் கூறு போட்டால் நான்கு பழங்கள் மிஞ்சுகின்றன. ஆறாகக் கூறு போட்டால் ஐந்து பழங்கள் மிஞ்சுகின்றன. ஏழாகக் கூறு போட்டால் ஒன்றுமே மிஞ்சவில்லை. எட்டாகக் கூறு போட்டால் ஏழு பழங்கள் மிஞ்சுகின்றன என்று சொன்னான். அப்படியானால் அவனுடைய கூடையில் இருந்த மொத்த மாம்பழங்கள் எத்தனை?

காரியத்தில் கண்!

ராமு எப்போதும் சுத்தமாக இருப்பான். சட்டையையோ வேட்டியையோ அழுக்காக்கவே மாட்டான்.

ஒரு நாள் அவனுடைய அப்பா எங்கிருந்தோ இரண்டு மாம்பழங்கள் கொண்டு வந்து, அவற்றை நறுக்கி, ராமுவுக்கும் அவன் தங்கை கோமுவுக்கும் சரிசமமாகக் கொடுத்தார். ராமு ஒரு நொடியில் எல்லாவற்றையும் தின்று விட்டான். ஆனால், கோமுவோ பெரும் பகுதியை அப்படியே இன்னும் தட்டில் வைத்திருந்தாள். ராமு அதைப் பார்த்து விட்டு, "அப்பா, அவள் இன்னும் நிறைய வைத்திருக்கிறாள். எனக்குக் கொஞ்சம் வாங்கிக் கொடு" என்றான்.

"அது முடியாது. நீ ஏன் உன் பங்கைச் சீக்கிரமாகத் தின்றாய்?" என்று கேட்டார் ராமுவின் அப்பா.

உடனே ராமு அழ ஆரம்பித்தான். கீழே விழுந்து புரண்டு 'ஐய்யோ முறையோ' என்று கத்தினான்.

ராமுவின் அப்பா யோசித்தார். சிறுவனின் அழுகையை நிறுத்த அவருக்கு ஒரு வழி புலப்பட்டது. உடனே, "டேய், ராமு, சட்டை பாழாய்ப் போகுமடா!" என்றார்.

அவ்வளவுதான்; ராமு அழுகையை 'கப்'பென்று நிறுத்தி விட்டு எழுந்தான். அவசரமாக உள்ளே ஓடினான். அவன் என்ன செய்யப் போகிறானோ என்று எல்லோரும் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

ராமு ஒரு பாயை எடுத்துக் கொண்டு ஓடி வந்தான். அதைக் கீழே விரித்தான். அதன் மீது விழுந்து புரண்டு கொண்டே மீண்டும் பலமாக இரைந்து அழத் தொடங்கினான்.

யார் செய்த சூழ்ச்சி?

ஏ. கே. பட்டுசாமி

அறைக்கு வெளியே 'ஓ'வென்று பெரிய ஆரவாரம் கேட்டது. சோணாசலம் நிமிர்ந்து பார்த்தான். அவனது நூற்றுக்கணக்கான நண்பர்கள் அத்தனை பேரும் வாசற்படியருகில் வந்து நின்றனர்.

"மிஸ்டர் சோணாசலம், உனக்கு எங்கள் பாராட்டைத் தெரிவித்துக் கொள்வதற்காக வந்திருக்கிறோம்" என்றார்கள் அவர்கள்.

சோணாசலத்துக்கு ஒன்றும் புரியவில்லை. எதற்காக இத்தனை பேரும் தன்னைப் பாராட்ட வேண்டும் என்று புரியாமல் விழித்தான் அவன். பி. ஏ. ரிஸல்ட் என்னவோ பூஜ்யம்! அப்படியிருக்க ஏன் இப்படிக் கத்துகிறார்கள்?

"எதற்காக எனக்குப் பாராட்டு?" என்று கேட்டான் அவன்.

இந்தக் கேள்விக்கு ஒவ்வொருவனும் ஒவ்வொரு பதில் கூறினான்.

"எதற்கா? பேப்பரில் வந்திருக்கிறதே அதற்குத்தான் அப்பா!"

"பலே சோணாசலம்! ஒரு பரீக்ஷை இல்லாவிட்டால், இன்னொரு பரீக்ஷையில் பாஸ் பண்ண வேண்டியதுதானே! அது தான் சரி!"

சோணாசலத்தின் திகைப்பு இன்னும் அதிகமாயிற்று.

"என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? ஏதாவது 'ஸப்ளிமெண்டரி லிஸ்டில்' நான் பாஸ் என்று போட்டிருக்கிறதா?" என்று கேட்டான் அவன்.

"என்னப்பா, சும்மா ஒன்றும் தெரியாதவனைப் போலப் பாவனை பண்ணுகிறாய்? யார் அந்த சாந்தா தேவி? எங்கேயப்பா பிடித்தாய்?" என்று கேட்டுக் கொண்டே அன்றைய 'குடும்பக் கலகன்' இதழை அவன் முன்னால் வீசி யெறிந்தான் சங்கரன்.

அதிலிருந்த ஒரு விளம்பரம் சிவப்புப் பென்ஸிலால் கோடிடப்பட்டிருந்தது. சோணாசலம் அதை ஆவலாக வாசித்தான்.

"கூசேலா மில்ஸ் மானேஜிங் டைரக்டர் பிச்சையப்ப முதலியாரின் ஒரே புதல்வன் திருவாளர் சோணாசலத்திற்கும், அழகாபுரம் பிரபல மிராசுதார் அளகிரிசாமி முதலியாரின் ஏகப் புதல்வி திருமதி சாந்தா தேவிக்கும் விவாகம் ஏற்பாடாகியிருக்கிறது!"

"ஏண்டா சோணாசலம், 'விவாகம் ஏற்பாடாகி யிருக்கிறது' என்றால் என்னடா அர்த்தம்?" என்று கேட்டான் ஒருவன்.

சோணாசலத்திற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "இதெல்லாம் யார் வேலை? உண்மையைச் சொல்லுங்கள்! இந்த விளம்பரத்தை யார் கொடுத்தது?"

"அடேய், சோணாசலம் ஒன்றுமே தெரியாததுபோல் நடிக்கிறபோது அசல் க்ளார்க் கேபின் மாதிரி இல்லையா?" என்றான் இன்னொரு மாணவன்.

"போங்கடா வெளியே! என் வயத்தெரிச்சலை ஏன் கிளப்புகிறீர்கள்!" என்றான் சோணாசலம்.

ஆனால் அவனது தோழர்கள் போவதாக இல்லை. கடைசியில் சோணாசலம்தான் தன் அறையை விட்டு எழுந்து வெளியே சென்றான்.

அவனது மூளை குழம்பிப் போய்விட்டது. இது யார் செய்த வேலை? அவனது நண்பர்களின் சூழ்ச்சியா? அல்லது தகப்பனாரின் வேலைதானோ? அவனால் எதையும் நிச்சயிக்க முடியவில்லை. விவாகம் வேண்டியதேயில்லை யென்றும் பிரம்மசாரியாகவே தான் இருக்கப் போவதாகவும் அவன் கடந்த மூன்று வருட காலமாக வற்புறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கையில் தகப்பனார் இப்படிச் செய்யலாமா?

நேராகத் தபாலாபீஸுக்குச் சென்று தந்தைக்குக் காரசாரமாக ஒரு கடிதம் எழுதினான். தன் சம்மதமின்றி இதுபோல் முடிவு செய்ய அவருக்கு என்ன உரிமை இருக்கிறது என்றுகூட அதில் ஒரு வரி எழுதி யிருந்தான்.

இரண்டாவது வேலையாக 'குடும்பக் கலகன்' ஆபீஸை நோக்கி விரைந்தான். வழி நெடுக அவனது மனதில் சிந்தனை மின்னல்கள் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. யார் இந்தச் சாந்தா தேவி? உண்மையில் அது மாதிரி ஒருத்தி இருக்கிறாளா இல்லையா?......சே! இருக்

தால் நமக்கென்ன? இல்லாவிட்டால் என்ன? நமக்கு முக்கியமாகத் தெரிய வேண்டியது இந்த விளம்பரம் விளையாட்டா அல்லது வினையா என்பதுதான்!

'குடும்பக் கலகன்' பத்திரிகையின் ஆசிரியரும் மானேஜருமான 'குண்டோதரன்' கோபம் கொந்தளித்துக் கொண்டிருந்த சோணாசலத்தின் முகத்தைக் கண்டு திடுக்கிட்டுப் போனார்.

"ஏனய்யா? இந்த விளம்பரத்தைப் போடச் சொல்லி உமக்கு அனுப்பியது யார்?" என்று கேட்டான் சோணாசலம்.

"கொஞ்சம் பொறுமையாக உட்கார்ந்து பேசுங்கள் ஸார்! நீங்கள் யார்? என்ன சமாசாரம்? எந்த விளம்பரத்தைச் சொல்லுகிறீர்கள்?"

"ஓய்! உம்மிடம் வம்பளக்க எனக்கு நேரமில்லை! இதோ பாரும், இந்த விவாக விளம்பரத்தை உமக்கு யார் அனுப்பியது?"

'குண்டோதரன்' அவர்கள் சோணாசலம் காண்பித்த விஷயத்தைப் பார்த்துவிட்டு "எதனால் அதை விளம்பரம் என்கிறீர்கள்? அது விளம்பரமாகவும் இருக்கலாம். அல்லது செய்தியாகவும் இருக்கலாம்!"

"அது செய்தியோ புழுதியோ,—யார் அனுப்பியது?"

"அதைத் தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்."

"ஏன்?"

"அனுப்பிய ஆசாமியின் பெயரைத் தனிப்பட்ட எவருக்கும் வெளியிடக் கூடாதென்பது எங்கள் 'பாலிஸி' ஸார்!"

"உமது பாலிஸியும் நீரும் பாழாய்ப் போங்களய்யா! இது என்னைப் பற்றிய விளம்பரம்! தெரிந்து கொள்ள எனக்கு உரிமையுண்டு!"


"உம்மைப் பற்றியதா?"

"ஆமாம், இதில் கண்டுள்ள சோணாசலம் நான்தான்!"

"அப்படிச் சொல்லுங்கள். உமக்குத்தானா விவாகம்? 'குடும்பக் கலகனின்' மனமார்ந்த வாழ்த்துக்கள் தங்களுக்கு உரித்தாகுக!"

சோணாசலத்திற்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. "உமது பேரில் மானநஷ்டத்திற்கு வழக்குப் போட்டு விட்டுத்தான் மறுவேலை!" என்று கூறிவிட்டு, கோபாவேசத்துடன் வெளியேறிய சோணாசலம், அப்போதுதான் ஆசிரியரின் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்த ஒரு அழகிய நங்கையின் மீது மோதிக் கொண்டான். அவள் அவனை ஒரு வினாடி நின்று பார்த்துவிட்டு உள்ளே போய்விட்டாள். சோணாசலத்துக் கிருந்த மனக் கொதிப்பில் 'ஸாரி' என்று ஒரு வார்த்தை அகராதியில் இருக்கிறது என்பதைக் கூட மறந்து விட்டான்.





ஆனால் நாலடி நடந்ததும் தன் தவறை உணர்ந்து கொண்டான். அவளிடம் தன் அஜாக்கிரதைக்காக மன்னிப்புக் கேட்காமல் அங்கிருந்து போக அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. அவள் திரும்பி வரட்டும் என்று சிறிது நேரம் நின்றான்.

உள்ளே சென்ற அந்த எழில் மடந்தை அவனைப் போலவே அந்த ஆசிரியரிடம் உரத்த குரலில் ஏதோ சச்சரவு செய்து கொண்டிருந்தாள். வெளியே வந்தபோது அவளது சிவந்த வதனம் கோபத்தினால் இன்னும் அதிகமாகச் சிவந்திருந்தது. அழகிய பெண்களுக்குக் கோபம் வந்தால் முகம் இன்னும் அதிக அழகாக மாறும் என்ற தத்துவத்தைச் சோணாசலம் அப்போதுதான் அறிந்து கொண்டான்.

வைத்த விழி வாங்காது வியப்புடன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அவன், எதற்காக நின்று கொண்டிருக்கிறோம் என்பதையே மறந்து போய் விட்டான். அவள் அவனைத் தாண்டிச் சென்றதும் நினைவு வரப் பெற்றவனாய், "ஸாரி! ஸாரி!" என்று சொல்லிக் கொண்டே அவள் பின்னால் ஓடினான்.

அழகி அவனைத் திரும்பிப் பார்த்தாள். இன்னுமொரு முறை, "ஸாரி!" என்றான்.

அவள் தன் 'ஸாரியை'ப் (புடவையை) பார்த்துக் கொண்டாள்.

"புடவையைச் சொல்லவில்லை! என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டேன்!"

"எதற்கு?" என்று கேட்டாள் அவள்.

"நீங்கள் உள்ளே போகிற போது அஜாக்கிரதையாக வந்து உங்கள் மீது மோதிக் கொண்டேனே அதற்குத்தான்! அப்போது 'ஸாரி' சொல்ல மறந்து விட்டேன்!......"

அவள் திடீரென்று சிரித்தாள். "அட பாவமே! அதற்காகவா இத்தனை நேரம் இங்கே நின்று கொண்டிருந்தீர்கள்?"

"அதற்காக மட்டுமில்லை! இந்த உதவாக் கரை ஆசிரியரிடம் இப்போதுதான் நான் சண்டை போட்டு விட்டு வந்தேன்! என்னைப் போலவே தாங்களும் அவருக்குக் கொடுத்த 'டோஸ்'களைச் சந்தோஷமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்!"

"ஓ! அப்படியா!......கொஞ்சமும் பொறுப்பை உணராத மனிதர்!" என்று கூறிக்கொண்டே மாடிப்படிகளில் இறங்கிச் சென்றாள் அவள்.

"நான் மான நஷ்டத்திற்கு வழக்குப் போட்டு அவரைப் படுத்துகிற பாட்டில் மனுஷனுக்குத் தன்னால் புத்தி வர வேண்டாமா?" என்று கூறிக் கொண்டே அவளைத் தொடர்ந்தான் அவன்.

"ஆமாம்...இந்த ஆசிரியர் மீது தங்களுடைய புகார் என்னவென்பதை..."

"அப்படி ஒன்றும் பிரமாதமான புகார் அல்ல! சாதாரண விஷயம்தான்!"

சோணாசலம் திக்கிக் கொண்டே பேசினான்.

"எதற்குக் கேட்கிறேனென்றால், அவர் மீது நான் தொடரப் போகும் வழக்குக்குத் தங்கள் விஷயமும் ஒரு பாயிண்டாக உதவலாம் அல்லவா? தங்களுக்கு ஆக்ஷேபனையில்லையென்றால் நாமிருவரும் சேர்ந்து..."

"சேர்ந்து?..."

"இல்லை இரண்டு பேரும் சேர்ந்தே அவர் மீது வழக்குப் போடலாமே என்றேன்!"

"ஓ! வழக்குத் தொடரும்படியாக விஷயம் அவ்வளவு 'ஸீரியஸ்' இல்லை! ரொம்ப தாங்க்ஸ்!"

இருவரும் பஸ் ஸ்டாண்டை அடைந்தனர். நல்ல வேளையாக அவர்களிருவரையும் தவிர ஸ்டாண்டில் வேறு ஒருவருமில்லை. 'அவளது பெயரையும் விலாசத்தையும் தெரிந்து வைத்துக் கொள்!' என்று உத்தரவிட்டது அவனுடைய மனம்.

அதோ பஸ்ஸும் வந்து விட்டது. "தங்கள் பெயர் என்ன? தாங்கள் எங்கே குடியிருக்கிறீர்கள்?" என்று அவசரமாகக் கேட்டான் சோணாசலம்.

"ஓ! நானு! என் பெயர் காந்தாமணி... இண்டர்......மஹாராணிக் கல்லூரி...... ஹாஸ்டல்!"

"நான் அடிக்கடி அந்த ஹாஸ்டலுக்கு எதிரேயுள்ள கடற்கரைக்கு வருகிற வழக்கமாயிற்றே!"

இதற்குள் காந்தாமணி பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். சோணாசலம் தனியே விடப்பட்டான்.

"அப்பா சோணாசலம்! 'கங்க்ராஜுலேஷன்ஸ்!' இப்போது பேசிக் கொண்டிருந்தாயே அது யாரப்பா, திருமதி சாந்தா தேவியா!" என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தான் அவனது நண்பன் கோபாலன். சோணாசலம் அவனை முறைத்துப் பார்த்துவிட்டுப் பதில் பேசாமல் அங்கிருந்து அகன்றான்.

கோபாலன் மூலமாக அவன் பஸ் ஸ்டாண்டில் ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்த விஷயம் ஹாஸ்டல் பூராவும் பரவி விட்டது. நண்பர்கள் அவனை உயிரோடு பிய்த்து விட்டார்கள்.

அன்றிரவு பூராவும் நம் கதா நாயகனுக்குத் துளிக்கூடத் தூக்கம் வரவில்லை.

மறு நாள் அவனுடைய தந்தையிடமிருந்து கடிதம் வந்தது. அவனுடைய கடிதம் அவருக்குப் போய்ச் சேரு முன்பே அவர் எழுதி விட்டிருந்தார்.

"சிரஞ்சீவி சோணாசலத்திற்கு...இன்று 'குடும்பக் கலகலை'ப் பார்த்தேன். ரொம்ப சந்தோஷம்! எங்களிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமலேயே நீ விவாகத்துக்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டு விட்ட போதிலும் நாங்கள் அதைப் பற்றி வருத்தப்படவில்லை. பெண் வீட்டாரின் குலம் கோத்திரங்களை விசாரித்தாயா? நல்ல அந்தஸ்துடையவர்கள்தானா? விவரம் எழுதினால் நான் மேற்கொண்டு ஏற்பாடு செய்கிறேன். இப்படிக்கு — பிச்சையப்ப முதலியார்."

அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. விளங்காத ஒரு மர்மமாக இருந்தது இது. கடைசியில் காந்தாமணியைக் கலந்து யோசித்துக் கொண்டு மறுநாளே கேஸ் போட வேண்டியதுதான் என்று நினைத்தான்.

அன்று மாலை சோணாசலம் மஹாராணிக் கல்லூரிக்கெதிரேயுள்ள கடற்கரையில் வட்டமிட்டுக் கொண்டிருந்தான். இரவு வரையில் காத்திருந்தும் அவள் அந்தப் பக்கம் வரவேயில்லை. கடைசியில் மனமுடைந்து திரும்பிப் போக நினைத்த சமயத்தில் கரையோரத்தில் அவள் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

"குட்நைட் மிஸ் காந்தா!"

"ஓ! தாங்களா! குட்நைட்!"

"நான் தினமும் இங்கே வருவது வழக்கம் என்று சொன்னேனே!"

இருவரும் மணலில் உட்கார்ந்து சற்று நேரம் வரை வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

பேச்சுவாக்கில் சோணாசலம் அவளைப் பார்த்து, "விவாகத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன, காந்தா?" என்று கேட்டு வைத்தான்.

"விவாகம் என்பது ஒரு விலங்கு" என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறி முடித்தாள் காந்தா.

"நானும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன், காந்தா! ஆனால் தாய் தந்தையரின் குறுக்கீடின்றி ஒரு ஆணும் பெண்ணும் மனமொன்றி வரித்துக்கொண்டால் அப்படி நடைபெறும் விவாகத்தை விலங்கென்று கூறமுடியாதென்று இப்போது அபிப்பிராயப்படுகிறேன்! நீ என்ன சொல்லுகிறாய்?"

இந்தச் சமயத்தில் திடீரென்று "ஏய் பீஷ்மாச்சாரி!" என்று ஒரு குரல் கேட்டது.

சோணாசலம் திடுக்கிட்டுத் திரும்பினான். அருகிலிருந்த படகின் மறைவிலிருந்து யாரோ இருவர் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.



"வருவது என் அண்ணா சாம்பசிவம்!" என்றாள் காந்தா.

சோணாசலம் வாயடைத்துப் போய் அப்படியே மௌனமாக இருந்தான்.

சாம்பசிவம் அவன் அருகே வந்து, "என்னப்பா, அருணாசலம்!" என்றான் சிரித்துக் கொண்டே.

"இவர் பெயர் அருணாசலமா? சோணாசலமில்லையா?" என்று வியப்போடு கேட்டாள் அந்த அழகி!

"ஆமாம் சாந்தா! இவன் பெயர் சோணாசலம்தான்! ...... அப்பா சோணாசலம்! இவள்தான் என் தங்கை சாந்தாதேவி. காந்தாமணியல்ல!" என்று கூறிவிட்டு மறுபடியும் சிரித்தான் சாம்பசிவம்!

"எய்! இதெல்லாம் நீ செய்த வேலை தானா?" என்று சீறினான் சோணாசலம்.

"கோபித்துக் கொள்ளாதே அப்பா! உன்னைப் போல்தான் இவளும் விவாகமே வேண்டாமென்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தாள். இப்போதுதான் இரண்டு பேரும் மனமொத்து வசித்துக் கொண்டீர்களே!" என்று கூறிக் கண்ணைச் சிமிட்டினான் சாது சாம்பசிவம்.

சாந்தாவும் சோணாசலமும் ஒன்றாகச் சேர்ந்து 'கடகட' வென்று சிரித்தனர்.

மறு தினம் ஹாஸ்டல் கட்டிடமே அதிர்ந்துபோய் விட்டது.

"பீஷ்மாச்சாரி ஸார்! விவாகம் எந்த ஊம் தேதி?"

"சேச்சே, சோணாசலத்தை என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்? தெற்கே உதிக்கிற சூரியன் வடக்கே உதித்தாலும் அவன் பிரதிக்ஞை தவற மாட்டான்!"

"சோணாசலம், அந்த மான நஷ்ட வழக்கு என்றைக்கப்பா வாய்தா?"

"அடே, 'ஸெட்' போட்டு விட்டானா? எனக்குத் தெரியாதே!"

சோணாசலம் பதிலே பேசவில்லை.


* * *

சோணாசலத்தின் விவாகத்திற்கு முதல் அழைப்பு ஸ்ரீமான் 'குண்டோதரன்' அவர்களுக்குத்தான். காலேஜ் நண்பர்கள் 'தெளரீ கல்யாணம்' பாட, கல்யாணம் வெகு விமரிசையாக நடந்ததாகக் 'குடும்பக் கலகனின்' அடுத்த இதழ் புகைப்படங்களுடன் வர்ணித்திருந்தது!

'மான நஷ்ட' ஈடாக மேற்படி பத்திரிகைக்குச் சம்பந்திகள் இருவரும் நாலாயிரம் ரூபாய்க்குச் 'செக்' அனுப்பி வைத்ததாகக் கேள்வி!



ஜூன் மாதம் 29-ம் தேதி நடந்த சென்னை ஹோட்டல்காரர் சங்கத்தின் ஆண்டு விழாவில் சிற்றுண்டி விருந்து: நட்டுகள் காலியாக இருப்பதைக் கவனிக்கவும்!



ஒரு காதலனும் காதலியும் அன்று தான் சேர்ந்து தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்திருந்தனர்.

முதல் நாள் மாலை அழகுச் சாதனங்கள் அடங்கிய அழகான பெட்டியொன்றை வாங்கிக் கொண்டு வந்து அவள் கையில் கொடுத்தான் அவன்.

அவள் புன்னகை பூத்தாள்; அந்தப் புன்னகையிலே அவன் தன் கவலைகளையெல்லாம் மறந்தான்.

மறுநாள் பட்சணங்கள் நிறைந்த பொட்டணமொன்றைப் பையில் வாங்கிப் போட்டுக் கொண்டு வந்து அவள் கையில் கொடுத்தான் அவன்.

அவள் புன்னகை பூத்தாள்; அந்தப் புன்னகையிலே அவன் தன் கவலைகளையெல்லாம் மறந்தான்.

அடுத்த நாள் அவன் வரும்போதே, "இன்று என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று நீண்ட சடை ஆட, காதில் அணிந்திருந்த குண்டலங்கள் ஆட, அவள் ஓடோடியும் வந்து கேட்டாள்.

"ஆப்பிள்! அதன் வர்ணத்தோடு இன்று உன்னுடைய கன்னத்தின் வர்ணத்தை ஒப்பிட்டுப் பார்க்கப் போகிறேன்!" என்றான் அவன் பெருமையுடன்.

அவள் புன்னகை பூத்தாள்; அந்தப் புன்னகையிலே அவன் தன் கவலைகளையெல்லாம் மறந்தான்.

அதற்கடுத்த நாள், "இன்று......?" என்று கொஞ்சலோடு கேட்டு அவள் நிறுத்தினாள்.



"ரோஜாப் பூ......!" என்று சொல்லி, அவனும் நிறுத்தினான்.

"ஆஹா! இந்தப் பூவின் அழகே அழகு!" என்றாள் அவள். அதை வாங்கித் தன் தலையில் லாகவமாகச் சூடிக் கொண்டே.

"இருந்தாலும் உதிராத உன் மெல்லிதழ்களுக்கு முன்னால் உதிரும் இந்தப் பூவிதழ்கள் என்ன செய்யும்?" என்றான் அவன் சிரித்துக் கொண்டே.

அவள் புன்னகை பூத்தாள்; அந்தப் புன்னகையிலே அவன் தன் கவலைகளையெல்லாம் அறவே மறந்து மகிழ்ந்தான்.

அதற்கும் அடுத்த நாள், "இன்று என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? எங்கே காட்டுங்கள், பார்க்கலாம்?" என்று செவ்விதழ்கள் விரிய, வெண்பற்கள் வெளியே தெரிய, ஆவலுடன் கேட்டுக் கொண்டே அவள் அவனுக்கு அருகில் வந்தாள்.

அன்று அவனிடம் காசில்லை; ஆகவே கையை விரித்தான்.

அவ்வளவுதான்; அவளுடைய வெண் பற்களைச் செவ்விதழ்கள் மூடின; அன்று ஏனோ அவள் புன்னகை பூக்கவில்லை!



அவன் தன் கவலைகளை மறப்பதற்காகத் தோட்டத்துப் பக்கம் சென்றான். அங்கிருந்த ஒரு முல்லை மலரை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே, ஏதோ யோசித்தபடி நின்றான்.

"நானும் ஒரு மலர்தானே? என்னைப் பார்ப்பதற்குப் பதிலாக அந்த மலரை ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

அவன் சொன்னான்: "என்னிடமிருந்து ஒன்றையும் எதிர்பாராமலே அந்த மலர் என்னைக் கண்டு புன்னகை பூக்கிறது!"

—விந்தன்.

இரண்டு தோழர்கள்

க. நா. சுப்பிரமணியம்

இது வெறும் கதை என்றுதான் பலருக்கும் தோன்றும்—ஒப்புக் கொள்கிறேன். ஆனால் என் கண் முன்னாலேயே நடந்தது. முழுவதும் உண்மை என்கிற உத்தரவாதத்துடன்தான் நான் கதையைத் தொடங்க வேண்டியதாக இருக்கிறது. இந்த மாதிரி விஷயங்களில் நானும் சில வாரங்களுக்கு முந்தி வரையில். நம்பிக்கையற்றவன்தான்! ஆனால் இப்போது நம்பத்தான் வேண்டியதாக இருக்கிறது—என்ன செய்வது?

நாலைந்து வருஷங்களாக என் வீட்டிலே இருந்து கொண்டு ஒரு பையன் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் பெயர் ராமு. இப்போது அவனுக்கு வயசு பதினாறாகி விட்டது. எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் இவ்வருஷம் நல்ல மார்க்குகளுடன் தேறிவிட்டான். அவனுக்குப் பரீக்ஷை தேறிய கதைதான் இது. ஆனால் கதை என்றால் கதை அல்ல; உண்மை.

* * *

ராமு எனக்குத் தூர பந்து. அவன் பெற்றோர் ரொம்பவும் ஏழைகள். பையன் எஸ். எஸ். எல். ஸி. என்கிற ஸ்வர்க்க வாசல் தாண்டி குமாஸ்தா லோகம் என்கிற ஸ்வர்க்கத்தை—லக்ஷிய பூமியை அடைந்து விட வேண்டுமென்பது அவனுடைய பெற்றோரின் விருப்பம். அவனுடைய படிப்பையும் நடத்தையையும் அவர்களுக்குத் திருப்திகரமாகக் கவனித்துக் கொள்வேன் என்கிற நம்பிக்கையில் அவனை என்னிடம் விட்டு வைத்திருந்தார்கள்.

நடத்தையைப் பற்றிய வரையில் அவனிடம் பிசகு சொல்லவே முடியாது. ரொம்பவும் நல்ல பையன். பரம சாது. எதிர்த்து வாயாடுவது என்றால் என்ன என்றே அவனுக்குத் தெரியாது. கள்ளங் கபடமில்லாமல் பேசுவான். எது சொன்னாலும் மறு வார்த்தை பேசாமல் செய்வான். என்னைவிட என் மனைவி ராஜிக்கு அவனிடம் பிரியம் அதிகம். சொந்தத் தம்பியையும்விட அவனிடம் அதிகப் பரிவு காட்டுவாள். காலாகாலத்திலெல்லாம் அவன் வயிறு நிறையச் சோறு போட்டு விடுவாள். இது ஒன்றுதான் அவனிடம் குறை என்று சொல்ல முடியும்—கொஞ்சம் சாப்பாட்டு ராமன். அதனால் என்ன?

படிப்பிலே அவனைச் சொல்லிப் பயனில்லை. அவன்மேல் வஞ்சம் கிடையாது. அகப்பட்ட நேரமெல்லாம் விழுந்து விழுந்துதான் படிப்பான். வீடு அதிரத் தவளை மாதிரி உரக்கப் பாடம் பாடமாகப் படிப்பான். இரவு எல்லோரும் தூங்கிய பிறகு, சில சமயம் பன்னிரண்டு மணி வரைக்கும் கூடப் படிப்பான். ஆனால் படித்ததொன்றும் அவனுடைய களிமண் மூளையில் ஏறாது! அவன் படித்து விட்டு வருகிற பாடத்தில் அதே சமயம் கேள்வி கேட்டால்கூட அவனால் பதில் சொல்ல முடியாது. கவனம் அவ்வளவு! ஆறாவது பாரம் வரட்டும், பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டேன் நான். எஸ். எஸ். எல். ஸி பரீக்ஷைக்கு இரண்டு மாதம் இருக்கும்போது உட்கார்ந்து இரவு பகலாக அவனுக்கு எல்லாவற்றையும் கரைத்துப் புகட்டி விடலாம் என்று எனக்கு எண்ணம்.

படிப்பு வரவில்லையே தவிர ராமுவை அசடு என்று சொல்லிவிட முடியாது. கடை கண்ணிக்குப் போய் வருவதெல்லாம் என் வீட்டில் அவன் இருந்த வரையில் அவன்தான் செய்து வருவான். சாமர்த்தியமாகத்தான் செய்வான்—குற்றம் சொல்லும்படியாகவே இருக்காது.

தன் வயதுப் பையன்களுடன் அதிகமாகச் சேரமாட்டான். ஆனால் அவன் வகுப்பில் அவன் வயதுப் பையன் ஒருவன்—அவன் பெயரும் ராமுதான். இருவரும் அத்தியந்த நண்பர்கள்—இணை பிரியாத தோழர்கள். அந்த ராமுவும் ஏழைதான்—ஆனால் அநாதை. மாமா வீட்டில் போட்ட சோற்றை நாய் மாதிரி தின்று விட்டு, பெற்றோர் அன்பை உணராமல் வளர்ந்து கொண்டிருந்தான். சமயம் நேருகிற போதெல்லாம் இரண்டு ராமுகளும் சேர்ந்துதான் இருப்பார்கள்.

குண விசேஷங்கள் உருவம், தோற்றம் நடை உடை பாவனை, வயசு, எல்லாவற்றிலுமே இரண்டு பேரும் ஒன்றுதான். ஆனால் இருவருக்கும் ஒரு விஷயத்தில் மட்டும் பெரிய வித்தியாசம் இருந்தது. எங்கள் வீட்டு ராமு படிப்பில அந்த வகுப்பில் கடைசி என்று சொல்ல முடியாது—தேறக் கூடியவர்களில் கடைசி என்று சொல்லலாம். ஆனால் அந்த ராமுதான் வகுப்பில் எல்லாப் பாடங்களிலும் முதல். இத்தனைக்கும் அவன் மாமா வாசிப்பதற்குப் பாடபுஸ்தகங்கள் கூட வாங்கித் தரமாட்டார்.

இப்படி இரண்டாவது பாரத்திலிருந்து ஐந்தாவது பாரம் வரையில் இரண்டு ராமுக்களும் நெருங்கிய தோழர்களாகப்

படித்து வந்தார்கள். ஐந்தாவது பாரத்திலும் தேறி, ஆறாவது பாரத்திற்கும் இருவரும் வந்து விட்டார்கள். எஸ். எஸ். எல். சி. வகுப்பல்லவா? இருவருமே பொறுப்புடன் படித்து வந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த ராமுவின் விஷயத்தில் படிப்பு பலன் அளிக்கும்போல் இருந்தது. எங்கள் வீட்டு ராமுவின் விஷயத்தில் பலன் தராதுபோல் இருந்தது. அவ்வளவு தான். இருவரும் சில சமயம் சேர்ந்தும் படிப்பார்கள்.

2

கிறிஸ்துமஸ் லீவுக்குப் பிறகு அந்த ராமு ஏனோ தெரியவில்லை—பள்ளிக்கூடத்துக்குத் திரும்பவில்லை. "நாளை வருவான், நாளை வருவான்" என்று எங்கள் ராமு காத்திருந்தான். வரவில்லை. ஒரு வாரம் கழித்து ராமுவின் மாமா வீட்டிற்குப் போய் விசாரித்ததில்தான் விஷயம் தெரியவந்தது. லீவில் போன ராமு, எங்கேயோ காவேரியில் நீந்தப் போய் ஆற்றில் மூழ்கி இறந்து விட்டானாம்!

கை இழந்தவன்போலாகி விட்டான் எங்கள் ராமு. படித்தாலும் புரிந்து கொள்ளாதவன். இப்போது படிப்பதே அரிதாகி விட்டது. தன் புஸ்தகங்களைப் பிரித்து வைத்துக் கொண்டு, மனம் எங்கெல்லாமோ ஓட, பிரமித்தவன் போல, பேயடித்தவன் போல, உட்கார்ந்திருப்பான். நான் அவன் மனதைத் திருப்பிப் படிப்பில் செலுத்த முயன்றதெல்லாம் கூடப் பயன் தரவில்லை. 'சரிதான். இந்த வருஷம் போகட்டும்; அடுத்த வருஷம் தானாக மனம் தேறிவிடுவான்' என்று நான் அவனை அதிகமாக வற்புறுத்தாமல் இருந்து விட்டேன்.

தினம் உத்ஸாகமில்லாமல் பள்ளிக்கூடம் மட்டும் போய் வந்து கொண்டிருந்தான். மற்றப்படி முன்போலெல்லாம் அவன் சாப்பிடுவது கூடக் கிடையாது. வீட்டு வேலைகளைக் கூட அவன் அதிகமாகக் கவனித்துக் கொள்வது கிடையாது. நானும் ராஜியும், "பாவம்! அன்பு நிறைந்த தோழனை இழந்து விட்டவனை அதிகமாக எதுவும் சொல்லக்கூடாது" என்று விட்டு விட்டோம்.

பரீக்ஷைக்கு இரண்டு வாரங்கள் இருக்கும்போது ஒரு நாள் மாலை அவன் கையில் ஒரு கட்டுப் புஸ்தகங்கள், நோட்டுப் புஸ்தகங்களுடன் வந்தான்.

"ஏதடா ராமு, இதெல்லாம்?" என்று நான் கேட்டேன்.

"ராமுவினுடையது. வாங்கிண்டு வரணும்னு எனக்குத் தோன்றியது. வாங்கிண்டு வந்தேன்" என்றான் ராமு.

"...ம்... உங்கிட்ட இல்லையா, இந்தப் புஸ்தகங்களெல்லாம்?" என்று கேட்டேன் நான்.

சிறிது நேரம் தயங்கினான் எங்கள் ராமு. பிறகு சொன்னான்: "என்னவோ இதை எல்லாம் வாங்கிண்டு வரணும்னு தோணித்து; வாங்கிண்டு வந்தேன்" என்றான் மீண்டும்.

பாவம்! தன் சிநேகிதனின் ஞாபகார்த்தமாகத் தன்னிடம் அவனுடைய புஸ்தகங்களும் நோட்டுப் புஸ்தகங்களுமாவது இருக்கட்டும் என்று ஆசைப்படுகிறான் என்று எண்ணிக் கொண்டேன். இருந்துவிட்டுப் போகட்டுமே!

"ராமுவுடைய மாமாவுக்கு இதற்கெல்லாம் ஐந்து ரூபாய் வேண்டுமாம்" என்றான் ராமு.

'ஐந்து ரூபாயா? அவரிடமே திருப்பி எறிந்துவிடு!' என்று சொல்ல முதலில் எண்ணினேன். பிறகு ராமுவின் முகத்தைப் பார்த்தேன். "சரி. ஐந்து ரூபாயைக் கொண்டுபோய்க் கொடுத்துவிடு; ராஜியைக் கேட்டு வாங்கிண்டு போ!" என்றேன். ராமு முகம் மலர உள்ளே போய்விட்டான்.

இந்தச் சம்பவத்துக்கு ஏழெட்டு நாட்களுக்குப் பிறகுதான் நான் கவனித்தேன். ராமு இப்பவெல்லாம் உரக்கப் படிப்பதே கிடையாது. படித்தானானால்—அதுவே எனக்குச் சந்தேகமாகத்தான் இருந்தது. மனசிற்குள்தான் படித்துக் கொண்டான். நான் அவனுக்கு வருஷ ஆரம்பத்தில் வாங்கிக் கொடுத்த புஸ்தகங்களை அவன் தொடுவதே கிடையாது. இறந்துபோன ராமுவின் புஸ்தகங்களை



யும் கோட்டுப் புஸ்தகங்களையும் பிரித்து வைத்துக் கொண்டு மணிக்கணக்காகப் பேயறைந்தவன் போல உட்கார்ந்திருப்பான். நான் கவனிப்பதைக் கவனித்தால் சில சமயம் திடுக்கிட்டு விழித்தெழுவான். நான் கவனிப்பதைக் கவனிக்காமலே இருந்து விடுவான் பல தடவைகளில்.

பரீக்ஷை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஒருநாள் இரவு எங்கள் ராமு படித்துக் கொண்டிருந்ததை வெகு நேரமாகக் கவனித்துக்கொண்டிருந்த ராஜி சொன்னாள்: "ராமு கையை வைக்காமலே, பக்கம் புரளுகிறதே!" என்றாள்.

"போடி அசடே!" என்றேன் நான்.

"அதென்னவோ, இதற்கு முந்திகூட நான் நாலைந்து தடவை பார்த்துவிட்டேன். காற்றில்லாத போதுகூட ராமுவுக்கு முன்னால் இருக்கிற புஸ்தகத்தை யாரோ கண்ணில் படாத ஒருவர் புரட்டுகிற மாதிரி இருக்கிறது. பக்கங்கள் தானாகப் புரளுகின்றன!" என்றாள் ராஜி.

"உனக்குப் பைத்தியம்தான் பிடித்துவிட்டது!" என்றேன் நான். பின்னால் நடந்ததை எல்லாம் கவனித்துச் சேர்த்துப் பார்க்கும்போதுதான் அவள் சொன்னதில் ஏதோ விஷயம் இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

பரீக்ஷைக்கு முதல் நாளும் இப்படித்தான். "என்னடா படித்தாய், ராமு?" என்று நான் கேட்டபோது "ஒன்றுமே படிக்கவில்லையே!" என்று அந்த நிமிஷம் வரை புஸ்தகத்தின் முன் உட்கார்ந்திருந்த ராமு பதில் அளித்தான். எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. படிக்காமல் புஸ்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு என்னதான் செய்து கொண்டிருந்தானோ?

ராமுவாகவே சொன்னான். "ராமு மட்டும் இருந்தானானால்—எப்படிப் படிப்பான்! எனக்கும் சொல்லித் தருவானே!" என்றான்.

"அவனை நினைத்துக் கொண்டாவது நீ நன்றாகப் படித்துப் பாஸ் பண்ண வேண்டாமா? படித்திருக்கிறாயா? பாஸ் பண்ணி விடுவாயா?" என்று கேட்டேன்.

"என்னவோ!" என்றான் ராமு.

3

எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைகள் முடிந்து விட்டன. அன்றன்று கேள்வித்தாளை ராமுவிடமிருந்து கையில் வாங்கி அவனைப் பரீக்ஷித்துப் பார்த்தேன். கேள்வித் தாள்களிலிருந்த ஒரு கேள்விக்காவது அவனால் பதில் சொல்ல இயலவில்லை. "என்னடா எழுதியிருக்கிறாய்?" என்று கேட்டால் "என்ன எழுதினேனோ, தெரியவில்லை!" என்றான்.

எனக்குப் புரியவில்லை. 'எப்படியாவது நடக்கட்டும்; பார்த்துக் கொள்ளலாம்' என்று விட்டுவிட்டேன்.

பரீக்ஷைகள் முடிந்து ராமு அவனுடைய ஊருக்குப் போன பிறகு ராமுவின் உபாத்தியாயர் கோபாலய்யரைத் தற்செயலாகச் சந்தித்தேன். அவர் ராமுவை விசாரித்தார். "ஊருக்குப் போய்விட்டானா? சரிதான்; பரீக்ஷையில் குனிந்த தலை நிமிராமல் ரொம்பவும் நன்றாக எல்லாக் கேள்விகளுக்கும் பதில் எழுதியிருக்கிறான் என்று ஹாஸ்டல் சூபரின்டெண்டாக இருந்த ராமசாமி நாயுடு சொன்னார்" என்றார்.

"அப்படியா!" என்றேன் நான்.

பரீக்ஷை முடிவுகள் வந்தவுடன் ராமு தேறிவிட்டான் என்று தெரிந்தது. எஸ். எஸ். எல். ஸி. புஸ்தகங்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்த பிறகுதான் தெரிந்தது—எங்கள் ராமு நானூற்றைம்பது மார்க்குகளுக்கு மேல் வாங்கி, அவன் பள்ளிக்கூடத்திலே முதல்வகை, ராஜதானியிலே முதல் நூறு பேர்வழிகளுக்குள் இருந்தான்.

ராமு வந்திருந்தான். பரீக்ஷை முடிவுகளைப் பார்த்து அவனே ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தான்.

ராஜி சொன்னாள்: "பரீக்ஷை தேறி இத்தனை மார்க்குகள் வாங்கியிருப்பது நம்ப ராமு இல்லை!" என்றாள்.

"பின் யாராம்?" என்று கேட்டேன் நான்.

"அவன் தோழன் ராமுதான்! படித்தது, பரீக்ஷை எழுதியது, மார்க் வாங்கியது எல்லாம் அந்த ராமுதான். இந்த ராமு சாப்பாட்டைத் தவிர மற்றதிலெல்லாம் எவ்வளவு சோப்பளாங்கின்னு நமக்குத் தெரியாதா?" என்றாள் ராஜி.

"அந்த ராமு இருந்தால் இந்த மார்க்கும் வாங்கியிருப்பான், இன்னும் அதிக மார்க்கும் வாங்கியிருப்பான்!" என்றேன் நான்.

எங்கள் ராமுவின் கண்களில் ஜலம் துளித்திருந்தது.

ராமுவின் பெற்றோர், நான்தான் தங்கள் பிள்ளைக்குப் பாடமெல்லாம் சொல்லிக் கொடுத்துவிட்டேன் என்று என்னைப் போற்றுகிறார்கள். எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

எது எப்படியிருந்தாலும் மனிதனுடைய சக்தியை மீறிய ஒரு சக்தியிலே இப்போது எனக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

வேறொன்றும் கூற தேவையில்லை



சிறந்த பிஸ்கோத்து

பிரிட்டானியா

AIBMA

ஒரு கூடை மாம்பழம்



கோபாலனுக்கு ஆச்சரியமாக இருந்தது. சில நிமிஷங்களுக்கு முன்னால்தான் வீட்டுக் காரியங்களை முடித்துக் கொண்டு அவனுடைய மனைவி அகிலாவும், தங்கை தங்கமும் மேல் மாடிக்குக் காற்று வாங்கப் போனார்கள்.

'காற்று வாங்க'ப் போனாலும் பேசுவதற்காகவேதான் போனார்கள். இப்போதைக்குக் கீழே இறங்கி வரமாட்டார்கள் என்று தீர்மானித்த கோபாலன் ஆபீஸ் 'ரிகார்டு' களைக் கடை பரப்பிக்கொண்டு உட்கார்ந்தான். தங்கம் வந்து இரண்டு நாட்கள் ஆவதற்குள் தன் மனைவி நாத்தனாரிடம் ஒட்டிக்கொண்டு உயிராக இருந்தது, அவனுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது.

ஆனால் மாடிக்குப் போனவர்களில் தங்கம் மட்டும் தனியாகப் பிரிந்து தடதடவென்று படி இறங்கி வந்தாள். அவள் இறங்கி வந்த வேகத்தைக் கண்டு கோபாலன், "என்ன தங்கம்! அதற்குள் திரும்பி விட்டாய்? அகிலா எங்கே?" என்று கேட்டுக்கொண்டே திரும்பிப் பார்த்தான். அகிலா வரவில்லை.

தங்கம் பதில் சொல்லாமல் 'விர்'ரென்று கூடத்து மூலைவரை சென்று குப்புறப் படுத்துக் கொண்டு தேம்பினாள்.

கோபாலன் இரண்டு இரண்டு படிகளாகத் தாண்டி மேல் மாடிக்குப் போனான். மாடியில் ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது. அகிலா வெள்ளை உள்ளம் படைத்தவள்; சிறிசு; ஏதோ அசட்டுத்தனமாக உளறி இருப்பாள் என்று எண்ணிக்கொண்டே போனான்.

"அகிலா! என்ன நடந்தது? தங்கம் ஏன் அழுகிறாள்? என்ன சமாசாரம்? நீ ஏதாவது அவள்......" என்று சற்றுப் படபடப்புடன் கேட்டான் கோபாலன்.

அகிலாவின் பிரசன்ன வதனம் சுண்டி விட்டது. இவ்வளவு நாட்கள் பழகியும் தன் குணம் இவருக்குப் புரியவில்லையே என்ற தாபமும் தாங்கலும் அவள் பார்த்த பார்வை, விட்ட பெருமூச்சு இவைகளில் முடங்கிக் கிடந்தன.

"என்ன, நீங்கள் கூட இப்படிக் கேட்கிறீர்கள்? உங்கள் தங்கையை நான் ஏதாவது சொல்லி இருப்பேன் என்று நினைக்கிறீர்கள்? பேசிக்கொண்டிருக்கும் போது 'இந்தாருங்கள்! காலையில் எங்கண்ணா என்னைப் பார்க்க வந்து இருந்தானே, அவன் சேலத்திலிருந்து வாங்கிக் கொண்டு வந்தான்' என்று கூறி, தின்னும் படி இரண்டு மல்கோவா மாம்பழங்களை அன்புடன் கொடுத்தேன். 'மாம்பழமா!' என்று கேட்டு, அதை உற்றுப் பார்த்து விட்டு, 'எனக்கு என்னமோ பண்ணுகிறது' என்று சொல்லிவிட்டுக் கீழே இறங்கிப் போய்விட்டாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆமாம்; நான் என்ன பிசகு செய்துவிட்டேன்? மாம்பழம் கொடுத்தது பிசகா? நீங்கள்தான் சொல்லுங்களேன்!" என்று அகிலா சொன்னபோது துக்கம் தொண்டையை அடைத்தது.

"அகிலா! பிசகு உன் மீது இல்லை. பிசகு எல்லாம் என்மேலும் மல்கோவா மாம்பழத்தின் மேலும்தான்! என் தங்கையை நான் ஏன் அவ்வளவு அவசரமாகச் சென்று கணவன் வீட்டிலிருந்து அழைத்து வந்தேன் என்பதற்குரிய காரணத்தை உன்னிடம் சொல்லாமற் போய்விட்டேன். முதலில் தங்கத்தைச் சமாதானப் படுத்திவிட்டுப் பிறகு வந்து விவரமாகச் சொல்லுகிறேன்" என்று கோபாலன் சொல்லி விட்டுப் படி இறங்கிப் போனான். போகும் போதே, "தங்கம்! அகிலாவுக்கு மாம்பழத்து மர்மம் எதுவுமே தெரியாது" என்று கூறிக் கொண்டே சென்றான்.

அகிலா அது என்ன 'மாம்பழத்து மர்மம்' என்று குழம்பியபடி, இறங்கிப் போவதா, இப்படியே நின்றுகொண்டிருப்பதா என்று ஒன்றும் புரியாமல் கடைப்படியில் நின்றபடி தவித்துக் கொண்டிருந்தாள்.

2

தங்கம், கோபாலனுக்கு ஒரே தங்கை. சின்ன வயதிலேயே அவர்கள் தாய் தந்தையரை இழந்து விட்டனர். இருந்தாலும்

அண்ணனின் அபரிமிதமான அன்பில் மனக் குறை இல்லாமல் வளர்ந்தாள் தங்கம்.

ஏதோ சொற்ப சம்பளத்தில் இருக்கும் தான் எப்படித் தங்கத்தை நல்ல இடமாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறோம் என்று கோபாலன் கவலைப் படும்படி கடவுள் நல்லவேளையாக வைக்கவில்லை.

தங்கத்தின் சிநேகிதி ஒருத்திக்குத் திருமணம் நடந்தது. தங்கம் அவளுடைய தோழியாக ஈடுபட்டுச் சிரிப்பும் கும்மாளமும் கொந்தளிக்க கலந்து பாடியபோது ஓர் அழகிய வாலிபனது கடைக் கண் பார்வையில் சிக்கினாள். மாப்பிள்ளைக்குத் தோழனாக வந்திருந்த இளைஞன் தங்கத்தின் அழகு, பேச்சு, பாட்டு இவைகளுக்கு அடிமை ஆனான். தங்கத்தைப் பற்றி அவன் ஜாடையாக விசாரித்த தகவல்களிலிருந்து அவளை அடுத்த முகூர்த்தத்தில் மணந்து கொள்ளாமல் அந்த ஊரை விட்டுப் போக மாட்டான்போலிருந்தது!

தங்கத்துக்கும் அவனைப் பிடித்திருந்தது. கட்டுக் குடுமி வைத்துக் கொண்டு கிராமத்து வளர்ப்பாகக் காதில் வைரக் கடுக்கன் மின்ன கம்பீரமாக இருந்தான். அவன் வந்திருந்த போது மனம் விட்டுப் பேசி அபிப்பிராயம் கேட்டது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

“தங்கம்! எனக்கு எதிர் ஜாமீன் எதுவுமே வேண்டாம். தங்கமே வரும் போது அதெல்லாம் எனக்கு எதற்கு? ஆனால் ஒன்று மட்டும் சொல்லி விடுகிறேன். எனக்கு அம்மா இருக்கிறாள். அவளுக்கு அடங்கின பிள்ளை நான். எங்களூர் பட்டிக் காடு. டூரிங் ஸினிமாக் கூட எட்டிப் பார்க்காத ஊர்!” என்றெல்லாம் அந்த மிராசுதார் பையன் சொன்னான்.

‘இவ்வளவு நல்ல இதயம் படைத்தவர் தன்னை நன்றாக வைத்துக் கொள்ளுவார். அவருக்கு அம்மா இருந்தால் என்ன? எனக்கும் தாயார் இல்லை. அவரே எனக்கும் அம்மாவாக இருந்து விட்டுப் போகட்டுமே!’ என்று தங்கம் தீர்மானித்தாள்.



ஒரு கணம் கூட அவள் யோசிக்கவில்லை. திரும்பி அண்ணாவை அர்த்த புஷ்டியுடன் பார்க்கவில்லை. ஒரே பார்வையில் “சர்வ சம்மதம்” என்று சொல்லிவிட்டாள் தங்கம்.

கோபாலன் கூட ஆச்சரியப்பட்டான். பிறந்தது முதல் பட்டணத்தைத் தவிர வேறு ஊரைப் பார்த்தறியாத தன் அருமைத் தங்கை பட்டிக் காட்டு மிராசுதாருக்கு வாழ்க்கைப்படச் சட்டென்று இஷ்டப் பட்டு விட்டாளே என்று திகைப்படைந்தான். ஆனால் எதிர் ஜாமீன் இல்லாத திருமணம் என்ற ஏற்பாடு அவனுடைய வியப்பு, திகைப்பு எல்லாவற்றையும் விரட்டி அடித்து விட்டது.

ஆடம்பரமில்லாமல் அதிக பந்துக்கள் வராமல் ஒரு நாள் கல்யாணம் நடந்தது. அடுத்த நாளே தங்கத்தை அவள் கணவன் சபேசன் கையோடு தன் ஊருக்கு அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

“தங்கம்! உன் அதிர்ஷ்டத்துக்குத் தான் கல்யாணம் ஆயிற்று. கிராமாந்திரத்துக்கு நாட்டுப் பெண்ணாகப் போகிறாய். அடக்க ஒடுக்கமாகச் சமர்த்தாக இரு!” என்று புத்திமதி சொல்லி அனுப்பினான்.


“சரி, அண்ணா!” என்று சந்தோஷத்துடன் கூறிவிட்டுத் தங்கம் தன் கணவனுடன் வண்டி ஏறினாள். அதற்குள்ளாகவே சகல பொறுப்புக்களும் வந்து விட்டது போல அவள் காணப்பட்டாள்.

3

அன்று கோபாலன் ஆபீஸிலிருந்து திரும்பி வந்தபோது மூன்று மாதங்களாக ஸ்நானம் செய்யவில்லை என்று தங்கம் எழுதியிருந்த கடிதத்தைப் படித்தான்.

“நீங்கள் போய் அழைத்துக் கொண்டு வாருங்கள். பத்து நாள் இருந்து எண்ணெய் குடித்து விட்டுப் போகட்டும்” என்று அகிலா சொன்னாள். கோபாலன் இரண்டு தினங்களுக்கு லீவு போட்டு விட்டுக் கிளம்பினான்.

அவன் போன சமயம் மாப்பிள்ளை சபேசன் ஊரில் இல்லை. மிராசுதார் மகாநாடுகூடுவது சம்பந்தமாக மாயவரம் போயிருந்தான்.



தங்கம் அருமை அண்ணனுக்கு ஆசார உபசாரம் செய்தாள். "அண்ணா!" "அண்ணா!" என்று தாங்க முடியாத குதூகலத்துடன் குதித்துக் கொண்டு வீடு பூராவும் ஓடியாடி வந்தாள்.

தங்கத்தின் மாமியாருக்கு இந்த 'விழுந்து விழுந்து' உபசாரம் பிடிக்கவில்லை. 'அண்ணனிடம் அப்படி என்ன அதிசயத்தைக் கண்டு விட்டாள்!' என்று முணு முணுத்தாள். 'கல்யாணம் செய்து கொடுத்த பிறகு ஒரு காலணாவுக்குக்கூட சீர் செய்யாத அவன் இப்போதுதான் தங்கை ஸ்நானம் செய்ய வில்லை என்று கேள்விப்பட்டு எட்டிப் பார்த்திருக்கிறான் போலிருக்கிறது. என்ன அருமை அண்ணா!' என்று அவளுக்கு இளப்பமாகப் பட்டது.

எதிர் ஜாமீன் இல்லாமல் தன் மகன் சபேசன் எங்கே இருந்தோ தங்கத்தைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தது ஆரம் பத்திலேயே அவளுக்குப் பிடிக்க வில்லை. "எங்கே கிடந்த தரித்திரமோ!" என்று உள்ளூற ஆசிர்வதிக்க அவள் தவறவில்லை.

அவளுக்கு முடக்கு வாதம்; எழுந்து அவ்வளவாக நடமாட முடியாதவள். இருந்த இடத்தில் இருந்தபடிதான் சகல அதிகாரங்களும் தான் பறக்கும். எனவே தங்கத்தை வைது தீர்ப்பதுடன் மட்டும் திருப்திக் கொண்டாள்.

ஆரம்பத்தில் தங்கம், மாமியார் என்றால் அப்படித்தான் இருப்பார் என்று நினைத்துக் கொண்டு ஒதுங்கிப் போனாள். ஆனால் கோபாலன் வந்து இருந்தபோது அவனுக்கும் கேட்கும்படி, "இந்தக் குடும்பம் அழிந்துபோக இப்படி ஒரு காட்டுப்பெண் வரவில்லையே என்று யார் தவம் கிடந்தார்கள்?" என்று சொன்னது தங்கத்துக்குப் பொறுக்கவில்லை.

அண்ணாவுக்குக் கொடுத்து அனுப்ப வேண்டும் என்று ஆசைப்பட்டு, அப்போது தான் தோட்டத்திலிருந்து பறித்துக் கொண்டு வந்த மல்கோவா மாம்பழங்களைக் கூடையில் போட்டுக் கொண்டிருந்த தங்கம் நிமிர்ந்து பார்த்தாள்.

"ஊரிலிருந்து கையை வீசிக்கொண்டு வந்திருக்கும் அண்ணனுக்கு மாம்பழம் கொடுத்து அனுப்புகிற மூஞ்சியைப் பார்!" என்று மாமியார் உறுமிக் கொண்டிருந்தாள்.

"அண்ணா! அவர் ஊரிலில்லை. 'அவர்' இருந்தால் விழுந்து அழுது 'இப்படி என் கண்ணனை அவமானப் படுத்தலாமா?' என்று கேட்பேன். நீ ஒன்றும் மனதில் வைத்துக் கொள்ளாதே. மாமியார் சுபாவம் அது" என்று கண்களில் நீர்த் துளிகள் பளபளக்கக் கூறினாள் தங்கம்.

"தங்கம்! உன்னை அழைத்துக்கொண்டு போக வந்திருக்கிறேன். சபேசன் இல்லையே என்று முதலில் தயங்கினேன். இப்போது எப்படியும் அழைத்துக்கொண்டு போய்விடுவதென்று முடிவு செய்துவிட்டேன். உனக்கு மாம்பழம் வாங்கித் தர எனக்குச் சக்தி இல்லாவிட்டாலும் அரை வயிற்றுக் கஞ்சிக்கு இருக்கிறது; புறப்படு!" என்று துள்ளினான் கோபாலன்.

முதலில் தயங்கினாள் தங்கம். மாமியாருடன் சண்டையிட்டுக் கொண்டு அண்ணனுடன் கிளம்பிவிட்டாள், சற்றுக்கூடப் பொறுப்பில்லாமல் என்று 'அவர்' நினைக்கப் போகிறாரே என்று யோசித்தாள். பிறகு மனதைக் கல்லாக்கிக்கொண்டு, "நான் அண்ணாவுடன் போய்ப் பத்து நாட்கள் இருந்து விட்டு வருகிறேன்" என்று மரியாதைக்கு மாமியாரிடம் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டாள் தங்கம்.

கூடத்தில் அந்த மாம்பழக் கூடை அப்படியே இருந்தது.

4

"தங்கம்! எழுந்திரு; என்ன இவ்வளவு அசடாக இருக்கிறாய்? அகிலா என்னத்தைக் கண்டாள்? உன் மனம் அந்த மாம்பழத்தினால் நொந்துபோய்க் கிடக்கிறது என்று அவளுக்குத் தெரியாது" என்று கோபாலன் தங்கத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தான்.

"தங்கம்! என்மேல் ஏதாவது பிசகு இருந்தால் மன்னித்துவிடு!" என்று சொல்லிக் கொண்டே அகிலாவும் அருகில் வந்தாள்.

"நான் யாரை மன்னிப்பது? என்னைத் தான் என் மாமியார் மன்னிக்க வேண்டும். வீட்டுக்குப் பெரியவராக இருக்கும் அவ

ரிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் நானாக ஒரு காரியம் செய்வது என்பது தப்புத்தானே?

"என் மாமியாரால் எழுந்து நடக்க முடியாது என்று தெரிந்திருந்தும் அவர் ஊரில் இல்லாத நேரத்தில் புறப்பட்டு வந்து விட்டேன். அவர் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்கிறாரோ? அண்ணா! நான் எண்ணெய் குடிக்க இன்னொரு தரம் சமூகமாக வருகிறேன். இப்போது என்னைக் கொண்டு போய் விட்டுவிடு. என்னை என் மாமியார் எப்படிப் படுத்தினாலும் நான் அங்கே இருக்க வேண்டியவள் தான். அவர் என்னிடம் இருக்கும் பரிபக்குவத்துக்கு முன்னால் இந்த வைதல், திட்டுதல் எதுவுமே சிறிய விஷயமாகும், அண்ணா! என்ன யோசிக்கிறாய்? உடனே என்னைக் கொண்டு போய் விட்டுவிட்டு மறு வேலை பார், அண்ணா!" என்று கெஞ்சினாள் தங்கம்.

வாசற்கதவை யாரோ தட்டினார்கள். ஓடிச் சென்று கதவைத் திறந்தான் கோபாலன். மாப்பிள்ளை சபேசன் மோட்டாரிலிருந்து இறங்கி "தங்கம்!" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தான்.

அண்ணனும் தங்கையும் பிரமித்துப் போய் நின்றார்கள்.

"...எல்லாம் கேள்விப்பட்டேன். என் அம்மாவின் சுபாவம் அது. மகாநாடு முடிந்து நான் வந்தவுடன் என் தாயார் நடந்ததை எல்லாம் சொல்லி, நான் அப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாது, அவளுடைய அண்ணா வந்த சமயம் மனம் புண்ணாகும்படி சொல்லியிருக்கக் கூடாது என்று ரொம்ப வருத்தப்பட்டாள். 'போ, உடனே போய் அழைத்து வா. அவள் இல்லாமல் வீடே வெறிச்சென்று இருக்கிறது' என்று அழமாட்டாத குறையாக மன்றாடி விட்டு இந்த மாம்பழக் கூடையையும் மனப்பூர்வமாகக் கொடுத்துவிட்டு வரச் சொன்னாள். கோபால்! என் அம்மாவுக்காக என்னை மன்னித்து விடுங்கள். அவள் சுபாவம் அது!" என்று சபேசன் கூறினான். அவன் குரலிலே கனிவு இருந்தது.

மாம்பழக் கூடை மோட்டாரில் இருந்து இறங்கிற்று. தங்கம் சுருட்டிக் கொண்டு வந்த இரண்டாம் புடவையைக்கூட எடுத்துக் கொள்ள நேரமில்லாமல் காரில் தாவி ஏறிக்கொண்டாள்.

"அண்ணா! போய்விட்டு வருகிறேன்! மன்னி! நமஸ்காரம்!" என்று நகரும் காரில் தலை நீட்டியபடி கூவினாள் அவள்.

தெரியாத ரகசியம்

கி. ரா. கோபாலன்

வீரப்பன் ஊருக்கு நல்லவன்; பரம சாது. ஊரில் அவனை 'தர்ம புத்திரன்' 'சத்திய சந்தன்' என்ற அடைமொழிப் பெயர்களால்கூட அழைக்கும் வழக்கம் உண்டு. அவனுக்கு ஒருவரும் விரோதி இல்லை. வீரப்பனைப்போல் அவன் தாயார் மிகவும் நல்ல குணமுடையவள். அவன் வீட்டு எருமை மாடு, பசுமாடு எல்லாம் நல்லவைகள்தான். ஆனால் பாவம், அவன் சந்தையிலிருந்து புதிதாக வாங்கி வந்த சேவற்கோழிதான் மிகவும் பொல்லாததாய் இருந்தது. அதுவே அந்த நல்ல குடும்பத்திற்கு இழுக்கை உண்டாக்கி விடும்போலிருந்தது.

வீரப்பன் வீட்டுச் சேவலுக்குச் சண்டையில் ஒரு தனி மோகம். சூரிய உதயமானவுடன் 'போருக்குக் கிளம்பி விட்டேன்' என்று ஊருக்கு எச்சரிக்கை செய்வது போல் கூரைமீது ஏறி நின்று நீண்ட குரல் எடுத்துக் கூவி விட்டு வீட்டை விட்டு வெளியே கிளம்பும். அந்தச் சேவல் போர்க்குணம் படைத்ததே தவிர, பார்வைக்கு அழகான சேவல். கம்பீரமான உருவம், ரத்தம் போல் சிவந்த கொண்டை, பல நிறங்களில் மினுமினு வென்று பிரகாசிக்கும் சிறகு, மேலெழுந்து வளைந்து பின்புறம் தொங்கும் வால்—எல்லாம் பார்க்க ரம்மியமா யிருக்கும். கழுத்தைத் திருப்பித் திருப்பிக் காலைத் தூக்கி வைத்துக் கம்பீரமாக அது நடந்து வரும்பொழுது ஈடு இணையற்ற பெரிய வீரனைப்போல்தா னிருக்கும். அதற்குச் சண்டையில் ஆவலிருப்பதுபோல் மேய்ச்சலிலோ வேறு எதிலோ ஆவலில்லை. பிறப்பிலேயே அது சண்டைச் சேவலாகப் பிறந்திருக்க வேண்டும். காலையில் வீட்டை விட்டு வெளியே கிளம்பினால் ஒவ்வொரு தெருவாக, ஒவ்வொரு வீடாகப் போய் அந்த வீட்டுக் கோழிகளை வம்புக்கு இழுத்துச் சண்டையிட்டு அவைகளைப் பதம் பார்த்து விட்டுத்தான் திரும்பும். அந்த ஊரிலுள்ள எல்லாக் கோழிகளையும் போரில் வென்று 'சாம்பிய'னாகத் திகழ வேண்டும் என்ற ஆசைபோலிருக்கிறது அதற்கு. அது ஏழை வீட்டுக் கோழி என்பதற்காக ஒன்றையும் இரக்கப்பட்டு விட்டு விடுவதில்லை. எல்லாவற்றையும் சம நோக்குடன் சண்டைக்கு அழைக்கும். சந்தையிலிருந்து வந்த ஒரு வாரத்திற்குள் ஊரிலுள்ள முக்கால் வாசிக் கோழிகளுடன் சண்டையிட்டுத் தோற்கடித்து வெற்றி வீரனாய்த் திகழ்ந்தது வீரப்பன் வீட்டுச் சேவல்.

தங்கள் வீட்டுக் கோழிகளின் உயிருக்கு வீரப்பனின் சேவல் அபாயம் விளைவிப்பதை அநேகர் வீரப்பனிடம் வந்து எச்சரிக்கை செய்தனர். ஒவ்வொருவரும் வீரப்பனின் நல்ல குணத்திற்கு அவன் சேவலை விட்டு வைத்திருப்பதாகவும் இல்லா விட்டால் கழுத்தை முறித்துக் காவு கொடுத்திருப்போமென்றும் சொன்னார்கள். ஒவ்வொரு நாளும் இத்தகைய புகார்களைக் கேட்பதினால் வீரப்பனும் அவனுடைய தாயும் வியாகுல மடைந்தனர். தங்கள் குடும்பத்தின் நற்பெயருக்கு இழுக்கேற்பட்டு விடுமே என்று நடுங்கினர். கூடுமான வரையில் சேவலை வீட்டை விட்டு வெளியே றவிடாமல் தடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். ஒரு பெரிய கூடைக்குள் கவிழ்த்து வைத்திருந்தனர். எவ்வளவு நேரம் மேய்ச்சலில் விடாமல் ஒரு சேவலை அடைத்து வைத்திருக்க முடியும்? நெடுநேரம் கழித்துத் திறந்து விட்டாலும் சண்டைக்குச் செல்வதுதான் அதன் முதல் குறியாக இருக்கும். ஒரு காலை நீண்ட கயிற்றில் கட்டித் தூணோடு பிணைத்து வைத்தாலும் கயிற்றை அலகால் கொத்தி அறுத்துக் கொண்டு ஓடிவிடும். என்ன செய்வான் வீரப்பன், இந்தச் சங்கடத்திற்கு? தாயாரிடம் ஒரு யோசனை சொன்னான், அதை ஒரு நாள் கொன்று ஊருக்கு விருந்து வைத்து விடலாமென்று. இது அவனுடைய தாய்க்குச் சம்மதமில்லை. அதை மறுபடியும் சந்தையிலேயே கொண்டுபோய் விற்று விடலாம் என்று அவனுடைய தாயார் சொன்னாள். வீரப்பனும் சந்தை கூடும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அடுத்த பருவத்தின்போதல்லவா சந்தை கூடும்? அதற்குள் அந்தப் பொல்லாத சேவல் இன்னும் எவ்வளவு வம்புச் சண்டைகளை உண்டாக்குமோ என்று திகிலடைந்தான். இதனால் சேவலின் சுதந்திரத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்த எண்ணினான். சேவலுக்குக் கூடைக்குள் நிரந்தரமாகச் சிறைவாசம் ஏற்பட்டது.

ஒரு நாள் கன்றுக்குட்டி ஒன்று துள்ளிக் குதித்துக் கவிழ்த்திருந்த கூடையை

சிலிர்த்தி விட்டது. சிறைப்பட்ட பெரு வீரன் ஆவேசமாக வெளியே கிளம்பியது போல், அது வரையில் உள்ளே திணறிக் கொண்டிருந்த சேவல் இறக்கையை அடித்துக் கொண்டு வெளியே ஓடியது. வீரப்பனின் தாய் அது எந்த வீட்டுக் கோழியைச் சண்டைக்கு இழுக்கப் போகிறதோ என்ற திகிலுடன் கையைப் பிசைந்து கொண்டு நின்றாள்.

***

தேவானை வீட்டுப் பெட்டைக் கோழி அவளைப் போலவே அச்சம், மடம், நாணம் முதலிய பெண்மையின் அருங்குணங்களைப் பூரணமாகக் கொண்டது. படி தாண்டியறியாத பத்தினி. இருளாண்டி வீட்டு கொண்டிச் சேவலுக்கு அதன் மீது ஒரு கண். அதாவது அந்தப் பெண்ணழகியிடம் இந்த கொண்டி ஆணழகனுக்கு எல்லையற்ற ஆசை மயக்கம். அன்று சரசசல்லாப மாட தேவானை வீட்டுப் பெட்டைக் கோழியிடம் வந்தது, இருளாண்டி வீட்டு கொண்டிச் சேவல். கொண்டிச் சேவலிடம் இயற்கையாகவே ஒரு வெறுப்பேற்பட்டிருந்தது தெய்வானை வீட்டுப் பெட்டைக் கோழிக்கு. கொண்டிச் சேவலின் ஆசை ஆட்டங்களுக்கு அது மயங்கவில்லை. அதனுடைய காதலைத் திரஸ்கரித்தது. கொண்டிச் சேவலுக்கு நிறைவேறாத மண ஆசையை அடக்கிக் கொண்டு போகத் தெரியவில்லை. பலாத்காரமான முறையைக் கைக் கொள்ள ஆரம்பித்தது. உடனே சண்டை மூண்டது. இந்தச் சமயம்தான் வீரப்பன் வீட்டுச் சேவலும் 'சண்டை போட்டு ஜெயிக்க இந்தத் தெருவில் ஏதேனும் கோழிகள் இருக்கிறதா?' என்று தேடிக் கொண்டு வடக்குத் தெருப்பக்கம் வந்தது. கொண்டிச் சேவல் தேவானை வீட்டுப் பெட்டைக் கோழியோடு சண்டை போடுவதுதான் முதலில் அதன் கண்களில் பட்டது. அதற்கு எல்லை மீறிய ஆத்திரம் ஏற்பட்டு விட்டது. பெரிய பெரிய சேவலோடெல்லாம் போரிட்டு வெற்றி கொண்ட வீரப்பனின் சேவலுக்கு இந்த கொண்டிச் சேவல் எம்மாத்திரம்? முதல் பாய்ச்சலிலேயே வெற்றி. கொண்டிச் சேவல் 'தப்பினோம் பிழைத்தோம்' என்று ஓடி விட்டது.

வீரப்பனின் சேவல் வெற்றியின் பூரிப்போடு கம்பீரமாக நின்றது. தன்னை ஆபத்தில் காப்பாற்றிய வெற்றி வீரனின் அங்க சௌந்தர்யத்தை நாணம் மிகுந்த விழிக்கோணத்தால் பார்த்துக் கொண்டு நின்றது தேவானை வீட்டுப் பெட்டைக் கோழி. சண்டையிட்ட ஆயாசத்தையும் மறந்து அந்தப் பெண்ணழகியின் உன்னத எழிலில் மயங்கி நின்றது வீரப்பனின் சேவல். கண்ணோடு கண் நோக்கியது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மனிதர்களுக்கே வாய் எழாதபோது கோழிகள் பேசவேண்டுமென்றால் முடியுமா? கண் பார்வையிலேயே காதல் கரை புரண்டோடியது.

இவ்வளவையும் வாசல் திண்ணையில் யில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தேவானை தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டாள். அப்பொழுதுதான் வயலிலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்த தேவானையின் தகப்பன் முத்தய்யன் வீரப்பனின் வீட்டுச் சேவல் தன் வீட்டு வாசலில் நிற்பதைப் பார்த்துப் பதட்டத்துடன், "அடேடே! வீரப்பன் வீட்டுச் சேவல் போலிருக்குதே! அது பொல்லாத கோழின்னு ஊரிலே சொல்லிக்கிறாங்களே! தாத்து, தாத்து!" என்றான்.

"பொல்லாதது இல்லே, அப்பா! அது நம்ப வீட்டுப் பெட்டைக்குப் புருஷனாகப் போகுது" என்றாள் தேவானை சிரித்துக் கொண்டே.

"புருஷனாகப் போகுதா! பரிசம் போடச்சே பக்கத்திலே இருந்தாப்போலே சொல்றியே?" என்று சொல்லிவிட்டு அந்தக் கோழிகளைப் பார்த்தான் முத்தய்யன். "இது நிக்கிற தினுசைப் பார்த்தா அப்படித்தான் தோணுது. ஹும்... உனக்கு நல்ல புருஷனா ஒருத்தனை இந்த ஊரிலே சல்



லை போட்டுத்தேடறேன், கிடைக்கல்லே. நம்ம வீட்டுப் பெட்டைக் கோழிக்கு நல்ல புருஷனு கிடைச்சட்டான்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே வீட்டிற்குள் சென்றான் முத்தய்யன்.

***

இப்பொழுதெல்லாம் வீரப்பன் வீட்டுச் சேவலை வீட்டில் காணுவிட்டால் தேவானை வீட்டில்தானிருக்கும்; தேவானை வீட்டுப் பெட்டைக் கோழியை வீட்டில் காணுவிட்டால் கட்டாயம் வீரப்பன் வீட்டில்தானிருக்கும். இல்லாவிட்டால் இரண்டும் சேர்ந்து ஏதாவதொரு குப்பை மேட்டில் மண்ணைக் கிளறி இரை தேடிக் கொண்டிருக்கும். அவைகளுக்குள் ஏற்பட்டு முற்றிவிட்ட தெய்வீகக் காதல் தேவானை ஒருத்திக்குத்தான் தெரியும்.

ஒரு நாள் சாயந்திரம் பொழுது சாய்ந்து இருள் சேரும் நேரம். வெளியே இரை தேடச் சென்ற தேவானைவீட்டுப் பெட்டைக் கோழி வீடு திரும்பவே இல்லை. ஆனால் தேவானைக்கு மாத்திரம் தெரியும், அது எங்கே இருக்குமென்று. காதலர் கூடினால் நேரம் போவதே தெரியாதல்லவா? தெய்வானை அதைத் தேடிக் கொண்டு வீரப்பனின் வீட்டை நோக்கி நடந்தாள்.

வீட்டு வாசற்படியில் உட்கார்ந்திருந்த வீரப்பனின் தாய் தெய்வானையைக் கண்டதும் "நீ வடக்குத் தெரு முத்தய்யன் மகதானே? எங்கேயம்மா வந்தே?" என்றாள் பரிவுடன்.

தேவானை சிரித்துக் கொண்டே "எங்க வீட்டுப் பெட்டைக் கோழி புருசன் வீட்டுக்கு வந்திருக்குது. அதை அழைச்சுக் கிட்டுப் போக வந்தேன்" என்றாள்.

"பெட்டைக் கோழி புருசன் வீட்டுக்கு வந்திருக்கா!" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள் தனசி.

"ஆமாம், அதோ பாருங்க!" என்று வீட்டிற்கு எதிரில் இருந்த மண் மேட்டைக் காட்டினாள் தேவானை. அந்த மண் மேட்டில் சேவலும் பெட்டையும் இரை தேடிக் கொண்டிருந்தன. 'கொக் கொக் கொக்கக்' என்று அவைகள் பேசும் நயன பாஷையில் ஆர்வமிருந்த ஒரு தாம்பத்யப் பரிவு இருந்தது.

தனசி ஒளி மழுங்கிய கண்களை விரித்து மண் மேட்டை நோக்கி ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு, "உங்க வீட்டுக் கோழி இங்கேதான் வந்திருக்கும் என்று தெரிஞ்சுக் கிட்டு எப்படி வந்தே?" என்றாள்.

"அதுக்கு இதுதான் புருசன் வீடுங்கிற ரகசியம் எனக்குத்தான் தெரியும். அது சரி, வீட்டுக்கு வந்த மருமகளை இப்படி கவனிக்காம இருக்கீங்களே?" என்று பரிகாசமாக அங்கலாய்த்துக் கொண்டாள் தேவானை.

தனசி ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே "சொந்தமா ஒரு மருமகளைப் பார்த்துவிட்டு ஆசை தீர இந்த உயிரை விட்டோமின்னு இல்லாட்டியும் உங்க வீட்டுப் பெட்டைக் கோழியாவது எனக்கு மருமகளாயிருந்து கொஞ்சம் குறையைத் தீர்க்கட்டும். இந்தச் சேவலுக்காவது தனக்கொரு பெண் சாதி தேடிக்கிணும்னு ஆசை இருந்ததே! என் பிள்ளையாண்டானுக்கு அது கூட இல்லே. ஊரிலே இருக்கிற பெண்களையெல்லாம் பிடிக்கல்லே என்கிறான். அவனுக்கு எந்தச் சீமையிலே யிருந்துதான் பெண்டாட்டி வரப்போகிறானோ?" என்றாள். அவளுடைய சுருங்கிய நெற்றிப் புருவங்களில் வாழ்நாளில் நிறைவேறாத ஆசையின் சோகக் குறி தென்பட்டது.

தேவானை அவளுடைய மனோவிசாரத்தை அறிந்து அனுதாபத்தோடு சமாதானம் சொல்கிறவள் போல் "கவலைப்படாதீங்கோ. உங்க மகனுக்கும் ஒரு நாள் பெண்டாட்டி வேணும்னு ஆசை தோணும். எந்தச் சீமையிலே யிருந்தாவது யாராவது ஒருத்தியை மருமகள்னு வீட்டுக்கு அழைச்சு வருவாரு. அவருக்குத் தோணாட்டியும் எந்தப் பெண்ணாவது உங்க வீட்டுக்கு மருமகளா வரணும்னு வலுவிலே வருவா. உங்க ஆயுசிலே நீங்க கட்டாயம் உங்க மருமகளைப் பார்க்கலாம்" என்று சொல்லிக் கொண்டே சேவலோடு இரை மேய்ந்து கொண்டிருந்த பெட்டைக் கோழியை விரட்ட ஆரம்பித்தாள்.

கிழவி முனகிக் கொண்டே "மகராசி, உன் வாக்கு மாரியாத்தா வரம் கொடுத்தாப்போலே இருக்கட்டும்" என்றாள்.

***

வீரப்பன் வீட்டுச் சேவல் இப்பொழுதெல்லாம் கொஞ்சம் போர்க் குணத்தை மறந்திருந்தது. ஊரிலுள்ள மற்ற கோழிகளோடு சண்டைக்குப் போவதில்லை. அதன் இயற்கைக் குணத்தை மாற்றியது தேவானை வீட்டுப் பெட்டைக் கோழியின் காதல் மகத்துவமாக இருக்கலாம். அல்லது தாம்பத்யச் சூழ்நிலையாக இருக்கலாம். ஆனால் அது வலுச் சண்டைக்குப் போகும் சுபாவத்தை விட்டு விட்டதே

தவிர, வந்த சண்டையை விட்டுவிடும் கோழைத்தனம் அதற்கு இல்லை.

இருளப்பன் வீட்டு கொண்டிச் சேவலுக்கு ஒரு நாள் வீரப்பன் வீட்டுச் சேவலிடம் பட்ட வாதனை ஞாபகத்திலிருந்தே தவிர, தேவானை வீட்டுப் பெட்டையின் மீது வைத்த மோகத்தை விட்டுவிடவில்லை. வீரப்பனின் சேவலுக்கும் அதற்கும் உள்ள தெய்வீகக் காதலையும், தாம்பத்ய உறவையும் அது கண்டதா? மறுபடியும் ஒருநாள் கொண்டிக் கொண்டே வந்து தேவானை வீட்டுப் பெட்டைக் கோழியுடன் சரச சல்லாபம் புரிய வந்தது. துரதிருஷ்டவசமாக அந்தச் சமயம் வீரப்பன் வீட்டுச் சேவல் வந்து விட்டது. வீரப்பன் வீட்டுச் சேவலுக்குக் கோபமும் ஆத்திரமும் புயல் வேகத்தில் வந்தது. கொண்டிச் சேவலைத் தாத்தித் தாத்தி அடித்தது. தன் அலகினால் அதன் தேக மெங்கும் கொத்தி ரணகளமாக்கியது. எழும்பி எழும்பிக் குதித்து கொண்டிச் சேவலின் சிறகுகளை யெல்லாம் பிய்த்து எறிந்தது. கொண்டிச் சேவல் சோர்ந்து கீழே விழுந்த பிறகுதான் 'பிழைத்துப் போ' என்ற பெருந் தன்மையோடு வீரப்பன் வீட்டுச் சேவல் அதை விட்டு விட்டு வந்தது.

அன்று சாயந்திரம் வாய்க்கால் கரையில் வீரப்பனைக் கண்ட இருளாண்டி "எய் வீரா! உன் வீட்டுச் சேவல் கோழியைப் பத்திரமாகப் பார்த்துக்க. இதோடே ரெண்டு தரம் பார்த்துட்டேன். அது இன்னிக்கு எங்க வீட்டுச் சேவலைக் கொல்லாதது தான் பாக்கி. தாத்தித் தாத்திச் சண்டை போட்டிருக்குது. இன்னொரு நாள் இப்படிப் பார்த்தேன், 'லபக்'கின்னு பிடிச்சு கழுத்தை முறிச்சுப் போட்டுடுவேன்!" என்று கோபமாக எச்சரிக்கை செய்தான்.

வீரப்பன் அவனுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தான். இருளாண்டி மூர்க்கன். ஊரில் எல்லோருக்கும் அவனிடம் பயம். அற்ப விஷயங்களுக்குக் கூடக் கொலை குத்தில் இறங்கி விடுவான். ஆனால் வீரப்பனிடம் அவன் கூட நல்லவனாக நடந்து கொண்டான். இன்னொரு தடவை தன் வீட்டுச் சேவல் இருளாண்டி வீட்டுச் சேவலோடு சண்டை போட்டால் ஏதாவது விபரீதம்தான் ஏற்படுமென்று வீரப்பன் பயந்தான். வீட்டிற்கு வந்தவுடனேயே சேவலைப் பிடித்து இரண்டு காலையும் சேர்த்துக் கட்டிப்போட்டுவிட்டு அதைக் கொண்டு போய்ச் சந்தையில் விற்கும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாளாகி விட்டது. வீரப்பன் கயிற்றை அவிழ்த்துச் சுதந்திரமாய் விடுவதாயில்லை சேவலை.

தேவானை வீட்டுப் பெட்டைக் கோழி சேவலைக் காணாமல் மனம் வாடியது. ஆகாரத்தையும் மறந்து தவித்தது. அடிக்கடி வீரப்பன் வீட்டு வாசலில் வந்து ஏங்கி நிற்கும். பரிதாபமாகக் கூவியழைக்கும். வீட்டு முற்றத்தில் இரண்டு கால்களும் மணிக் கயிற்றால் பிணைக்கப்பட்டுத் தூணோடு கட்டப்பட்டிருக்கும் சேவல், காதலியின் சோகக் குரல் கேட்டு நெஞ்சு துடிக்கப் பதில் குரல் கொடுக்கும்.

இப்படியே ஒரு வாரம் ஓடிவிட்டது. அன்று பௌர்ணமி. சந்தை கூடும் நாள். இதைத்தானே எதிர் பார்த்துக் கொண்டிருந்தான் வீரப்பன்? சேவல் கோழியின் கால் கட்டை அவிழ்த்து அதை ஒரு கூடைக்குள்ளே வைத்து மேலே ஒரு சாக்கால் மூடிக் கொண்டு சந்தைக்குக் கிளம்பினான் வீரப்பன். குளத்திற்குத் தண்ணீர் எடுக்கப் போன தேவானைக்கு அவனைக் கண்டதும் சுரீரென்றது. கூடைக்குள் அடைப்பட்டிருந்த கோழி ஈனக் குரலில் கூவியது தான் அவள் திகைப்படைந்ததற்குக் காரணம். அவனோடு இதுநாள் வரையில் அவள் பேசியதே இல்லை. இன்று எப்படியோ அவனோடு பேசும் துணிச்சல் அவளுக்கு ஏற்பட்டது. "இந்தாங்க, உங்களைத்தானே........." என்றாள் அவள் வெட்கத்துடனும் மிகுந்த கூச்சத்துடனும்.



வீரப்பன் ஆச்சர்யத்துடன் ஸ்தம்பித்து நின்றான். அவன் தோளில் வைத்திருந்த கூடையில் இருந்த சேவல் விடுதலையை வேண்டித் தள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது.

"கூடையில் என்ன வடு மாங்காயா...?" என்றாள் தேவானை கேலிப் புன்னகையுடன்.

"இல்லை—கோழி—சேவக் கோழி" என்றான் வீரப்பன்.

"சேவக் கோழியா? அதை எங்கே கொண்டு போறீங்க?" என்றாள் தேவானை, ஆச்சர்யத்துடன் தன் அழகிய கண்களை அகல விரித்து.

வீரப்பனுக்கு இந்தக் கேள்வி சற்று வியப்பாகவே இருந்தது. "சந்தைக்கு—வித்துடலாமின்னு..." என்று சொல்லிய படியே மெதுவாக நடக்க ஆரம்பித்தான் வீரப்பன்.

தேவானை அவனை விட்டுவிடுவதாக இல்லை லேசில். "சந்தைக்கா? வித்துடலாம்னு? அதை வித்துட்டா அதன் பெண்சாதிக்கு யார் பதில் சொல்லுவாங்க? துடிக்கத் துடிக்க உசிரை விட்டுடாதா?" என்றாள்.

வீரப்பனுக்கு தேவானை தன்னை வீண் வம்புக்கு இழுக்கக் கேலி செய்வது போலத்தான் தோன்றியது. இருந்தாலும் அவன் பொறுமை தளராதவன். "இதுக்குப் பெண்சாதியா!" என்று சொல்லிக் கேலியாகச் சிரித்தான்.

அவளும் கேலியாகச் சிரித்துவிட்டுத் தன் விழிகளைச் சுற்றி அவனை ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வையில் ஒரு அர்த்த டஷ்டியும், உள்ளடங்கிய எண்ணத்தினால் ஏற்பட்ட நாணமும் கலந்திருந்தது. அதை வீரப்பனால் எப்படி உணர்ந்து கொள்ள முடியும்? "எங்கள் வீட்டுப் பெட்டைக் கோழியை உங்கள் வீட்டுச் சேவல் கல்யாணம் செய்துக்கிட்டிருக்கு" என்றாள் வெட்கமும் நாணமும் பின்னிய வார்த்தைகளில், தட்டுத் தடுமாறிய வண்ணம்.

வீரப்பன் ஆச்சர்யத்தோடு "கல்யாணம் செய்துக்கிட்டிருக்கா? இந்த ரகசியம் எனக்குத் தெரியாதே!" என்றான்.

"என்ன செய்யறது? — ஒவ்வொருத்தருக்கு எவ்வளவோ ரகசியம் தெரியறதில்லே!" என்றாள் தேவானை தலையைக் குனிந்து கொண்டு. அவள் முகத்தில் குறும்பான சிரிப்பொன்று தெறித்தது. இந்தச் சமயத்தில் கூடைக்குள் திணறிக் கொண்டிருந்த சேவல் எப்படியோ தன் விடா முயற்சியினால் மேலே மூடப்பட்டிருந்த சாக்கை விலக்கிக் கொண்டு கழுத்தை வெளியே நீட்டி எட்டிப் பார்த்தது.

"ரகசியமாகக் கல்யாணம் செய்துக் கிட்டதா? எல்லாம் அதிசயமா இருக்குதே!" என்றான் வீரப்பன்.

"ஆமாம், அதிசயம்தான்! பரிசம் போடாமே தாலி கட்டாமே கொட்டு முழக்கு இல்லாமே கல்யாணம் செய்து கிட்டுதுங்க ரகசியமா. வெளியே தெரிஞ்சா உங்களுக்கு ரோசமா இருக்காதா? நாம் கல்யாணம் செய்துக்கிறதுக்கு முன்னாலே நம்ம வீட்டுச் சேவல் கல்யாணம் செய்துக் கிட்டதேன்னு .." என்று தேவானை சொல்லிக் கொண்டிருக்கும் போது, கூடையிலிருந்த சேவல் எப்படியோ வெளியே தாவிக் குதித்து ஓடத் தொடங்கியது. அது வரையில் தேவானையின் பேச்சிலும் பார்வையிலும் மதிமயங்கி இருந்த வீரப்பனுக்கு அப்பொழுதுதான் சுய உணர்வு வந்தது. "அடடே! போக்கிரிப்பயச் சேவலே!" என்று சொல்லிக் கொண்டே அதைப் பிடிக்க ஓடினான். அந்த சாகஸக்காரச் சேவலா அவன் கையில் சிக்கும்? தேவானை 'களுக்' கென்று சிரித்து விட்டு அவன் பின்னாலேயே நடந்தாள்.

கூடையிலிருந்து தப்பிய சேவல் தேவானை வீட்டை நோக்கி வேகம் தளராமல் ஓடி வந்தது. பாவம், வீரப்பனும் அதைத் தொடர்ந்து ஓடி வந்தான். தேவானை வீட்டுப் பெட்டைக் கோழி இவ்வளவு நாளும் காணாத தன் அருமைக் காதலன் தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டதும் ஆவலோடும் பரிவோடும் எதிரே ஓடி வந்து வரவேற்றது. இதைக் கண்டதும் வீரப்பன் திகைப்படைந்து நின்று விட்டான். தேவானை அவனுக்குப் பின்னால் வந்து நின்று 'கலகல' வென்று சிரித்தாள். "பார்த்தீங்களா? இவ்வளவு அன்போடும் ஆசையோடுமிருக்கிற புருஷனையும் பெண்சாதியையும் பிரிச்சுவைக்க நினைச்சீங்களே! உங்களுக்கு எவ்வளவு பாவம்?" என்றாள்.

"புருஷன் பெண்சாதியா இருக்கலாம். ஆனால் இந்தப் பொல்லாத சேவலை வீட்டிலே வைத்திருக்கிறதினாலே நான் ஊரிலே கெட்ட பெயர் எடுக்க வேண்டியிருக்குதே!" என்றான் வீரப்பன்.

"அதெல்லாம் கல்யாணமாகிறதுக்கு முன்னாடி. இப்போ எல்லாம் அதுக்குச் சண்டையிலே குறி இல்லே. பெண்சாதி மேலேதான் குறி. கோழியா இருந்தா என்ன, மனுஷனா இருந்தா என்ன? பெண் சாதின்னு ஒருத்தி வந்தாத்தான் வினை

பாட்டுப் புத்தி போய்ப் பொறப்பு எத் படுது" என்றான் வீரப்பனை ஒரு தினு சாகப் பார்த்துக் கொண்டு. அந்தப் பார்வை யிலேயே அவன் உள்ளம் முழுவதையும் அறிந்து கொண்டு விட்டவன் போல் அவளை ஆர்வத்துடன் பார்த்தான் வீரப்பன்.

சேவலும் பெட்டையும் நெருங்கி நின்று அவனிடம் மண்ணைக் கிளறி மேய்ந்து கொண்டிருந்தன. அவள் அவனைப் பார்க்க வெட்கப்படுகிறவள் போல் கோழிகளையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

இந்தக் காட்சிகளை யெல்லாம் சற்றுத் தூரத்திலிருந்து கவனித்துக்கொண்டிருந்த தேவானையின் தகப்பன் "இவனைத் தவிர நம்ப பெண்ணுக்குத் தகுந்த புருசன் இந்த ஊரிலே எவன் இருக்கான்? சீக்கிரம் பரிசம் போட வேண்டியதுதான்!" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

•••

வீரப்பன் வீட்டிற்கு வந்ததும் சந்தையில் கொண்டு போய்ச் சேவலை விற்று விட்டான் என்றுதான் அவன் தாயார் நினைத்தாள். "சேவலை அவசரப் பட்டுக் கொட்டு வித்துட்டாயா? எத்தனை ரூபாய்க்கு வித்தே?" என்றாள் படபடப்புடன்.

"சேவலை விற்கல்லே அம்மா, அது தன் பெண்சாதியோடே குலாவிக்கிட்டிருக்கு" என்றான்.

"பெண்சாதியா...? ஓகோ! அந்தத் தேவானைக் குட்டி இருக்காளே, அவ வீட்டிலே இருக்கா?" என்றாள் கிழவி பொக்கை வாய்ச் சிரிப்புடன்.

"ஆமாம்! அது சரி, அம்மா! அந்தப் பெண்ணு எப்படி? அதான் அந்த தேவானை-ல்ல குணத்தாலு?" என்றான்.

"குணத்துக்கு என்ன? தங்கமான குணம். உனக்குத்தான் இந்த ஊர் பெண்களையே பிடிக்கவில்லையே?" என்றாள்.

"இந்த ஊரிலே மத்த பெண்களைக் கண்டால்தான் எனக்குப் பிடிக்கவில்லை, அம்மா! ஆனால் தேவானையை ரொம்பப் பிடிச்சிருக்குது!" என்றான்.

தாய் சிரித்துக் கொண்டே "சரிதான், நம்ம வீட்டு கோழிக்குக் கூட இந்த ஊரிலே எந்தக் கோழியைக் கண்டாலும் பிடிக்கல்லே. தேவானை வீட்டுப் பெட்டைக் கோழியை மாத்திரம்தான் ரொம்பப் பிடிச்சிருக்குது. சரி! இன்னைக்கே நான் அந்தக் குட்டியினுடைய அப்பன் முத்தையனைக் கூப்பிட்டுப் பரிசம் எப்போ போடலாம்னு கேட்டுப்பிடறேன்!" என்றாள்.

காலக்ஷேபம்

ஓகோ!

ஒரு மாணவன்:—ஸார், கிருஷ்ணன் நான் எழுதுவதைப் பார்த்துக் காப்பி யடிக்கிறான், ஸார்!

உபாத்தியாயர்:—சரிதான்; அப்படி யானால் அவனுக்கும் மார்க் ஸைபர் தான் போடவேண்டும்!

*

குணம் தெரிந்தது!

"உங்கள் பையன் காப்பி அடிக்கடி சாப்பிடுகிறான் என்று சொன்னீர்களே, அதற்கு என்ன செய்தீர்கள்?"

"ஒரு மாதம் டாக்டரிடம் மருந்து வாங்கிக் கொடுத்தேன்."

"அப்படியா? குணம் ஏதாவது தெரிந்ததா?"

"ஆகா, தெரிந்தது. பையன் இப்போது காப்பி சாப்பிடுவதை நிறுத்தி விட்டான். ஆனால் அந்த மருந்தை விடமாட்டேன் என்கிறான்!"

*

எப்படி?

தெருவழியே போய்க் கொண்டிருந்த தம்பதிகளை ஒரு மாடு துரத்திக் கொண்டு முட்ட வந்தது. அவர்கள் பயந்து ஓடினார்கள்

மனைவி (ஓடும்போது):— நீங்கள் எனக்காக மரணத்தையும் எதிர் கொண்டு அழைப்பேன் என்றீர்களே? இப்போது மாட்டுக்குப் பயந்து ஓடு கிறீர்களே!

கணவன்:—மாட்டுக்குத்தான் உயிர் இருக்கிறதே!

*

அவர் சொன்னது!

குமாஸ்தா கோபு, தலைமைக் குமாஸ் தாவிடம் வேகமாக வந்து, "ஓய்! துரை இப்போது சொன்ன வார்த் தையை வாபஸ் வாங்கிக் கொள்ளா விட்டால் எனக்கு இந்த வேலையே வேண்டியதில்லை!" என்றான்.

"அப்படி என்ன சொல்லிவிட்டார்?"

"'வேலைக்கு வேண்டிய தில்லை' என்றுதான் சொன்னார்!"

Stanes

சிவப்பு லேபிள் கலப்பற்ற காப்பி

பிரசித்திபெற்ற ஸ்டேன்ஸ் கம்பெனியார்
தயாரிக்கும் ஓர் விலை குறைந்த ரகம்

1, 2, 3, 7, 14, 20 ராத்தல்
டின்களில் கிடைக்கும்



நற்செய்தி! ஸ்டேன்ஸ் கம்பெனியாரின் மனோகரமான சிவப்பு லேபிள் கலப்பற்ற காப்பி இப்பொழுது ஏராளமாக கிடைக்கிறது.

தாங்களே பொடி செய்ய விரும்புபவர்களுக்கு, மிகவும் ஜாக்கிரதையாக பொறுக்கி, வறுத்த ஸ்டேன்ஸ் காப்பிக் கொட்டைகளும் கிடைக்கின்றன.

தருவிக்கும் செலவின்றி இவைகளை பிரத்தியேகமாக பெறுங்கள்

சிறந்த ரக காப்பிக் கொட்டைகள், பீபெரி, தட்டை எக்ஸ்ட்ரா பொல்டுகள் 10, 30 ராத்தல் பைகளில், விலை விகிதங்களுக்கும் விவரங்களுக்கும் தி. யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூருக்கு எழுதுங்கள்.

தென் இந்தியாவின் சிறப்பு

THE PICK OF THE SOUTH

கும்பகோணத்திற்கு ஏஜண்டு:
மிஸ்டர் எம். அழகப் பிள்ளை
சொக்கன்கடை ஏஜண்ட், தபால் பெட்டி நெ. 5

திருச்சிராப்பள்ளிக்கு ஏஜண்டுகள்:
மெஸர்ஸ். ஆறுமுகம் & கம்பெனி
காரனேஷன் காட்டன் மில்ஸ், தெப்பகுளம் P.O.

கம்பர் தரும் காட்சி

[டி. கே. சி.]

300. சேனை எல்லாம் தொழ நடந்தான்!

கும்பகர்ணனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் விபீஷணன்—ராமனிடம் வந்து விட வேண்டும் என்று.

"அது முடியாது, தமயனுக்காக உயிரைக் கொடுத்து விட வேண்டியது தான்" என்று சொல்லிவிட்டு, "நடக்கிற காரியம் நடந்துதான் தீரும். நீ வருத்தப்பட வேண்டாம். ராமனிடம் நீ சீக்கிரமாகவே போய்ச் சேர்ந்துவிட வேண்டும்" என்று சொல்லியனுப்பினான் கும்பகர்ணன்.

* * *

அப்படி முடிவு சொல்லி விட்டுத் தம்பி விபீஷணனை இரண்டு கைகளாலும் எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான்.

என்(று), அவன் தன்னைமீட் டும்
  எடுத்துமார்(பு) இறுகப்புல் லி,
நின்றுநின்(று) இரங்கிஏங் கி,
  நிறைகணால் நெடிதுநோக் கி,
'இன்றொடும் தீர்ந்ததன் றே
  உடன்பிறப்(பு) என்ப(து)' என்
    றான்;
வென்றிகொள் அறத்தினா னும்
  அவன்அடித் தலத்துவீழ்ந் தான்.

[என்று: அவ்வாறு சொல்லி விட்டு; அவன் தன்னை: விபீஷணனை; மீட்டும்எடுத்து மார்பு இறுகப் புல்லி: மறுபடியும் கைகளால் எடுத்து மார்போடு அணைத்து: நின்றுநின்று இரங்கி ஏங்கி: நெடுநேரம் அப்படியே நின்றும் மிக்க துயரத்தோடு ஏங்கியும், பிறகு நின்றும் அதன் பிறகு ஏங்கியும் இவ்வாறு நேரம் கழிகிறது: நிறைகணால் நெடிது நோக்கி: விரிந்த கண்ணால் இமை கொட்டாது தம்பியைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்— பேச்சில்லை; கடைசியாக, இன்றொடுந் தீர்ந்தது அன்றே உடன்பிறப்பு என்பது என்றான்: இன்றோடு, ஆம், தீர்ந்துவிட்டது தான் உடன் பிறந்தோம் என்ற தொடர்பு என்று வாய்விட்டுச் சொன்னான். அப்படிச் சொன்ன மாத்திரத்தில்—வென்றி கொள் அறத்தினானும் அவனடித் தலத்து வீழ்ந்தான்: தர்மமே ஜெயம் என்ற கொள்கையில் உறுதியாய் நின்ற விபீஷணனும் கும்பகர்ணனது காலில் நிலைகலங்கி விழுந்தான்.

குறிப்பு: கும்பகர்ணனது பரிவையும் துயரத்தையும் வார்த்தைகளால் தெரிவிக்கிறது செய்யுள். கும்பகர்ணனது நிலையைப் பார்த்த பிறகு விபீஷணனுக்கு நிற்க முடியவில்லை. அப்படியே அண்ணன் காலில் தன் வசம் அற்று விழுந்தான், என்பது பாவம்.]

* * *

அண்ணன் காலில் விழுந்த விபீஷணன் கொஞ்சம் நிமிர்ந்து தமயனை வணங்கினான். வணங்கின நிலையில் அவனது கண்ணும், முகமும், மனமும், வாயும் வறண்டு விட்டன. உயிர் ஒடுங்கியது; உடலுமே ஒடுங்கி விட்டது.

வணங்கினான் ; வணங்கிக்கண் ணும்
  வதனமும் மனமும்வா யும்
உணங்கினான் ; உயிரோ(டு)ஆக் கை
  ஒடுங்கினான்; உரைசெய்தின் னும்
பிணங்கினால் ஆவதில் லை,
  பெயர்வன்என்று எழுந்துபோந்
    தான்!
குணங்களால் உயர்ந்தான், சேனைக்
  கடல்எலாம் கரங்கள்கூப் ப.

[உணங்கினான்: உலர்ந்து விட்டன அவனுக்கு; பிணங்கினால் ஆவதில்லை: கும்பகர்ணனோடு முரண்டுவதில் பிரயோஜனம் இல்லை; பெயர்வன் என்று எழுந்து போந்தான்: சரி, சரி. இந்த இடத்தில் இருப்பதில் பிரயோஜனம் இல்லை. தம்முடைய இடத்துக்குத் திரும்பிப் போக வேண்டியதுதான் என்று எழுந்து நடந்தான்—உத்தம குணங்களால் உயர்ந்த விபீஷணன்; சேனைக் கடலெலாம் கரங்கள் கூப்ப: விபீஷணன் நடந்து சென்ற போது நின்று கொண்டிருந்த அரக்க சேனை முழுதும் கைகளைச் சிரத்தின்மேல் குவித்து மரியாதை செய்தது.]

விபீஷணனது உயர்ந்த குணங்களைக் கும்பகர்ணன் மாத்திரம் மதித்திருந்தான் என்பதல்ல. ஜனங்களும், படைவீரர்களுமே மதித்திருந்தார்கள். ஏன், ராவணனே மதித்திருந்தான்.

விபீஷணன் எவ்வளவோ கண்டித்துப் பேசினான் ராவணனை. ராவணனுக்குக் கோபம் வரத்தான் செய்தது. கோபத்தில் சொன்னதெல்லாம் 'என் கண் முன் நில்லாதே' என்பதுதான். அவ்வளவுதான் சொல்ல முடிந்தது. தீங்கு இழைப்பதை எண்ண முடியவில்லை ராவணனுடைய மனசுக்கு.

அரசியல் விஷயம் என்று ஒன்று வந்து விட்டால் எந்தப் புண்ணிய ஆத்மாவையும் தள்ளிவிடச் செய்யும். விபீஷணனையும் அப்படித்தான் தள்ளி விட்டான் ராவணன்.

வட்ட மேஜை

★ மெகாலேயின் ஆவி!

சமீபத்தில் 'கல்கி'யில் வெளியான "பாக்தாத் சாக்கடை அல்லது மடமைக்குப் பலி" என்ற கட்டுரையை வரவேற்கிறேன். அத்துடன் அது கல்வி இலாகாவின் கண்ணிலும் பட்டுக் கொஞ்சமாவது பலன் ஏற்படவேண்டும் என்று இறைவனையும் வேண்டிக் கொள்கிறேன். ஆறறிவு மாத்திரம் படைத்த மனிதர்களால் நம் கல்வி இலாகாவைத் திருத்திவிட முடியும் என்று நம்ப இடமில்லை. அதனால் நிச்சயம் இறைவனுடைய துணையும் வேண்டும்.

இந்த வருஷம் பரீக்ஷை முடிவுகளை வெளியிடுவதற்கு முன் பம்பாய் மாகாணத்தில் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளாதிருக்கச் சில பாதுகாப்புகளை முன் ஜாக்கிரதையாகச் செய்து கொண்டார்கள். இது ஒரு விந்தையான விஷயம்.

நம் மாகாணத்திலும் பரீக்ஷை முடிவுகள் வெளிவந்த பிறகு சில மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். பதினைந்து வயது மாணவன், இன்னொரு தடவை இந்தப் புஸ்தகங்களைப் படித்துப் பரீக்ஷை எழுதுவதைவிட ரயில் தண்டவாளத்தில் தலையைக் கொடுப்பது மேல் என்ற முடிவுக்கு வர வேண்டுமானால் அவன் எவ்வளவு கொடுமைப்பட்டிருக்க வேண்டும்? இதற்குப் பொறுப்பாளிகள் இந்தக் கல்வித் திட்டத்தை வகுத்தவர்கள் மாத்திரம்தானா? அல்லது இதைப் பார்த்துக் கொண்டு பேசாமலிருக்கும் நாமும் கூடவா?

மற்ற நாடுகளிலும்தான் பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள். ஒரு பரீக்ஷையில் பெரும்பான்மையோர் தேறவில்லை என்றால், அவர்கள் உடனே பிள்ளைகளின் அறிவைச் சந்தேகிப்பதில்லை. பாடங்கள் கடினமோ, பிள்ளைகளின் அறிவுக்கு மேற்பட்டதோ, அல்லது போதனா முறை சரியில்லையோ என்றுதான் சந்தேகப்படுகிறார்கள். திருத்தவும் முற்படுகிறார்கள்.

ஆனால் நம் நாட்டில் நேர் விரோதமாக நடக்கிறது என்பது இந்த வருஷ எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை முடிவுகளைப் பார்த்தாலே விளங்கி விடும். அதில் பெரும்பான்மையோர் தேறவில்லை. தேறினவர்களிலும் சிலர் 'மாடரேஷன் போர்டு' என்ற உலகத்தின் பத்தாவது அதிசயத்தினால் கை தூக்கி விடப்பட்டவர்கள்.

இந்தப் 'போர்டி'ன் அங்கத்தினர்கள், உதகமண்டலத்தில் வருஷா வருஷம் கூடி, பரீக்ஷையில் தேறினவர்களின் எண்ணிக்கையை எந்த விதமாக அதிகப்படுத்துவது என்று மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள். 'ஆங்கிலத்தில் ஒரு மார்க்குக் குறைவு என்றால், கணக்கில் பத்து மார்க்குகள் அதிகம் வாங்கியிருக்கிறானா பார்' என்கிறார்கள். இது ரொம்பவும் வேடிக்கையான விஷயம். இப்படிப் பல வழிகளைக் கண்டு பிடிக்கும் அங்கத்தினர்கள், "ஏன் இவ்வளவு குறைவாகப் பிள்ளைகள் தேறுகிறார்கள்? ஒரு வருஷம் சொல்லிக் கொடுத்தும் இப்படி என்றால் தவறு முழுவதும் பிள்ளைகள் தலையில் ஏன் போடவேண்டும்?" என்று கேட்பதில்லை.

கல்வித் திட்டத்தின் அடிப்படையான குறைகளை ஆராய்ந்து, கல்வி இலாகாவுக்குச் சொல்வதில்லை. பாடப் புத்தகங்கள், போதனா முறை, பரீக்ஷைக் கேள்வித்தாள்கள் இவைகளெல்லாம் மாணாக்கர்களுக்குப் புரியும்படி இருந்தால்தான், அவர்கள் பரீக்ஷையில் நன்றாக எழுத முடியும் என்பதை அடியோடு மறந்து விட்டு, வெறும் மார்க்குகளைக் கட்டிக் கொண்டு அழ ஒரு கூட்டம். இது நம் நாட்டுக்கு என்றே ஏற்பட்ட பிரத்யேகமான அதிசயம் என்று நான் நினைக்கிறேன்.

எஸ். எஸ். எல். ஸி. ஆங்கில தமிழ்ப் புத்தகங்கள் வருஷா வருஷம் ஒரே மாதிரியான குறைபாடுகளுடன்தான் வெளியாகிறது. பதினைந்து வயது மாணவர்களுக்கு எப்படிப்பட்ட விஷயம் புரியும், எவை புரியாது என்பதுகூடத் தெரியாதவர்களாகப் பார்த்துப் புஸ்தகத்தைத் தொகுக்கச் சொல்கிறார்கள்.

மாணவர்களின் மனதிற்குத் தெளிவாகப் புரியும் சிறிய விஷயங்களைக் கொண்டுதான் அவர்களுடைய அறிவை விசாலப் படுத்த முடியும். அப்பொழுதுதான் அவர்களுக்கும் படிக்க ஆர்வம் இருக்கும். '35' மார்க்கு வாங்கினால் போதும் என்று சொல்லவேண்டிய அவசியமே இராது. எல்லோரும் நூற்றுக்கு நூறு மார்க்கு வேண்டுமானாலும் வாங்கி விடுவார்கள்.

இதை மறந்து, பெரிய விஷயங்களை வாழ்க்கையில் முன்னேறிப் பக்குவமடையாத சிறுவர்களின் மூளைகளுக்குள் திணிக்க முற்படுவதினால், அறிவுதான் சிதறும். மாணவர்களின் தன்னம்பிக்கை குறைந்துவிடும். வருங்கால இந்தியாவில் இளைஞர்கள் அறிவாளிகளாகவும் தன்னம்பிக்கையுடையவர்களாகவும் இருக்க வேண்டுமானால், இந்தத் தவறை நம் கல்வி இலாகா உடனே திருத்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இந்தக் கரிகுல

(Curriculam)த்தை முதன் முதலில் சிருஷ்டி செய்த லார்டு மெகாலேயின் ஆவி கூடத் துடிக்கும்.

சென்னை
30—6—50 என். எஸ். மணி.

○●○

'ரேஷ'னுக்காவது உதவும்!

சென்ற ஜூன் 12வ. இதழில் ஸ்ரீமதி ஜி. சகுந்தலா கூறுவது போல், கிறிஸ்தவ குடும்பங்களைப் போல், நம் ஹிந்து குடும்பங்கள் அதிலும் முக்கியமாக பிராமண குடும்பங்களில், பெண்கள் வருவாய்க்காக உழைப்பதை அனுமதிப்பதில்லை. இதை இழிவாய்க் கருதுகிறார்கள். இந்த மனப்பான்மை மாறினால் தான் அநேக குடும்பங்கள் உயிர் வாழ முடியும். எட்டுப் பேர்கள் அடங்கிய ஒரு பெரிய குடும்பம் ஒருவருடைய சொற்ப வருவாயினால் மூச்சுத் திணற வேண்டியிருக்கிறது! பெண்கள் சம்பாதிக்கக் கூடாது என்பதற்காக ரூபாய் ஐம்பதோ அல்லது நூறோ இதற்குள்ளேயே தங்கள் செலவுகளை ஒடுக்கிக் கொள்ளுகிறார்கள். தங்களுடைய சிறு தேவைகள்கூட நிறைவேறாமல் மனச்சோர்வடைகிறார்கள். இதனால் தங்களுக்குத் தெரிந்த எந்த வித்தையையும் பயன்படுத்திக் கொள்வதை இழிவாகக் கருதுகிறார்கள். நேர்மையாகச் செய்யும் எந்தத் தொழிலும் உயர்வானதுதானே!

தவிரவும், ஒரு குடும்பத்திலுள்ள எல்லாப் பெண்களும் ஒரு சர்க்கா வாங்கி நூல் நூற்க வேண்டியது ரொம்ப அவசியம். அது ஒரு தேகாப்பியாசமாவதுடன், நாமக்கல் கவிஞரின் "வம்பளந்து வீண் பொழுது போக்கமாட்டார் பெண்கள்" என்ற பொன்மொழிகளும் மெய்யாகும். காந்தியடிகளின் புனித ஆத்மாவும் சாந்தியடையும். இல்லாவிட்டால் வாரக் கடையில் பணமில்லாது வாங்காமல் விடவேண்டி வரும் ரேஷனுக்காவது மேற்கூறியபடி சம்பாதிக்கும் பணம் உதவாமல் போய் விடாதல்லவா?

திருப்பத்தூர்
21—6—50 பங்கஜம் முத்துசாமி

○●○

★ ஆடவர்கள் கவனிப்பார்களா?

ஸ்ரீமதி எஸ். காந்தம் ஜூலை 2வ. 'கல்கி' வட்டமேஜையில் எழுதியிருப்பதைப் படித்த ஒவ்வொரு ஆடவனும், விசனமும் அவமானமும் படாமலிருக்க முடியாது. நமது தற்கால வாலிபர்கள்—ஏன், சில முதியோர்களும் கூட—அநேக காரணங்களினால் அவர் எழுதியபடி நடக்கிறார்களென்பதில் சந்தேகமே இல்லை. இதற்கு மேனாட்டு நாகரிகம் காரணமென்று சொல்லுவது தவறு. அத்தேசங்களில் பெண்களிடத்தில் இம்மாதிரி பேடித்தனமாகவும் மரியாதையில்லாமலும் ஆடவர்கள் நடந்தால் அந்தப் பெண்மணிகளே தண்டனையளிப்பார்கள். அத்தேசங்களில் ஆண்களும் பெண்களும் பள்ளி முதல் வாழ்நாள் முழுவதும் கலந்து வித்தியாசம் காட்டாமல் நடப்பது சகஜமாக இருக்கிறது. அதனால் அவ்விடத்திலுள்ள ஆடவர்கள் பெண்களுக்கு இஷ்டமில்லாமல் தவறாக நடக்க முடியாது.

நமது தேசத்திலும் கூட ஆண், பெண் தொழிலாளர்கள் கூட்டங் கூட்டமாய் ஆலைகளிலும் சந்தைகளிலும் மற்ற இடங்களிலும் கலந்து வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களிடை ஸ்ரீமதி எஸ். காந்தம் எழுதிய பிரகாரம் நடப்பதில்லை. ஆனால் மத்திய வகுப்பைச் சேர்ந்த வாலிபர்கள்தான் இவ்வளவு மரியாதை இல்லாமல் நடந்து கொள்கிறார்கள். அவர்கள் ஆபீஸுகளிலும் மற்றப் பொது இடங்களிலும் பெண்கள் வேலை செய்வதைக் கண்டதில்லை. ஆகையால் அவர்கள் அப்படிப்பட்ட பெண்மணிகளை நல்ல குடும்பப் பெண்கள் அல்லவென்றும், கற்புள்ளவர்கள் அல்லவென்றும் எண்ணிவிடுகிறார்கள். இது தவறு என்று அவர்கள் மனதில் படவேண்டுமானால் ஒவ்வொரு தாய் தந்தையும் குடும்பத்திலுள்ள வாலிபர்களிடத்தில் இக் குற்றத்தை எடுத்துக் காட்ட வேண்டும். மேலும் ஆடவர்கள் தங்களுடைய சொந்த மகள், சகோதரி அல்லது மனைவி வெளியில் 'பஞ்சத்தின் பொருட்டுப் பொருளீட்ட'ப் போயிருக்குங்கால் வேறு ஆடவர்கள் அவர்களிடத்தில் நமது சகோதரி சொன்ன பிரகாரம் நடந்து கொண்டால், அவர்கள் மனம் எப்படிக் கொதிக்குமென்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். நமது தேசத்தில் அனாமதேயக் கடிதங்கள் பெண்களுக்கும் சர்க்காருக்கும் எழுதுவதும், அயலார் குடும்ப சமாசாரங்களைப் பற்றிப் பேசுவதும் சர்வ சாதாரண வழக்கமாக இருக்கிறது. இதை நிறுத்தப் பாடுபட வேண்டும். நமது மதத்திற்கு முற்றிலும் மாறுபட்டதென்று எடுத்துக் காட்ட வேண்டும். நம் இராமாயணத்தில் இலட்சுமணனுக்குச் சீதையின் காலில் போட்டிருக்கும் சிலம்பைத் தவிர மற்ற நகைகளின் அடையாளத்தைச் சொல்லத் தெரியவில்லையாம். ஏனெனில் அவன் 'பார்த்ததில்லை' என்று சொன்னான். அந்த உயர்ந்த கொள்கையை ஆடவர்கள் ஞாபகம் வைத்துக் கொண்டால்,

---

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25ஐ "மெகாலேயின் ஆவி!" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ என். எஸ். மணிக்கும், "ஆடவர்கள் கவனிப்பார்களா?" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ எஸ். ஆர். நாராயண ஐயருக்கும் ரூ. 12—8—0 விதம் பிரித்து வழங்கப்பட்டது.

அவர்கள் நமது சகோதரி எழுதிய குற்றங்களைச் செய்யவே மாட்டார்கள்.

இப்படி ஆடவர்கள் நடந்து கொள்வதற்கு ஸ்திரீகளும் காரணமில்லை என்று யாரும் சொல்ல முடியாது. நவநாகரிகத்தில் முற்போக்கடைந்த நம் பெண்கள் "சீதையையும், சாவித்திரியையும் நாம் ஏன் பின்பற்ற வேண்டும்?" என்றும், 'சம உரிமை, சம உரிமை' என்று ஆழ்ந்த யோசனை பண்ணாமல் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். ஆதிகாலம் தொட்டு நமது தேசத்தில் புருஷர்களை விடப் பெண்மணிகளை உயர்ந்த நிலையில்தான் நம் சாஸ்திரங்கள் வைத்திருக்கின்றன. உலகத்தில் மிக முக்கியமான அம்சங்கள் படிப்பும் பணமும்தான். இந்த இரண்டிற்கும் நமது தேசத்தில்தான் சரஸ்வதியையும் லக்ஷ்மியையும், பூஜை செய்கிறார்கள். மேலும் ஸ்திரீகளுக்கு அடக்கம், ஒழுக்கம், கற்பு முதலியவைகள்தான் ஆபரணம் என்று ஆடவர்கள் மனதில் ஆழ்ந்து அமைந்திருக்கிறது. இதை யறியாமல் பெண்கள் கலாசாலையில் படிக்கும் போதும், வெவ்வேறு இடத்தில் குடும்ப சம்ரக்ஷணைக்காக வேலை செய்யும்பொழுதும், வெளியில் போகும் பொழுதும் பழைய காலத்து ஒழுக்கங்களை விட்டுவிடுகிறார்கள். மேல்நாட்டு நாகரிகப் பிரகாரம் வயதுவந்த கல்யாணமாகாத பெண்கள் மற்ற 'ஸ்நேகித' ஆடவர்களுடன் சினிமாவுக்கும் ஆடல் பாடல்களுக்கும் சொந்த மனிதர்கள் இல்லாமல், உல்லாசமாய்ப் போகிறார்கள். கூச்சமில்லாமல் அவயவங்கள் தெரியும்படியாய்த் துணிகளை உடுத்துக் கொள்கிறார்கள்.

இந்த மாதிரி புது வழக்கங்களுள்ள பெண்களிடத்தில்தான் சில ஆடவர்கள் மரியாதை இல்லாத 'ஸ்நேகம்' வைத்துக் கொள்கிறார்கள். ஆக, இதற்கெல்லாம் பரிகாரம் பெண்கள் தெய்வபக்தியுடன் இருத்தல்தான். அவர்கள் தினமும் ஐந்து நிமிஷமாவது காலையிலும், மாலையிலும் தேவி ஸ்தோத்திரமாவது பகவத் கீதையிலிருந்து இரண்டு சுலோகமாவது படித்து வரவேண்டும். அப்போதுதான் "அவர்கள் பராசக்தியின் அவதாரம்" என்று எண்ணம் ஆடவர்களிடத்தில் யாரும் சொல்லாமலே உதிக்கும்.


கூனூர்
3—7—50 எஸ். ஆர். நாராயண ஐயர்

○●○

பகைமை வேண்டாம்!

நம் நாடு மதச்சார்பற்றது. நம் நாட்டில் எல்லா மதத்தினரும் சம உரிமையுடன் வாழ வகை உண்டு. இருந்தாலும் நம் நாட்டிலே வாழும் (முன்பு ஹிந்துவாக இருந்தவர்கள்) கிறிஸ்தவர்களின் ஒரு பகுதியினர் ஹிந்து மதத்தை எப்பொழுதுமே தாக்கி எதிர்ப் பிரசாரம் செய்கின்றனர். இவர்கள் தங்களை "கிறிஸ்தவர்களாக மாற்றும் ஒரு குழுவினர்" என்று கூறிக்கொள்கின்றனர். இவர்கள் தங்கள் மதத்தை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்திக் கூறட்டும். அதற்காக ஹிந்து மதத்தைப் பற்றி இழிவாகக் கூற வேண்டாம். ஔரங்கசீப ஹிந்துக்களைப் பூண்டோடு அழித்துவிடத் திட்டமிட்டார். கண்ட பலன் தோல்விதான். தாங்களும் ஒரு காலத்தில் ஹிந்துக்களாக இருந்தவர்கள் என்பதை மறந்தாலும் இவர்கள் இந்தியர்கள் என்பதையாவது ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். பிரசாரத் தொழிலைக் கொண்ட இவர்கள் மற்ற மதங்களைத் தாக்காமல் ஹிந்து மதத்தையே ஏன் தாக்கிப் பிரசங்கங்கள் செய்யவேண்டும்? மற்ற மதங்களைவிட ஹிந்து மதத்தைக் கவனிப்பவர்கள் கிடையாது என்ற எண்ணமோ? புனித பைபிளின் பெயரால் இச்சிறு கும்பல்கள் செய்யும் காரியங்கள் பைபிளுக்கு அல்லவா இழுக்கைக் கொண்டு வருகிறது?

சென்னை
28—6—50 ம. ரா. நடராஜன்



★

விழுப்புரம் மதுவிலக்கு அதிகாரி ஸ்ரீ ஏ. ஆர். வேங்கடராம ஐயர் அவர்கள் குமாரன் ஸ்ரீ கல்யாண சுந்தரத்துக்கும் பங்களூர் ஸ்ரீ டி. நாராயண ஐயர் அவர்களின் புதல்வி சௌ. மீனாக்ஷிக்கும் ஜூன் மீ 25உ மாயூரத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினர். வாழ்க, மணமக்கள்!

★

நரிக்காட்டு ராஜா

ஆசிரியர்: **எஸ். கோபாலன்**   மொழிபெயர்ப்பு: **எஸ். வி. எஸ்.**

21. வழக்கு ஆரம்பமாகிறது!

எட்டுக் கோட்டைப் போலீஸ் ஸ்டேஷனில் தற்சமயம் சப்-இன்ஸ்பெக்டராக இருந்தவரின் பெயரும் தாமோதரன்தான். அவருக்கு இப்போது நாற்பது வயதிருக்கலாம். சாமான்ய கல்வி ஞானத்துடன் சாதாரண போலீஸ்காரராக இந்த இலாகாவில் நுழைந்தார். குற்றவாளிகளின் துப்புத் துலக்குவதில் தம்முடைய சாமர்த்தியத்தை அப்பொழுதே காட்டியதால், காலடைவில் போலீஸ் இலாக்காவில் அவர் பதவி உயர்ந்து வந்தது. அவர் ஏட்டாக (ஹெட் கான்ஸ்டேபிளாக) இருந்த காலத்தில் எந்தக் குற்றம் வந்தாலும், அந்தக் குற்றத்தின் பொறுப்பாளியாகிய குற்றவாளி கிடைக்கவில்லை என்று சொல்லுகிற வழக்கமே கிடையாது. யாராகிலும் ஒருவர் வந்து குற்றத்துக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். தாமோதரன் அபிப்பிராயத்தில், குற்றம் செய்தவன் தான் குற்றத்துக்குப் பொறுப்பாளியாக்கப் படவேண்டும் என்பது அவசியமில்லை. ஆகவே ஊரில் எந்தக் கேஸ் வந்தாலும், பழைய குற்றவாளிகள் யார் தலையிலாவது சற்றும் தாட்சண்யம் பாராமல் பொறுப்பைக் கட்டிவிடுவார்.

அன்று எட்டுக் கோட்டை 'ஏட்'டைப் பார்த்து, "161! இந்தப் பெட்டிஷனைக் கிழித்து நெருப்பிலே போடு" என்று கத்தினார் சப்-இன்ஸ்பெக்டர்.

பழைய குப்பைக் காகிதங்களிடையில் இன்ஸ்பெக்டர் தாமோதரன் உட்கார்ந்திருந்தார். ஆம், சமீபத்தில் வரப்போகும் இன்ஸ்பெக்ஷன் (மேல் அதிகாரிகளின் பரிசீலனை) உத்தேசித்து, பழைய காகிதங்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தார்.

"இங்கே ஒரு கிழவி தன்னுடைய காதுகளை தன் மகன் அறுத்துவிட்டான் என்று குற்றம் சாட்டி எழுதியிருக்கிறாள். இதை எனக்கு முன்னிருந்த சப்-இன்ஸ்பெக்டர் சரியாகக் குறித்து வைக்கவில்லை. வேறு எந்த புஸ்தகத்திலும் இதைப்பற்றி எழுதி வைக்கவும் இல்லை. இன்ஸ்பெக்ஷனுக்கு வரும் டிப்டி சூப்ரின்டென்டின் கழுகுக் கண்களுக்குப் பட்டுவிட்டால் ஆபத்து. ஆகையால் இதையும் கிழித்து எறி" என்று ஒரு காகிதத்தை விட்டெறிந்தார்.

அதைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த 'ஏட்' 161, "பழைய இன்ஸ்பெக்டர் இதில் கையெழுத்திட்டிருக்கிறாரே. வேறு புஸ்தகம் எதிலாகிலும் இவ்வழக்கைப் பற்றி எழுதி வைத்திருக்கலாம்" என்றார்.

"நீயொரு முட்டாள்!" என்று திருப்பிக் கத்திவிட்டு "எனக்கு முன்பிருந்த மடையன் இந்தக் காகிதங்களையெல்லாம் என்றைக்காகிலும் பார்த்திருப்பான் என்று நினைக்கிறாயா? ஒருகாலும் பார்த்திருக்க மாட்டான். நான் சொல்கிறபடி கேள்" என்றார்.

ஏட் 161 சொன்னபடி கேட்டார். காகிதங்களைக் கிழித்து எறிந்து கொண்டிருந்தார்.

எட்டுக்கோட்டை போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் அறையில் உட்கார்ந்து இவ்விதம் தாமோதரனும் ஹெட்கான்ஸ்டேபிளும் சம்பாஷணை செய்துகொண்டும் பழைய காகிதங்களைக் கிழித்துக்கொண்டுமிருந்தார்கள். சப்-இன்ஸ்பெக்டர் அறைக்கு அடுத்தாற்போல் கைதிக் கூண்டு (லாக்-அப்) இருந்தது. அதில் அடைத்து வைக்கப்பட்டிருந்த திருடன் இவர்கள் செய்வதை எல்லாம் கவனித்து வந்தான்.

அவன் திடீர் என்று "நீங்கள் பழைய குற்றப் பத்திரிகைகளையெல்லாம் கிழித்து எறிந்து விட்டீர்கள் என்று டிபுடியிடம் சொல்லிவிடுகிறேன்" என்றான்.

"ஏய், 379! அவன் மண்டையைப் பிள!" என்று கூவினார் சப்-இன்ஸ்பெக்டர் இன்னொரு போலீஸ்காரரிடம். 379 நெம்பருடைய போலீஸ்காரர் கைதிக் கூண்டுக்குச் சென்று 'சத்தம் செய்யாதே' என்று சொன்னார்.

கைதி "பின் என்னை எதற்காக இங்கே அடைத்து வைத்திருக்கிறீர்கள்? நீங்கள் என்னைப் பிடித்துக் கொண்டு போக வந்த போது நான் வயலில் வேலை செய்து கொண்டிருந்தேன். என் சொந்த சாமான்களை எல்லாம் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லி அழைத்து வந்தீர்கள். அவற்றையெல்லாம் எத்தனை நாட்களாக நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! அவற்றை வாங்கிக்கொண்டு போகலாம் என்ற ஆசையோடு இங்கு வந்தால் நீங்கள் என்னைக் கைதிக் கூண்டில் அடைத்து வைத்திருக்கிறீர்கள். எப்பவும்

இப்படித் தான் செய்கிறீர்கள். நான் ஒரு குற்றமும் செய்ததில்லை. போன தடவை, நான் ஆட்டைத் திருடாதபோது, திருடிய தாகக் குற்றம் சாட்டி ஜெயிலுக்கு அனுப் பினீர்கள். போன மாசம்தான் விடுதலை யாகி வந்தேன். அதற்குள் என்னை ஒரு குற்றமுமின்றி இப்பொழுது அடைத்து வைத்திருக்கிறீர்கள்'' என்று 'ஓ'வென்று புலம்பினான்.

"வாயை மூடு! ஏய் 379! இவன் வாயை அடை! இவன் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளி வராதபடி பார்த்துக்கொள்'' என்று கத்தினார் சப்-இன்ஸ்பெக்டர்.

அந்தக் கைதி மறுபடியும் அழுதான். அழுது கொண்டே கூறினான். "நீங்க எதுக்காக என்னைப் பிடிச்சுப் போட் டிருக்கீங்க என்பது தெரியும். நீங்க எப்பவும் ஒரு பாவம் அறியாத வாயில் லாப் பூச்சிகளைத்தான் ஜெயிலுக்கு அனுப்புவது வழக்கம். அந்த வழக்கப்படி என்னைப் பிடித்துப் போட்டிருக்கீங்க! என்ன கொடுமை! உங்களுக்கு இரக்கம் கிடையாதா? உங்கள் பெண்டாட்டி பிள்ளைகள் நல்லா இருப்பாங்களா?''

"உன்னை இந்தப் போலீஸ் தடிக்குப் பலியாக்கப் போகிறேன். 379! இவனை நன்றாக 'வாங்கு' சொல்லுகிறேன்'' என்று உறுமிக்கொண்டே 379ன் மேல் ஒரு கத்தைக் காகிதத்தை வீசி எறிந்தார். 379, 'லாக் அப்'புக்கு ஓடி, கைதியின் மண்டையில் ஓங்கி அறைந்தார். பிறகு கீழே சிதறிக் கிடந்த காகிதங்களை ஒழுங் காக அடுக்கி சப்-இன்ஸ்பெக்டர் மேஜை யின்மீது வைத்தார்.

பழைய குற்ற வழக்குகளைப் பார்த் துக் கொண்டிருந்த சப்-இன்ஸ்பெக்டர் "கடவுளே! என்ன இது? இப்படி யும் நடக்கமுடியுமா? யார்மீது இந்த எப். ஐ. ஆர்? தமிழிலே ஏதோ எழுதி யிருக்கிறதே. அது என்னவென்று தெரிய வில்லையே, அதைப் படி!'' என்று 'ஏட்' டிடம் காண்பித்தார்.

ஆமாம், இப்பொழுதெல்லாம் இன்ஸ் பெக்டர் தாமோதரன் தமிழை வெகு வேகமாக மறந்து வந்தார். ஏன், அவர் சப் - இன்ஸ்பெக்டராக உயர்த்தப்பட்ட வுடன், தாம் இனி தமிழில் பேசப் போவதில்லை, எழுதப் போவதில்லை என்று சபதம் செய்து கொண்டார். ஆனால் அவர் தந்தை அந்தக் காலத்தில் ஒரு தவறு செய்து வைத்தார். தாமோ தரன் மூன்றாவது பாரம் பாஸ் செய்து நான்காவது பாரம் போவதற்குள்ளேயே வேலைக்கு அனுப்பி வைத்தார். அதனால் அவருடைய இங்கிலீஷ் ஞானமும் குறை வாக இருந்தது.

ஆகவே அவர் இங்கிலீஷில் எழுதி னாலும், கோர்ட்டில் எழுந்து நின்று பேசினாலும், அவருடைய நண்பர்களுக் கும் வக்கீல்களுக்கும் ஒரே ஹாஸ்யமாக இருக்கும். சிரித்துச் சிரித்து வயிறு வெடித்துவிடும். ஆனால் அவர் அதைப் பொருட்படுத்த மாட்டார்.

379 நெம்பர் போலீஸ்காரர் "இந்த எப். ஐ. ஆர். இருபது வருஷங்களுக்கு முன்பு நிகழ்ந்த ஒரு கேஸைப் பற்றிய தாக இருக்கிறதே?'' என்றான்.

"தமிழில் எழுதியிருக்கிறதைப் படி என்றால் ஏதோ உளறுகிறாயே. அதிகப் பிரசங்கி! அதில் எழுதியிருப்பதை அப் படியே படி! நான் படித்தது சரிதானா என்று பார்க்க வேண்டும்'' என்று இரைந்தார்.

379 படித்தார். அது பின் வருமாறு:

"ஹெட் கான்ஸ்டேபிள் 380-ம் போலீஸ் கான்ஸ்டேபிள் 395-ம், சப்-இன்ஸ்பெக்டருக்குச் சமர்ப்பிப்பதாவது.

"ஐயா, நல்ல நரிக்காட்டு நாட்டாண் மைக் காரரிடமிருந்து வந்த செய்தியின் பேரில் மாது அலையஸ் மாதவன் என்ற பிரசித்திபெற்ற குற்றவாளியைப் பிடித்து வரத் தங்களால் அனுப்பப் பட்டோம். நல்லநரிக்காட்டிலிருந்து 1–2–1925 மாலை குற்றவாளியான சிறுவனுடன் புறப்பட்டோம். நாங்கள் அவனைக் கைது செய்து, அவன் எங்கே இருந் தான், என்ன செய்து கொண்டிருந் தான் என்று கேட்டபோது, சுற்றி வளைத்து ஏதோ சொன்னானே தவிர நேரான பதில் சொல்லவில்லை. திரும்பி வருகிற வழியில், ஊர் எல்லையைத் தாண்டியதும் அவன் நரிகளால் எங்க ளிடமிருந்து விடுவிக்கப் பட்டான். பின்னர் அவன் தப்பி ஓடிவிட்டான். ஆகவே, அந்தச் சிறுவன்மீது போதிய நடவடிக்கை எடுக்கக் கோருகிறோம்.''

"சரிதான். பேஷ்! ஆகவே, எஸ். 186, 225, 225 B-யின்படி தப்பி ஓடி விட்ட சிறுவன் மீதும், அவனைக் காப் பாற்றியவர்கள் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதாக்கும்'' என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

"ஆமாம்'' என்றான் 379.

"ஆனால் அவனைக் காப்பாற்றியவர்கள் யார்? யார் விடுவித்தார்கள்? அந்தப் பகுதியை இன்னொரு தடவை படி'' என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

மறுபடியும் அவருக்குப் படித்துக் காண்பிக்கப் பட்டது.

"நான் அந்த 'நரிகள்' என்ற வார்த்தை எவனாவது ஒரு ஆளைத்தான் குறிக்க

வேண்டும் என்று கருதுகிறேன். கரிகன் என்ற கேலிப் பெயரில் எவனாவது இருந்திருக்க வேண்டும்'' என்று அபிப்பிராயப் பட்டார் தாமோதரன்.

''ஆனால் மாது எனப் படுவது யார்? அவனையல்லவா முதலில் கண்டுபிடிக்க வேண்டும்?'' என்றார் 379-ம் நெம்பர் போலீஸ்காரர்.

''ஏய் முட்டாள்! இதோ பார்! மாதவன் கங்காணி, அந்த நாட்களில் மாது என்று அழைக்கப் பட்டாராம். அது தெரியுமா உனக்கு? அவர் யார், யாரை எல்லாமோ கூப்பிட்டு விருந்து வைத்தாரே அன்று ஊர்க்காரர்கள் எல்லாம், 'மாது, மாது, என்று சொல்லப் பட்ட விஷமக்காரச் சிறுவனா இவ்வளவு பெரிய ஆளாகப் போய் விட்டான்?' என்று பேசிக்கொண்டதைக் கேட்டேன். அதனாலே, இந்தக் கேஸிலே வரும் மாது அவரைத்தான் குறிக்கிறது என்பதிலே எனக்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. மேலும், மேற்கண்ட குற்றங்களுக்காக அவர்மீது வழக்குத் தொடரத் தீர்மானித்து விட்டேன். இந்தத் திமிர் பணக்காரனுக்கு, என்னை விருந்துக்கு அழைக்காமலிருக்க வேண்டும் என்றால் எவ்வளவு துணிச்சல் இருந்திருக்க வேண்டும். அக்கிரம வழியில் சம்பாதித்த பணத்தைக் கொஞ்சம் கரைக்க வழி பண்ணுகிறேன். அப்போதுதான் புத்தி வரும்'' என்று கருவினார் சப்-இன்ஸ்பெக்டர்.

இன்ஸ்பெக்டர் தாமோதரனிடம், 'சொல்வது ஒன்று; செய்வது இன்னொன்று' என்ற வழக்கமே கிடையாது. சொன்னது சொன்னபடியே செய்துவிடுவார். மேலும் விருந்துபசாரம் போன்ற விஷயங்களில் அவமானப் படுத்தப்பட்டால், அவரால் தாங்கவே முடியாது. ஆனால் அவருக்கென்று அனுப்பப்பட்ட அழைப்பு, அவர் பெயரைக் கொண்ட இன்னொருவருக்குப் போய்ச் சேர்ந்த விஷயம் பாவம், அவருக்கு எப்படித் தெரியும்?

ஆகவே, சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரன் பழைய 380 யும், 395 யும் தேடிப் பிடிப்பதில் முனைந்தார். அவர்கள் இருவரும் போலீஸ் இலாக்காவி லிருந்து ஓய்வு பெற்றுவிட்டனர். 380-ம் நெம்பர் போலீஸ்காரர் எதிர்த்தாற் போலவே, கைக்கெட்டிய தூரத்திலிருந்தார். ஆம், அவர் ரிடையரானதும் எட்டுக் கோட்டையிலேயே போலீஸ் ஸ்டேஷன் எதிரிலேயே ஒரு பலசரக்குக் கடை வைத்து நடத்தி வந்தார். திரு 395 பால் வியாபாரம் செய்து வந்தார். அந்த ஊருக்கு வரும் ஒவ்வொரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரும் அவரிடமே தான் பால் வாங்குவது வழக்கம். ஆக, அவரும் சுலபமாகவே கிடைத்து விட்டார்.



ஒரு சில நாட்களில், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றிய பூரா விவரங்களும் தாமோதரனுக்குக் கிடைத்து விட்டன. ஆனால் அவருக்கு ஒரு சிறு ஏமாற்றம் ஏற்படத்தான் செய்தது. 'நரிகள்' என்பது ஒரு உயிருள்ள மனிதனைக் குறிக்கும் என்று நினைத்து வந்தார். அது சரியல்ல, நரிகள் என்பது நிஜ நரிகளையே குறிக்கும் என்று அறிந்ததும் ஏமாற்றமாகப் போய்விட்டது. எனினும் நரிகளின் மீதும் மாதவன் மீதும் வழக்குத் தொடர்வது கஷ்டமாக இருக்குமே என்று நினைக்கவில்லை. அவர் தீர்மானத்திலிருந்து சற்றும் வழுவவில்லை.

தாமோதரன் எந்த ஊருக்குப் போனாலும், ருசிகரமான கேஸ்களை அம்பலப் படுத்துவார் என்ற பெயர் பெற்றிருந்தார். எட்டுக் கோட்டையிலும் இருபது வருஷங்களுக்கு முன்பு ஆழத் தோண்டி, புதைத்து மூடப்பட்ட இந்த வழக்கைக் கொண்டு அந்தப் பெயரை ஸ்தாபித்து விடலாம் என்று எண்ணினார்.

22. கவலைப்படாதே!

ஒரு நாள் காலை நேரம்; மாதவன் கங்காணி இன்னும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. தூங்கிக் கொண்டுதான் இருந்தார். அவரைச் சிலர் கையைப் பிடித்து இழுக்காத குறையாக, கோர்ட்டுக்குக் கைதியைப் போல அழைத்துச் சென்றார்கள். அவருக்கு ஒன்றுமே தெரியவில்லை. 'நாம் எதற்காக அழைத்துச் செல்லப்படுகிறோம்? என்ன குற்றம் செய்து விட்டோம்?' என்று எவ்வளவோ யோசித்துப் பார்த்தார். அவருக்குப் புலப்படவே இல்லை. கடைசியில் விருந்து வைபவத்தின் போது, தாம் யாரையாகிலும் புண்படுத்தியிருக்கக் கூடும், அல்லது தமக்குத் தெரியாமல் சட்ட வரம்பை மீறி நடந்து கொண்டிருக்கக் கூடும் என்றும் அதனால்தான் கைது செய்யப்பட்டிருக்கலாம் போலும் என்று எண்ணினார்.

இவ்விதமெல்லாம் அவர் வெகு நேரம் கற்பனைசெய்து பார்க்கவேண்டிய அவசியமிருக்கவில்லை. சீக்கிரமாகவே, அவர்மீது தொடரப்பட்ட குற்றத்தை அறிவிக்கப் பட்டது. மாதவன் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

இந்தமாதிரி சமயங்களில் எட்டுக் கோட்டை வாசிகள், 'ஆதிமூலமே என முன் ஆனை முன் வந்த, நாத நாரணனைப் போன்றவர்கள். ஆபத் பாந்தவர்கள். மாதவனுக்கு உற்ற துணையாக, எட்டுக் கோட்டை வாசிகளில் பெரியவர்களாக இருந்தவர்கள் வந்து சேர்ந்தார்கள். ஒரு விநாடிகூட வீணாக்காமல், மாதவன் கட்சியை எடுத்து வழக்காட ஒரு வக்கீலை நியமித்தார்கள். எட்டுக்கோட்டை சப்-மாஜிஸ்டிரேட்டிடமிருந்து, 'பெயிலில்' மாதவனை விடுதலை செய்ய உத்தரவு வாங்கிவந்து விடுதலை செய்தார்கள்.

மாதவனுக்காக நியமிக்கப்பட்ட வக்கீலின் பெயர் ஸ்ரீ டி. எஸ். ராகவன். அவர் எந்த விஷயத்தையும், சாதாரண விஷயமாகக் கருதுபவர். அவர் சொல்லுகிற விஷயங்கள், ஆதார பூர்வமானதாக இருக்க வேண்டுமே என்ற கவலையும் எடுத்துக் கொள்பவர் அல்ல. மேலும் வழக்கில் சம்பந்தப்படாத விஷயத்தை வைத்துக் கொண்டு இரண்டு மணிநேரம் மூச்சு விடாமல் வாதாடும் திறமை அவருக்குண்டு. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில், மேல் கோர்ட்டுகளில் ஜட்ஜுகள், அவரை வாயடக்கி விடுவார்கள். ஆனால் கீழ்க் கோர்ட்டுகளில் மாஜிஸ்டிரேட்டுகள் பாவம், சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக அவரைச் சகித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால் அவருடைய மேலான குணாதிசயங்களை மாதவனுக்கு விவரமாக எடுத்துக்கூறிய பிறகுதான் நியமிக்கப்பட்டார். மாதவனும், ராகவனுடன் சில நிமிஷ நேர சம்பாஷணைக்குப் பிறகு அவரைப் பற்றிக் கூறப்பட்ட விஷயங்களுக்கு மாறுபாடான அபிப்பிராயங் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதைக் கண்டார். வழக்கு ஆரம்பமாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் மாதவனும், அவருடைய தோழர்களும் வக்கீலைப் பார்க்கப் போயிருந்தார்கள். அப்போது வக்கீல், "1—2—1945ல் இம்மாதிரி ஒரு சம்பவமும் நிகழவில்லை என்று கூறுகிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆமாம்; ஒன்றுமே நிகழவில்லை" என்றார் மாதவன்.

ஆனால் அதற்குள் மாதவனுக்குத் துணையாக வந்த ஒருவர், வக்கீலின் கையிலிருந்த குற்றப் பத்திரிகையைப் பார்த்து விட்டு, "இதில் கொடுக்கப் பட்டிருக்கும் தேதி 1—2—1945 அல்ல; 1—2—1925. இங்கே தயவு செய்து பாருங்கள்" என்று சுட்டிக் காட்டினார்.

இப்படிக் கூறியவர், எட்டுக் கோட்டையில் 'லா பாயிண்ட் ரகுநாதன்' என்று பிரசித்தி பெற்றவர்.

வக்கீல் டி. எஸ். ராகவன் "அது தவறு என்று நினைக்கிறேன். 1-2-1945-ஆகத்தான் இருக்க வேண்டும். 1—2—1925 என்பது நம்ப முடியாத அளவுக்குப் பண்டைக் காலமாகி விடுகிறது" என்றார்.

திரு 'லா பாயிண்ட்' விடவில்லை. "இதோ பாருங்கள். சர்க்கார் தரப்பு சாட்சிகள், இந்த வழக்கு 1925 வருஷத்தியதாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்து விடுகின்றனர். எனக்கு அந்தப் பழைய ஹெட் கான்ஸ்டேபிள் 380 ஐயும், போலீஸ்காரர் 395 யும் நன்றாகத் தெரியும். அவர்கள் இருவரும் வெகு நாட்களுக்கு முன் ரிடையரானார்கள். ஆகவே, இந்தச் சம்பவம், அவர்கள் இருவரும் வேலையிலிருந்தபோது தான் நிகழ்ந்திருக்க வேண்டும்" என்றார்.


"அப்படியானால் இது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. நம்பவே முடியவில்லை" என்றார் ராகவன். பிறகு மாதவனைப் பார்த்து, "ஆகவே இதில் குறிக்கப் பட்டிருக்கும் தேதி சரியான தேதிதான் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படியானால் இந்த மாதிரி சம்பவம் இருபது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்திருக்கிறதா என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?" என்றார்.

மாதவன், இருபது வருஷங்களுக்கு முன் தாம் சிறுவனாக இருந்தபோது, தம்மை இரண்டு போலீஸ்காரர்கள் பிடித்துச் சென்றதும், அவர்களை நரிகள் சூழ்ந்து கொண்டு விரட்டியதையும் வெகு சுருக்கமாகச் சொன்னார். வக்கீல் ராகவன் அவர் கூறியதை ரொம்பவும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டார்.

சாதாரணமாக வக்கீல் ராகவன் தம்மிடம் வரும் புதுக் கட்சிக்காரர்களிடம் ஏறத்தாழ அவர்கள் கொண்டு வந்த வழக்கு மாதிரியே ஒரு வழக்கு சில நாட்களுக்கு முன் அவரிடம் வந்ததாகவும், அந்த வழக்கில் தாம் எப்படியெல்லாம் வாதாடி ஜெயித்தார் என்பதையும் பிரமாதமாகச் சொல்லிக் கொள்வார். ஆனால் இந்த வழக்கைப் போன்ற விசித்திர வழக்கை இதுவரை தம் வாழ்வில் பார்த்ததில்லை என்று ஒப்புக் கொள்ள வேண்டியதாகிவிட்டது.

ஆயினும் அவர் "சர்க்கார் இந்த வழக்கு இப்பொழுது ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த வழக்குக் காரணமாக இருப்பவர்கள் யார்? சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரனுக்கு இந்த வழக்கை இப்பொழுது கிளறி விடுவதில் என்ன சிரத்தை?" என்றெல்லாம் கேட்டார்.

லாபாயிண்ட் ரகுநாதன் எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறினார். ஏனெனில் சற்று நேரத்துக்கு முன்தான் ஹெட் கான்ஸ்டேபிள் 380 யும், போலீஸ்காரர் 395 யும் சந்தித்துப் பேசிவிட்டு வந்திருந்தார். அதிலிருந்து மாதவன் நடத்திய விருந்துக்கு, சப் இன்ஸ்பெக்டரை அழைக்கவில்லையல்லவா? அதுதான் இன்ஸ்பெக்டர் தாமோதரனுக்குக் கோபம் என்பதையும் சொல்லி விட்டார்.



அணுகுண்டு:—என்ன மிஸ்டர் ஹைட்ரஜன்! கொரியாவிலே யுத்தம் ஆரம்பித்திருக்கிறார்களாமே! பத்திரிகை படித்துக் கொண்டு வருகிறீர்களே, இந்த யுத்தத்திலே நமக்கு ஏதாவது 'சான்ஸ்' இருக்கும் என்று தெரிகிறதா?

"அப்படியா? அப்போது நம் வழக்கு ஜயித்து விட்டது என்றுதான் அர்த்தம். அந்தப் பித்துகுளி கோர்ட்டில் கைதிக் கூண்டில் ஏறியவுடன் அவரைத் தவிடு பொடியாக்கிவிட மாட்டேனா?" என்றார் வக்கீல் ராகவன்.

"ஆமாம்; நீங்கள் அவரைத் தவிடு பொடியாக்கி விடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் 1—2—1925 அன்று நிகழ்ந்த சம்பவத்தையும் தவிடுபொடியாக்க வேண்டுமே? அல்லது அது நிகழ்ந்தது என்று ஒத்துக் கொள்ளப் போகிறீர்களா, என்ன?" என்றார் லா பாயிண்ட் ரகுநாதன்.

"நாம் எதையுமே ஒத்துக் கொள்ள முடியாது. சர்க்கார் ஒத்துக்கொள்ளும் விஷயத்தைக் குறை சொல்லவும் குற்றம் சொல்லவும்தான் நாம் இருக்கிறோம். இந்த விஷயங்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். என்னிடம் விட்டு விடுங்கள். நான் வழக்கை ஆதியிலிருந்து அந்தம் வரை புரிந்துகொண்டு விட்டேன். மாதவன் ஸார், இனி நீங்கள் வீட்டுக்குப் போய் நிம்மதியாகத் தூங்கலாம்" என்றார் வக்கீல் ராகவன். (அடுத்த இதழில் முடியும்)

குறி தப்பியது!

டி. ஜி. பத்நஸ்வாமி

பஞ்சாபகேசன் குடிபுகுந்த இடத்தின் மகத்துவமோ என்னவோ அதிர்ஷ்டம் அவனைச் சுற்றி மொய்க்க ஆரம்பித்து விட்டதாகவே சொல்ல வேண்டும். பூலோகத்தில் பிறந்திருக்கக் கூடாத அந்தப் பெண்ணின் தரிசனம் அவனுக்குக் கிடைத்து விட்டது. அது மட்டுமில்லை; அவனைப் பார்க்கும்போதெல்லாம் அவள் புன்னகை புரிவது போல் தோன்றிற்று!

குடி வந்த அன்றுகூடச் சுற்றுப்புறங்களில் யார் யார் வசிக்கிறார்கள் என்பதைக் குறித்து அவன் தெரிந்து கொள்ளவில்லை. மறுநாள் காலை பொழுது விடிந்தவுடன் தெருப்பக்கத்தை நோக்கி யிருந்த ஜன்னலின் கதவைத் திறந்தபோதுதான் பிரமித்துப் போனான். எதிர்வீட்டின் மாடியிலும் ஜன்னல் கதவு திறந்திருந்தது!

ஜன்னல் திறந்திருப்பதற்கும் ஸ்தம்பித்துப் போவதற்கும் என்ன சம்பந்தமோ என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா? முழுமதியைப் பழிக்கும் முகார விந்தம், கானாற்று வெள்ளம்போல் சுழித்துச் சுழித்துப் புரளும் கூந்தல் என்று கதைகளில் வரும் கதாநாயகிகளின் வர்ணனைக்கு ஒப்ப, அழகு வாய்ந்த பெண் ஒருத்தி அந்த ஜன்னலில் தோன்றினாள்.

ஆனால் அந்த அழகிக்குத்தான் கொஞ்சமும் கருணையிராதுபோல் தோன்றியது. பஞ்சாபகேசன் ஒரு விநாடி அவளைக் கூர்ந்து பார்ப்பதற்குள் அவள் ஜன்னலின் கதவைப் 'படாரென்று' சாத்திக் கொண்டு விட்டாள். அவனுக்கும் பெண்கள் சம்பந்தப்பட்ட முதல் அநுபவம் அதுதான். ஆகையால் அவன் பயந்து விட்டான். தான் பார்த்ததை அவள் தவறாக எடுத்துக் கொண்டிருப்பாளோ என்ற சந்தேகம் அவனை வாட்டி வதைத்தது.

அதையும் சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிந்து கொள்ளுவதற்காக மறுநாளும் அதே நேரத்திற்குச் சிறிது முன்னதாகவே பஞ்சாபகேசன் தன் ஆராய்ச்சியைத் தொடங்கினான்.



அவன் எதிர் பார்த்தபடியே எதிர் வீட்டுப் பெண் ஜன்னலில் உட்கார்ந்திருந்தாள். ஜன்னலின் கதவைத் திறந்ததுமே மூடிவிடலாமா என்று அவன் ஒரு கணம் தயங்கினான். ஆனால் அவள் எழுந்து செல்லாமல் உட்கார்ந்திருக்கவே, அவனும் பரிசோதனையில் தீவிரமாக இறங்கத் துணிந்து விட்டான். 'ஷேவிங் ஸெட்' சகிதம் வந்து ஜன்னலின் முன் அமர்ந்து தன் வேலையை ஆரம்பித்தான். முகத்தில் 'ஸோப்பை'த் தடவி நுரையைக் கிளப்பி விட்டுக் கொண்டு ஜாடையாக அவளை நோக்கினான். அவளும் கண் கொட்டாமல் அவனுடைய 'திறமையை' அளவிடுவது போல் தென்பட்டாள்.

'ஷேவிங்' முடியும் வரை பாராதவன் மாதிரி இருந்துவிட்டு, அப்புறம் தலையை நிமிர்த்தினான் பஞ்சாபகேசன். உடனே அவனுடைய உடல் முழுவதிலும் ரோமாஞ்சலி உண்டாயிற்று. உலகம் இயற்கையை மீறின வேகத்துடன் சுழலுவதாக உணர்ந்தான் அவன்.

அன்று முதல் பஞ்சாபகேசனின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம் உதயமாகி விட்டதாக அவன் கருதினான். அவனுடைய வாழ்வுக் கதையிலும் ஒரு கதாநாயகி குறுக்கிட்டு விட்டதால், இனிமேல் தானே உணர்ச்சிகளைத் தூண்டும் சம்பவங்கள் நடக்க வேண்டும்? அவனும் அதைத்தான் எதிர்பார்த்தான்.

அதற்கு அடுத்த நாள் பஞ்சாபகேசன் அவளைப் பார்க்க நேரிட்ட பொழுது அவளுடைய முகத்தில் ஏற்பட்டிருந்த கவலைக் குறிகள் அவன் இருதயத்தைப் பிளந்து விட்டன. அத்தனை அழகான பெண்மணிக்கும் வருத்தம் உண்டாகலாமா? அதை நினைக்கும்போது அவனுக்குத் தெய்வத்தின் மீது கூடச் சிறிது கோபம் பிறந்தது. வல்லான் வகுத்து விட்ட விதியை மாற்ற யாரால் முடியும்? மாற்ற முடியா விட்டாலாவது போகட்டும்; அவளுக்கு ஆறுதல் கூறி வருத்தத்தை நீக்கலா மல்லவா?

வர வர 'ஆபீஸ்' வேலைகளில் பஞ்சாபகேசனின் கவனம் குறைந்ததை எல்லோரும் கண்டு பிடிக்க ஆரம்பித்து விட்டார்கள். எதிர் வீட்டுப் பெண்ணைக் கண்டதிலிருந்து அவன் மனத்தில் புயல் வீசுவது யாருக்குத் தெரியப் போகிறது?



கேவலம் ஒரு பெண்ணின் துயரை மாற்ற முடியாதவன் வாழ்ந்துதான் என்ன பிரயோஜனம்? அவள் மட்டும் சம்மதித்து விட்டால் கல்யாணம் செய்து கொண்டு ஏன் இன்ப வெள்ளத்தில் மூழ்கக்கூடாது? அவளுடைய அழகிற்காக ஆயிரம் கோமகவரர்கள் போட்டிக்கு வந்திருந்தாலும் பஞ்சாபகேசன் ஆக்ஷேபித்திருக்க மாட்டான். அவளுடைய அழகு ஒன்றுதான் அவன் லட்சியம்!

இடையிலும் ஒரு நாள் பஞ்சாபகேசன் அவளைச் சந்திக்க முடியாமற் போய் விட்டது. பாழாய்ப்போகிற ஆபீஸ் காரியார்த்தமாக அவன் வெளியூர் சென்றிருந்தான். அன்று முழுவதிலும் அவன் பட்ட அவஸ்தையைக் கணக்கிடுவதற்கில்லை. அப்படியே வேதனைப் பட்டுக் கொண்டிருந்தால் மனோரதம் எப்படி நிறைவேறும்? துணிச்சலுடன் போய்க் கேட்டு விடுவதற்கும் அவனுக்குத் தைரியம் போதவில்லை. வாஸ்தவத்தில் அவளை மணந்து கொள்ள அவளுக்கு விருப்பமிருந்த போதிலும் பெண்களுக்குரிய சுபாவ குணத்தால் ஏதேனும் சாக்குப் போக்குகள் சொல்லி அனுப்பி விட்டால் அந்த அதிர்ச்சியை அவனால் தாங்கிக் கொள்ள முடியாது. அதனால்தான் நம்பகமான வேறு வழிகளைத் தேடி அவன் சிந்தனைச் சேற்றில் தடுமாறிக் கொண்டிருந்தான்.

பஞ்சாபகேசன் காலை எட்டு மணிக்குப் புறப்பட்டு ஆபீஸுக்குச் சென்றால் சாப்பாட்டை முடித்துக் கொண்டு இரவு ஒன்பது மணிக்குத்தான் திரும்பி வருவான். அதற்கிடையில் எதைப் பற்றியும் யோசிக்க அவகாசம் கிடைக்காதபடி வரிசைக் கிரமமாக வேலைகள் வளர்ந்து கொண்டிருக்கும். தன்னுடைய 'சொந்த விஷயங்களைக் குறித்துப் பிறரை ஆலோசனை கேட்பதும் அவனுக்குப் புத்திசாலித்தனமாகப்படவில்லை. ஆகையால் இரவு பூராவும் உட்கார்ந்து நாவல்களைப் புரட்டத் தொடங்கினான். சில கதாநாயகர்கள் நேரடியாக கதாநாயகிகளைக் கேட்டு விடுகிறார்கள். வேறு சிலர் கடிதங்களின் மூலம் அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொள்ளுகிறார்கள். இரண்டிலும் கடிதம் எழுதும் முறைதான் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் எழுதிய கடிதத்தை எப்படி அவளிடம் கொடுப்பது என்ற பிரச்னை அவன் விஷயத்தில் எழத்தான் செய்தது. எப்படியும் நன்றாக யோசித்து முடிவு கட்ட வேண்டிய விஷயம்தானே, அது?

வழியொன்றும் புலப்படாமல் வீடு திரும்பினான் பஞ்சாபகேசன். வரும் போதே எதிர்வீட்டின் அமைப்பையும் நன்றாகப் பார்த்துக் கொண்டான். கதவு சாத்தியபடி இருந்தது; வெளிச்சம் கொஞ்சங்கூடத் தென்படவில்லை. புதிதாக யாரேனும் வந்தால் எதிர்வீட்டில் யாரும் இல்லை என்றே நினைத்துக் கொள்ளுவார்கள். ஆகையால் எதிர் வீட்டில் அந்தப் பெண்ணைத்தவிர வேறு மனிதர்களே இருக்க முடியாது என்று அவன் எண்ணினான். கடிதத்தைத் தபால் மூலம் சேர்ப்பிப்பதும் அபாயகரமான பாதையாகத் தோன்றவில்லை. ஆனால் தபாலில் அனுப்புவது அவ்வளவு நாகரிகமான காரியமில்லை, அல்லவா?

மனதைப் பலவாறு குழப்பிக் கொண்டே படுத்திருந்த சமயத்தில்தான் பஞ்சாபகேசனுக்குச் சரியான யுக்தி தோன்றியது. அது வரை—அதாவது எதிர் வீட்டு அழகியைப் பார்த்த ஆறு நாட்களாக—அவன் படித்து முடித்திருந்த இருபது சொச்சம் நாவல்களின் சாராம்சத்தைத் திரட்டி எழுதி வைத்திருந்த கடிதத்தை ஒரு சிறு கல்லுடன் சேர்த்துக் கட்டி எதிர் வீட்டு மாடியில் எறிந்து விட்டால் சிரமம் தீர்ந்ததல்லவா? அவனுடைய திட்டப்படி மாத்திரம் செய்து முடித்து விட்டால்......!

எதிர் வீட்டுப் பெண்ணுக்கும் தனக்கும் கல்யாணம் நடப்பதாக சொப்பனம் கண்டு பஞ்சாபகேசன் விழித்துக் கொண்ட போது நன்றாகப் பொழுது விடிந்து விட்டிருந்தது. இரவில் எதிர் வீட்டு மாடியில் விட்டெறிந்த கடிதம் அந்தப் பெண்ணின் கையில் கிடைத்திருக்குமா என்பதை அறிய அவனுடைய உள்ளம் துடி துடித்துக் கொண்டிருந்தது.



ஒருவர் :—குபேரனுடைய பணம் உனக்கு இருந்தால் நீ என்ன பண்ணுவாய் ?

மற்றவர் :—அதைப் பற்றி நான் யோசிக்கவில்லை. என்னுடைய பணம் குபேரனுக்கு இருந்தால், பாவம், அவன் என்ன பண்ணுவான் என்றுதான் யோசிக்கிறேன் !

சாயங்காலம் சீக்கிரமாகவே தன் அறைக்குத் திரும்பி விட்டான் பஞ்சாபகேசன். அவன் வந்தவுடன் வீட்டின் கீழ்ப் பாகத்தில் குடியிருந்தவர், யாரோ அவனைத் தேடியதாகவும், ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருப்பதாகவும் கூறியதைக் கேட்டவுடன் அவனுடைய முகம் வெளுத்துப் போய்விட்டது. குற்றுயிரான நிலையில் கடிதத்தை எடுத்துக் கொண்டு மாடிக்கு ஓடினான் அவன். பதட்டத்துடன் கடிதத்தைப் படித்த பிறகு அவன் முகம் மலர்ந்து விட்டது; மனத்தில் சந்தோஷம் தலைகால் தெரியாமல் வளர்ந்தது.

எதிர் வீட்டுப் பெண்ணுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை என்பது பஞ்சாபகேசனுடைய லட்சிய வெற்றியின் முதல் படி. அவள் அவனுக்காக ஏங்கி வருந்துவதையும் மறைக்கவில்லை. விரைவில் அவன் அவளுடைய துணைவன் ஆகாவிடில் அவளால் உயிர் வாழ்ந்திருக்க முடியாது என்கிற விஷயத்தையும் ஸ்பஷ்டமாக எழுதியிருந்தாள். அவனை மணப்பதற்காக பேச்சு நடத்த மறுநாள் இரவு ஒன்பது மணிக்கு மேல் அவளைச் சந்திக்குமாறு தன் வீட்டுக்கு அழைத்திருந்தாள்.

சமீபகாலத்தில் பஞ்சாபகேசனிடம் அவ்வளவு குதூகலத்தை யாரும் கண்டிருக்க முடியாது. வினாடிக் கணக்கில் எதிர் வீட்டுப் பெண் குறிப்பிட்டிருந்த 'மறுநாள் இரவை' அவன் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்......

எட்டே முக்கால் மணி ஆனவுடன் பஞ்சாபகேசன் எதிர் வீட்டு வாசலில் நின்றான். ஆனால் வழக்கம்போல் கதவுகள் எல்லாம் சார்த்தப்பட்டே இருந்ததைப் பார்த்ததும் அவன் மனத்தில் சிறிது சஞ்சலம் ஏற்பட்டது. 'வந்தது வரட்டும்' என்கிற மனோபாவத்தில் மெதுவாகக் கதவைத் தள்ளினான்; அது திறந்து கொண்டு விட்டது. பூனைபோல் சத்தம் செய்யாமல் உள்ளே சென்றான். எங்கும் விளக்கு இல்லாததால் இருட்டாகவே இருந்தது. தைரியத்தைக் கைவிடாமல் அவன் மாடிப் படியைக் கண்டு பிடித்து ஏறினான்.

மாடியில் அந்த அழகி உட்கார்ந்திருந்தாள்; ஆனால் அவளுடன் வேறொருவனும் தென்பட்டான். பஞ்சாபகேசனுக்கு மேலே நடக்க மனம் வரவில்லை. கூட இருப்பவன் யாராக இருக்கலாம்? தயங்கிய வண்ணம் அவன் நின்று விட்டான்.

"உங்களைத்தானே?" என்று அந்தப் பெண் கூப்பிடவும் பஞ்சாபகேசன் திடுக்கிட்டான். நல்ல வேளையாக அவள் அவனைப் பார்த்து விடவில்லை. அவன் இருட்டில் பதுங்கிக் கொண்டான்.

"எதிர் வீட்டுக்கு வந்திருக்கிறதே, ஒரு கோட்டான் அதை நீங்கள் விரட்டப் போகிறீர்களா, நான் பிறந்தகத்திற்குப் போய்க் கொஞ்ச நாட்கள் இருந்து விட்டு வரட்டுமா?" என்று கேட்டாள் அவள் அவனிடம்.

பஞ்சாபகேசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சரியான ஆபத்தில் மாட்டிக் கொண்டோம் என்பதில் அவனுக்குச் சற்றும் சந்தேகமிருக்கவில்லை.


"என்ன பேசாமல் உட்கார்ந்திருக்கிறீர்களே!" என்று அதட்டினாள் அவள்.


பதிலுக்கு அலட்சியமாக அவன் சிரித்தான். "இன்னும் சிறிது நேரத்தில் நடக்கப்போகிறதையெல்லாம் நீயும் பாரேன்" என்றான்.

அதற்குள் பஞ்சாபகேசனின் உடம்பு முழுவதிலும் வியர்த்துக் கொட்டிற்று. வந்தது போலவே கீழே இறங்கி அவன் தன்னுடைய அறைக்குள் நுழைந்தான். பெரிய அபாயத்திலிருந்து காப்பாற்றி விட்டதற்காகத் தெய்வத்தை இப்பொழுது அவனால் வாயார வாழ்த்தாமல் இருக்க முடியவில்லை.

விசேஷ சலுகை விற்பனை!


எமது வாடிக்கைக்காரர்களுக்காகவே, மிகவும் குறைந்த விலையில் புத்தம் புதிய ஸ்விஸ் லீவர் கடிகாரங்களை சமீபத்தில் தருவித்துள்ளோம். 15, 17 ஜுவல் கெடிகாரங்களுள் 5 வருஷமும், மற்றவை 3 வருஷமும் உத்தரவாதம் கொண்டது. ஒவ்வொரு கடிகாரத்துடனும் உத்திரவாதப் பத்திரம், ஒரு ஸ்டிராப், ஒரு வெல்வெட் பெட்டி இவைகள் இலவசமாக அளிக்கப்படும். விற்பனை வரி, பாக்கிங், தபால் செலவுகள் இன்றி கெடிகாரங்களை வி. பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம்.






இலவசப் பரிசுகள்

ஒரே பாக்கிங்கில் இரண்டு கடிகாரங்களை ஆர்டர் செய்பவர்களுக்கு இரண்டு செல் ப்ளாஸ்டிக் அமெரிக்கன் டார்ச் லைட் கிடைக்கும். அதேபோல், ஏதாவது 3 கடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு ஒரு பாக்கெட் வாட்சும் 4 கெடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு ஒரு ஆபீஸ் டேபிள் க்ளாக்கும் கிடைக்கும்.




கர்வெக்ஸ் - சைஸ் 8¾

				ரூ.
594	க்ரோம் ஸ்டீல்பேக்	15	ஜுவல்	48
595	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	ஜுவல்	53
596	20 மைக்ரோன் தங்கம்	15	ஜுவல்	58
597	க்ரோம் ஸ்டீல்பேக்	17	ஜுவல்	58
598	ரோ. கோ. ஸ்டீல் பேக்	17	ஜுவல்	63
599	20 மைக்ரோன் தங்கம்	17	ஜுவல்	68
642	ஆல் ப்ரூப் முழு ஸ்டீல்	17	ஜுவல்	98




சென்டர் செகண்டு சைஸ் 8¾

531	க்ரோம் ஸ்டீல்பேக்	5	ஜுவல்	30
532	ரோ. கோ. ஸ்டீல்பேக்	5	ஜுவல்	33
533	முழு ரோல்டு கோல்டு	5	ஜுவல்	36
534	க்ரோம் ஸ்டீல்பேக்	7	ஜுவல்	34
535	ரோ. கோ. ஸ்டீல்பேக்	7	ஜுவல்	37
536	முழு ரோல்டு கோல்டு	7	ஜுவல்	40
585	க்ரோம் ஸ்டீல்பேக்	15	ஜுவல்	59
586	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	ஜுவல்	64
587	20 மைக்ரோன் தங்கம்	15	ஜுவல்	74




லேடீஸ் - சைஸ் 5¼

648	க்ரோம் ஸ்டீல்பேக்	5	ஜுவல்	39
649	ரோ. கோ. ஸ்டீல்பேக்	5	ஜுவல்	42
650	முழு ரோல்டு கோல்டு	5	ஜுவல்	45
651	க்ரோம் ஸ்டீல்பேக்	7	ஜுவல்	42
652	ரோ. கோ. ஸ்டீல்பேக்	7	ஜுவல்	45
653	முழு ரோல்டு கோல்டு	7	ஜுவல்	48
667	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	ஜுவல்	61
669	ரோ. கோ. ஸ்டீல்பேக்	17	ஜுவல்	66
670	பூரண 9 கா. தங்க கேஸ்	15	ஜுவல்	98
671	பூரண 18 கா. தங்க கேஸ்	15	ஜுவல்	118




வாட்டர் ப்ரூப் ரேடியம் டயல் சென்டர் செகண்ட் - சைஸ் 10½

				ரூ.
629	க்ரோம் ஸ்டீல்பேக்	15	ஜுவல்	59
630	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	ஜுவல்	66
631	20 மைக்ரோன் தங்கம்	15	ஜுவல்	72
632	ஆல் ப்ரூப் தட்டை வடிவம் க்ரோம் ஸ்டீல்பேக்	17	ஜுவல்	79
633	ஆல் ப்ரூப் தட்டை வடிவம் ரோ. கோ. ஸ்டீல்பேக்	17	ஜுவல்	85



டனோ - சைஸ் 6¾


543	க்ரோம் ஸ்டீல்பேக்	5	ஜுவல்	37
544	ரோ. கோ. ஸ்டீல்பேக்	5	ஜுவல்	40
545	முழு ரோல்டு கோல்டு	5	ஜுவல்	43
546	க்ரோம் ஸ்டீல்பேக்	7	ஜுவல்	41
547	ரோ. கோ. ஸ்டீல்பேக்	7	ஜுவல்	44
548	முழு ரோல்டு கோல்டு	7	ஜுவல்	47
616	க்ரோம் ஸ்டீல்பேக்	15	ஜுவல்	52
617	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	ஜுவல்	57
619	20 மைக்ரோன் தங்கம்	15	ஜுவல்	67



மேஜை அலாரம் டேபிள் கடிகாரம் (நெ. 684)

681	ஆபீஸ் டேபிள் க்ளாக், சதுர வடிவம், நவீன டயல் முழு க்ரோம் டயல 3½''	20
682	அலாரம் டேபிள் க்ளாக், டயல் 4''	19
683	அலாரம் டேபிள் க்ளாக், முழு க்ரோம் கேஸ், ரேடியம் டயல், சைஸ் 4''	21
684	மேஜை அலாரம் டேபிள் க்ளாக் நவீன ரேடியம் டயல், சைஸ் 2½''	35

SWISS WATCH CO, 23, Sadashiv Lane, Post Box No 3552, BOMBAY-4





எக்ஸிமா

சரும வியாதிகளுக்கு, முக்கியமாக எக்ஸிமாவுக்கு ஸைமாக்ஸ் மிகவும் சிறந்தது. சருமத்தின்மேல் ஏற்படும் எரிச்சலை மாயமாய்ப் போக்குகிறது. சருமத்தை இயற்கை நிறத்துக்கும் தன்மைக்கும் கொண்டு வருகிறது. என்றும் ஒரு பாட்டில் உங்கள் வசம் இருக்கட்டும்




ZIMAX

AN ECZEMA CURE

தந்த சுகாதாரம்

சொத்தையான பற்கள் சீரண தேக ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றன. தைமோஸின் பற்களையும் ஈறுகளையும் பாதுகாருங்கள். பயோரியா ஜின்ஜிவிடிஸ் நோய்களையும் சுவாசத்தில் துர் நாற்றத்தையும் தவிர்க்கிறது. உங்கள் குடும்பத்துக்கு மிக அவசியமானது தைமோஸின்



THYMOCIN

FOR DENTAL HYGEINE

டி. எம். தாகூர் & கோ., 9, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, ஜி. டி., மதராஸ்

பார்லி வாட்டரும், கஞ்சியும் இவ்விதம் சுலபமாகத் தயாரிக்கலாம்



பார்லி வாட்டர்: பியூரிடி பார்லி இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு எடுத்துக்கொண்டு சிறிது ஜலம் சேர்த்துக் கலந்து ஒரு பைன்ட் ஜலம் விட்டு ஐந்து நிமிஷம் கொதிக்கவிடவும். பிறகு ருசிக்குத் தக்கபடி உப்பு சர்க்கரை அல்லது எலுமிச்சம்பழ ரஸம் சேர்க்கவும்.

கஞ்சி: இதை வழக்கம்போலத் தயாரிக்கவும். ஆனால் தயாரிக்க இருபது நிமிஷ நேரம் தான் ஆகும். ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி எட்டு ஸ்பூன் சாதாரண பார்லி அரிசிக்குச் சமம் என்பது ஞாபகமிருக்கட்டும்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

AP 52-7 TAM.

சூலியோ டி. டி. டி. கூந்தல் தைலம்

தலையில் ஏற்படும் கிருமிகளை அறவே ஒழிக்கிறது



நறுமணத்துடன் பிசுக்கற்ற வகையில் உபயோகத்திற்கு உகந்தவாறு, கிருமிகளைக் கொல்லுமளவுக்கு டி. டி. டி. யைக் கலந்து முறைப்படி சூலியோ கூந்தல் தைலம் தயாரிக்கப்பட்டுள்ளது.



சூலியோவை ஒருமுறை உபயோகித்தவுடனே பேனும் அதைச் சார்ந்த முட்டைகளும் அறவே மடிகின்றன.



மற்றுமொருமுறை உபயோகிப்பதனால் தலையிலேற்படும் கிருமிகள் மீண்டும் அணுகாமல் பாதுகாக்கிறது. அழகிய கூந்தலுக்கு எவ்வித ஹானியும் சூலியோ விளைவிக்காது.



SULEO D.D.T. *Hair Emulsion*

தலையிலேற்படும் சகல கிருமிகளையும் அறவே அகற்றுகிறது

வியாபார விவரங்களுக்கு:

ஜியாப்ரே மானர்ஸ் & கம்பெனி லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் கண்டு பிடிக்கப் பட்டதிலிருந்து இனி யாரும் — எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டிகள் ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும் உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்மினால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அசயமாக வைத்துக் கொண்டு, பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் கொடுக்காதீர்கள்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் கண்டு உபயோகித்த இதரக் களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவிக் கொள்ளும்போது ஒரு பவுடரைப் போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தைத் தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைத் தாக்கிக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷங்களில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக, மிருதுவாகப் பட்டுப்போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் வேறெதையும்விட சீக்கிரமாக வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சல், ஆகியவற்றை சில நிமிஷங்களில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளுங்கள், தேடிய சஞ்சீவி — நாடிய வைத்தியம் கிடைத்ததை உணருவீர்கள். நிக்ஸோடெர்ம் ஆயிரக்




BEFORE AFTER

கணக்கானவர்களுடைய சருமத்தைச் சுத்தமாக்கி புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R.K. கூறுகிறார்: "பன்னிரண்டு வருஷங்களாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் உபயோகித்தேன். 10 நிமிஷங்களில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்ட என் நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."


திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாக சுத்தமாகாதவரை நிக்ஸோடெர்ம் மதிப்பை இழக்கிறது. இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப் படுவீர்கள். மேலும் ஒரு வாரத்திற்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் அதன் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, நீங்கள் கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கு உறுதி.



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Pres
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madra

கல்கி



KALKI ஜூலை 16, 1950 4 அண

REGD. No. M. 4392.

